# பாரதிதாசரொடு



# பல ஆண்டுகள்

சுந்தர சண்முகனார்

# பாரதிதாசரோடு
# பல ஆண்டுகள்

ஆசிரியர்:
புதுப்படைப்புக் கலைஞர், ஆராய்ச்சி அறிஞர்
முனைவர் சுந்தர சண்முகனார்
புதுச்சேரி-11.

வெளியீடு:
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
38, வேங்கட நகர்
புதுச்சேரி-11

உரிமை: சுந்தர சண்முகனார்
ஏப்ரல் 1987

பாரதிதாசனாரின் 97 ஆவது பிறந்தநாள் விழாவை யொட்டிப் புதுச்சேரி மையப் பல்கலைக் கழகம் 30—4-1987 ஆம் நாள் நடத்திய கருத்தரங்கு விழாவில் இந்நூல் வெளியிடப்பெற்றது.

கிடைக்கும் இடங்கள்:
புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்,
38, வேங்கடநகர், புதுச்சேரி-605 011.
&
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
79, பிரகாசம் சாலை, சென்னை-108.

**விலை ரூ.** 12-00

அச்சகம்:
கே.பி.டி. இண்டஸ்ட்ரி,
அண்ணாமலைநகர் 608 002.

# 1

## ஆசிரியர் முன்னுரை

1968 ஆம் ஆண்டு சனவரி முதல் பத்து நாள் சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு யானும் ஒரு பேராளனாகச் சென்றிருந்தேன். மாநாட்டுக் கருத்தரங்கிற்கு ஒரு ஞாயிற்றுக் கிழமை விடுமுறை விடப்பட்டிருந்தது.

அந்த ஞாயிறு விடுமுறையில், சென்னை லிங்கி செட்டி தெருவில் உள்ள மறைமலையடிகள் நூல் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். அந்நிலையம், சென்னை-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் மேலாட்சியில் உள்ளதாகும் நான் நூல் நிலையத்திற்குச் சென்றபோது, அங்கே, கழக ஆட்சியாளர் வ.சுப்பையா பிள்ளை, தேவ நேயப்பாவாணர், செக்கோஸ்லோவாகியாத் தமிழறிஞர் கமல் சுவலபேல் முதலியோர் இருக்கக் கண்டேண.

உரையாடலுக்கிடையே, சுப்பையா பிள்ளை என்னை நோக்கி, ‘உங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதிக்கொடுங்கள்-நாங்கள் வெளியிடுகின்றோம்’ என்று கூறினார்.

'என்ன-கிண்டலா செய்கிறீர்கள்? தன் வரலாறு எழுதும் அளவுக்கு யான் பெரியவனாகி விட்டேனா?' என்று நான் அவரைக் கேட்டேன். அதற்கு அவர், 'உங்கள் வரலாற்றை எழுதினால், நீங்கள் பழகிய திருப்பாதிரிப் புலியூர் ஞானி யார் அடிகளார், பாரதி தாசன் முதலியோரைப் பற்றிய குறிப்புகள் எல்லாம் வருமே-அவற்றைப் பலரும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமே- அதற்காகத்தான் உங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதச் சொல்கிறேன்'-என்று கூறி னார்.

இஃது இருக்க, ஏன் நீங்கள் பாரதிதாசனைப் பற்றி ஒன்றும் நூல் எழுதவில்லை? என்று உள்ளூரிலும் வெளி யூர்களிலும் உள்ள பலர் என்னைக் கேட்கின்றனர். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் உயர்திரு டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் அவர் களும் அவ்வாறு என்னைக் கேட்டவர்களுள் ஒருவராவார். ஆனால், யான் பாரதிதாசனாரைப் பற்றி நூல் எழுதும் முயற்சியை மேற்கொள்ளாமலேயே இருந்தேன். இந்நிலை யில், இச்சிறு நூலை எழுத எனக்கு ஒரு தூண்டுகோல் கிடைத்தது.

இந்த ஆண்டு பாரதி தாசனாரின் 97 ஆவது பிறந்த நாள் விழாவைப் புதுச்சேரி மையப் பல்கலைக்கழகம் நடத்துகிறது. விழாக் கருத்தரங்கில் என்னையும் கட்டுரை படிக்கும்படி மையப் பல்கலைக்கழகம் பணித்துள்ளது. அதற்காகக் கட்டுரை எழுதத் தொடங்கினேன். அப்போது இப்படி ஓர் எண்ணம் ஏற்பட்டது: அதாவது, பாரதிதாச னாரோடு நாம் பல ஆண்டுகள் பழகியுள்ளதை அடிப் படையாக வைத்துப் 'பாரதி தாசரொடு பல ஆண்டுகள்' என்னும் பெயரில் ஒரு சிறு நூலே எழுதிவிடவேண்டும் என்னும் எண்ணம் தோன்றியது. அதன் பயனே இந்நூல் வெளியீடாகும்.

எனவே, இந்நூல் எழுந்ததற்குத் தோன்றாத் துணைக் காரணமானவர்-தூண்டுகோலாயிருந்தவர் புதுவை மையப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு டாக்டர் கி.வேங்கட சுப்பிரமணியனார் அவர்களே. முதற்கண் அவர்கட்கு என் நன்றியைச் செலுத்துகிறேன். இது தற் செயலான தூண்டுதலாகும்.

பாரதிதாசனாரைப் பற்றிப் பலர் பல கோணங்களில் பல நூல்கள் எழுதியுள்ளனர். வாய்ப்பு நேருங்கால் யானும் ஓர் ஆய்வுநூல் எழுதி வெளியிட விரும்புகிறேன்.

இந்த நூல் எழுதியது-அச்சிட்டது-எல்லாம் இரண்டு வாரக் குறுகிய காலத்திற்குள்ளேயாம். நூலை நன்முறை யில் விரைந்து அச்சிட்டுத் தந்த அண்ணாமலைநகர் கே.பி.டி. அச்சகத்தாருக்கு என் அன்பு கலந்த நன்றி உரிய தாகும்.

இந்த நூலுக்குப் போதிய ஆதரவு அளிக்கும் வண் ணம், பல ஊர்களிலும் உள்ள கல்வித்துறையினரைக் கேட் டுக் கொள்கிறேன்.

நூலை இந்த விழாவில் வெளியிட ஏற்பாடு செய்தமைக் காகத் துணைவேந்தர் அவர்கட்கு மீண்டும் ஒருமுறை நன்றி செலுத்துகிறேன்.

வணக்கம்

— சுந்தர சண்முகன்

# 2

# முதல் அறிமுகம்

தஞ்சையை அடுத்த திருவையாற்றில் உள்ள அரசர் கல்லூரியில் யான் தமிழ் வித்துவான் பட்டப் படிப்பு படித்தேன். படிப்பு நான்கு ஆண்டு; நான் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோது அகவை பதினாறு; ஆண்டு 1938.

கட்டடம் மூன்றடுக்கு அரண்மனை; சரபோசி மன்னர் கட்டியது. மேல் இரண்டுமாடிகளில் வகுப்புகள் நடை பெறும். கீழ்க்கட்டு மாணாக்கர் விடுதி. ஒரு நாள் காலை விடுதியில் என் அறையில் யான் படித்துக்கொண்டிருந்த போது, ‘பாரதி தாசன் பாட்டு–பாரதி தாசன் பாட்டு' என்ற ஒலி வெளியிலே கேட்டது.

விடுதிக்கு நாளேடுகளும் திங்கள் ஏடுகளும் வரும். அவற்றுள் ஒன்று பெரியாரின் ‘விடுதலை’என்னும் நாளேடு. அந்த ஏட்டில் அன்றைக்குப் பாரதிதாசனின் இந்தி எதிர்ப் புப் பாடல்கள் இடம்பெற்றிருந்தன. அந்தப் பாடல்களைச் சில மாணாக்கர்கள் படித்துவிட்டு, பலர்க்கும் தெரியும்படி

பாரதிதாசன் பாட்டு என்று உரக்கக் கூறிக் கொண்டிருந் தனர்.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள், அப்போது தாம் இந்த கட்சியாட்சியின் முதலமைச்சராகப் பணி புரிந்து கொண்டிருந்தார். தம் கட்சியின் கொள்கைப்படி இந் தியைத் தமிழ் நாட்டில் கட்டாயப் பாட மாக்கினார். அதை எதிர்த்த இயக்க நிகழ்ச்சிகளுள் ஒன்றுதான் பாரதி தாசனின் இந்தி எதிர்ப்புப் பாடல்களாகும்.

"எப்பக்கம் வந்து புகுந்து விடும்-இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டி வரும்"-

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – நம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

ன்னும் பாடல் பகுதி விடுதலையில் வந்ததாக எனக்கு னைவு இருக்கிறது.

கோடை விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தபோது, ன் அண்ணனின் சட்டகர் பழநியாண்டி முதலியார் என் வர் ஒரு நாள் எங்கள் வீட்டிற்கு வந்தார். வந்தவர், ரதி தாசனைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொன் ார். வந்தவர் கைலி வியாபாரி யாயிற்றே-இவர் ஏன் விஞரைப் பார்க்க வேண்டும் என்று எண்ணிய நான், ர்த்தகாரணம் என்ன? என்று கேட்டுவிட்டேன். அதற்கு வர், 'பாரதிதாசன் எங்கள் உறவினர்-குடும்பம் தொடர் ரகப் பேசி விட்டு வந்தேன்' என்று கூறினார். ஓகோ, ரதிதாசன் நம் அண்ணனின் சட்டகருக்கு உறவினரா ன்று வியப்படைந்தேன்.

# 8

பின்பு ஒரு நாள், புதுவைக் காமாட்சியம்மன் கோயில் தெருவில் இருந்த பழமலை என்னும் என் உறவினருடன் சென்று பாரதிதாசனைப் பார்த்துவிட்டு வந்தேன். இதன் பிறகு நீண்ட 'பசிபிக்' இடைவெளிக்குப் பின்னரே கவிஞருடைய தொடர்பு ஏற்பட்டது.

1940 ஆம் ஆண்டு என் பதினெட்டாம் அகவையின் இறுதியில் படிப்பு முடித்து வித்துவான் பட்டம் பெற்றேன். அடுத்த சில திங்களில் - சூலைத் திங்கள் முதல் நாளன்று மயிலம் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளர் பதவியில் அமர்ந்து யான் பணியாற்றிக்கொண் டிருந்தேன்.

1942 ஆம் ஆண்டுக் கோடை விடுமுறையில் யான் புதுச்சேரியில் தங்கியிருந்தபோது, பாரதிதாசனோடு ஒரு நேர்காணல் (சந்திப்பு) நிகழ்ந்தது.

அந்த விடுமுறைக் காலத்தில், புதுச்சேரியில் நன்( செயல்பட்டு வந்த 'இளைஞர் கழகம்' (Young Men Association) என்னும் நிறுவனம், சென்னையில் பேராசிரி ராகப் பணி புரிந்த முத்து இராசாக் கண்ணனார் அவ களைப் புதுச்சேரிக்கு அழைத்து வந்து தங்கச் செய் பெரிய புராணம் பற்றித் தொடர் சொற்பொழிவு நிகழ்த் ஏற்பாடு செய்திருந்தது. நல்ல கூட்டம் - இராசாக் கண்ண னார் சொல்வன்மை மிக்கவராதலின் மிகுந்த புக பெற்றார். ஆனால், பாரதிதாசன் 'சுயமரியாதை' இய கத்தைச் சேர்ந்திருந்ததால், பெரிய புராணச் சொ பொழிவு நிகழ்த்திக்கொண்டிருந்த இராசாக் கண்ணனா வெறுத்தார். அந்தச் சொற்பொழிவிற்கு நாடோறு சென்று கொண்டிருந்த என்னையும் அவருக்குப் பிடிக் கவில்லை போலும்!

# 9

இது இப்படி இருக்க, புதுச்சேரி உப்பளம் பகுதியினர் 'பாரதியார் கழகம்' என்னும் ஒரு நிறுவனம் தொடங்கினர். அதன் திறப்பு விழா, ஒரு நாள் காலையில் முத்து இராசாக் கண்ணனார் தலைமையில் நடை பெற்றது. ஆசிரியர் மு.த. வேலாயுதனார் காலைச் சொற்பொழி வாளர். மாலையில் பாரதிதாசன் தலைமையில் என்னைப் பேசச் செய்தார்கள். நீண்ட நாட்கட்குப் பிறகு அப்போது தான் யான் பாரதிதாசனைப் பார்க்கும் வாய்ப்பு பெற் றேன். யான் சொற்பொழிவாற்றி முடித்தேன்.

இறுதியாகப் பாரதிதாசன் நிறைவுரை யாற்றத் தொடங்கினார். இராசாக் கண்ணனாரைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். பெரிய புராணத்தில் வரும் இயற் பகை நாயனார் தம் மனைவியை அடியார்க்குக் கொடுத் ததாக வரலாறு, இராசாக்கண்ணு இயற்பகை நாயனார் பற்றிப் பேசினானே – இவன் தன் மனைவியை அடியார் என்ற பெயரில் யாராவது வந்து கேட்டால் தருவானா? என்று கவிஞர் தாக்கிப் பேசினார். என்னையும் கிண்டல் செய்து தாக்கிப் பேசினார். யாராவது அளவு மீறிப் போனால், உடனே எழுந்து மறுத்துப் பேசுபவன் நான். என் பக்கத்தில் அமர்ந்திருந்த வேலாயுதனாரிடம், பாரதி தாசனை நான் எழுந்து மறுத்துப் பேசப்போகிறேன் என்று சொல்லித் துடித்தேன். வேலாயுதனார் என்னைத் தடுத்து அமைதி கொள்ளச் செய்தார்.

அப்போது சுத்தானந்த பாரதியார் புதுச்சேரி – அர விந்த ஆசிரமத்தில் நெடுநாளாகத் தங்கியிருந்தார். சுத்தா னந்தர் தம்மைக் கவியோகி சுத்தானந்த பாரதியார் என் னும் பெயரால் குறிப்பிட்டுக்கொண்டிருந்தார். பாரதி தாசன் அந்தப் பெயரைப் பிடித்துகொண்டார். சிலர் தங்கள் பெயருக்கு முன்னால் யோகி என்று போட்டுக்

கொள்வர் – பின்னால் ஆனந்தர் என்னும் சொல்லையும் சேர்த்துக்கொள்வர் – மேலும் பெருமை கருதிப் பாரதி யார் என்றும் சொல்லிக் கொள்வர் – என்றெல்லாம் கூறிச் சுத்தானந்த பாரதியாரை 'வாரு வாரு' என்று வாரினார்.

கூட்டம் முடிந்தபின், கையிழுப்பு வண்டிகள் (ரிக்ஷாக் கள்) காத்திருந்தன. ஒவ்வொரு வண்டியிலும் இருவர் அமரலாம். பாரதிதாசன் ஒரு வண்டியில் அமர்ந்து கொண்டு என்னை அழைத்து ஏறிக்கொள்ளுங்கள் என்று தம் பக்கத்து இடத்தைக் காட்டினார். சிறு வயதின னாகையால், கருத்து வேற்றுமையைப் பொருட்படுத்தா திருக்க முடியாதவனாய், அவர் பக்கத்தில் அமர மறுத்து வேறு வண்டியில் ஏறிக்கொண்டேன்.

நடந்தனவெல்லாம் நான் மறுநாள் இராசாக்கண்ண னாரிடம் அறிவித்தேன். அவர் வாய் பேசாது கண்ணை மூடிக் கொண்டு ஏதோ எண்ணத்தில் ஆழ்ந்து விட்டார். இராசாக் கண்ணனார் என்பவரை இரண்டாவது பாரதி தாசன் என்று கூறலாம். கவிஞரை விட இவர் மிகவும் கடுமையானவர்; முன் சிற்றக்காரர்; எவரையும் கடுமை யாகத் தாக்கிப் பேசி விடுவார்; முரடர், அஞ்சா நெஞ்சத் தினர். தமிழ்ப் பேராசிரியர் அனைவருக்கும் இது தெரியும். ஆனால், அப்பேர்ப்பட்ட இராசாக் கண்ணனாரே, அடுத்த நாள் பேச்சில் பாரதி தாசனுக்கு எந்த மறுப்பும் கூற வில்லை; பேசாது அடங்கிவிட்டார். இது பெரிய வியப்பு! பாரதி தாசனைவிடக் கடுமையான தோற்றமும் வன்மை யான வெடிக் குரலும் உடைய இராசாக் கண்ணனாரே பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டாரென்றால், வியப் படையாமல் என்ன செய்வது! அந்த அளவுக்குப் பாரதி தாசனுக்கு ஓட்டம் ஓடியது.

## இனப்பற்று இன்மை:

பாரதிதாசனும் இராசாக் கண்ணனாரும் யானும் (சுந்தர சண்முகம்) ஒரே இனத்தவர்-செங்குந்த முதலியார் மரபினர் - அப்படி இப்படி தொட்டுப் பார்த்தால் தூரத்து உறவும் இருக்கும். இது பாரதிதாசனுக்கு நன்றாகத் தெரியும், அப்படியிருந்தும், இனப்பற்று காரணமாகவோ உறவுகாரணமாகவோ எந்தப்பற்று பாசமும் இரக்கமும் காட்டாமல், சொற்பொழிவில் 'கொல்லு -கொல்லு' என்று எங்களைக் கொன்று விட்டார்.

இராசாக் கண்ணனார் எப்படி யானாரோ! ஆனால் யான்மட்டும் அன்று தொடங்கிப் பாரதிதாசன்மேல் பகையுணர்வு கொண்டுவிட்டேன். இதன் பின் விளைவு ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன்:

## காரிருளில் மின்னல்:

1942 - கோடை விடுமுறையில் பாரதி தாசனோடு இந்தப் பிணக்கு ஏற்பட்டது. விடுமுறை முடிந்ததும் மயிலம் தமிழ்க் கல்லூரிக்குப் பணியாற்றச் சென்றேன். காலையில் கல்லூரியில் வகுப்பு தொடங்குவற்கு முன்பு, ஆசிரியர்களும் மாணாக்கர்களும் ஓரிடத்தில் வரிசையாக நின்று கூட்டுக் குழு வழி பாட்டுப் பாடல்கள் பாடிய பின்னரே வகுப்புக்குச் செல்வது வழக்கம்.

குழு வழிபாட்டில் முதலில் கடவுள் வணக்கப்பாடலும் அடுத்துத் தமிழ் வாழ்த்துப் பாடலும் பாடப்பெறும். நாடோறும் ஒரே பாடல் இன்றி வேறு வேறுபாடல் பாடப் படும். தமிழ் வாழ்த்தாகச் சுப்பிரமணிய பாரதியார் பாடல்கள், சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயப் பாடல்

கள், கவியரசு வேங்கடாசலம் பிள்ளையின் பாடல்கள் முதலியவை மாறி மாறிப் பாடப்படும். மாணாக்கர் இருவர் பாடுவர். முதல் நாள் மாலையே, மறுநாள் காலை பாடப் போகும் பாடல்களை என்னிடம் அறிவித்து ஒப்புதல் பெறவேண்டும். அவ்வாறு தணிக்கை செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட் டிருந்தது.

இந்த நிலையில், சில நாட்களில், பாரதிதாசனின் தமிழ் வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்கு என்னிடம் ஒப்புதல் கேட்பர். 'அவன் பாடலைப் பாடக் கூடாது – அவன் நாத்திகன் – அவன் பாடலைப் பாடவே கூடாது' என்று கண்டிப்பாக நான் மறுத்து விடுவது வழக்கம்.

ஒரு நாள் சொற்பொழிவிற்காக நான் வெளியூர் சென்றிருந்தேன்; மறுநாள் காலை வகுப்பு தொடங்குவதற்கு முன் வந்து சேர வேண்டும் எனக் குறிவைத்து விரைவாகக் கல்லூரிக்கு வந்துவிட்டேன். நான் கல்லூரிக்குள் நுழையும் போது குழு வழிபாடு நடந்துகொண்டிருந்தது. பாடல்கள் என்னால் தணிக்கை செய்யப்படவில்லை. நான் வந்தபோது இறை வணக்கப்பாடல் பாடிக்கொண்டிருந்தனர்; அடுத்துத் தமிழ் வாழ்த்துப் பாடல் பாடினர். அந்தத் தமிழ் வாழ்த்துப் பாடலைக் கேட்டதும் யான் மெய்ம் மறந்து போனேன்; மயிர்க்கூச்செறிந்து மகிழ்ச்சியில் திளைத்தேன் அந்தப் பாடல், பாவேந்தர் பாரதிதாசனார் இயற்றியதும், இப்போது புதுவை மாநில அரசால் இறைவணக்கப்பாடலாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுக் கூட்டங்களில் பாடப்படுவது மாகிய 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்று தொடங்கும் பாடல்தான். அப்பாடல் முழுதும் வருமாறு:-

“வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே
வீரரின் வீரமும் வெற்றியும் நீயே

தாழ்ந்திடும் நிலையினில் உனைவிடுப் பேனோ
தமிழன் எந்நாளும் தலைகுனி வேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீ; உயிர் நான் மறப்பேனோ

செந்தமிழே உயிரே நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித் தேனே
நைந்தாயெனில் நைந்து போகும் என் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே

முந்தைய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போலே
செழித்த என் தமிழே ஒளியே வாழி!”

இந்தப் பாடலைக் கேட்ட பின்னர், பாவேந்தர் மீது எனக்கிருந்த பகையுணர்வு சிறிது சிறிதாகக் குறைந்து பின்னர் அறவே மறைந்தது. அவர்பால் எனக்கு ஒரு வகைப் பற்று ஏற்பட்டது. கார் இருளில் மின்னல் போலப் பகைமையிடையே இந்தப் பற்று ஏற்பட்டது. ஆனால், மின்னல்போல் மறைந்து விடாமல் இன்றுவரையும் நீடித்து நிலைத்திருக்கின்றது. பகைவனை மயக்கிப் பகை மாற்றிய சிறப்புப் பாடலாகும் இது.

1943 என எண்ணுகிறேன் – ஆண்டுக் கணக்கு தவறாயிறுப்பின் பொறுத்தருள வேண்டும் – புதுச்சேரியில்

திராவிடர் கழக மாநாடு நடந்தது. பெரியார், அண்ணா முதலிய பெருந்தலைவர்கள் எல்லாரும் வந்திருந்தனர். பாவேந்தர் பாரதிதாசனார் முன்னின்று நடத்தினார். மாற்றுக் கட்சியினர் கூட்டம் நடக்கவிடாமல் கலகம் செய்தனர். பாவேந்தர் கடுமையாகத் தாக்கப்பட்டார். இது மறுநாள் செய்தித் தாளில் வெளியிடப்பட்டிருந்தது. அப்போது நான் மயிலத்தில் இருந்தேன். நானும் சிலரும் கல்லூரித் திண்ணையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். ஒருவர், பாரதிதாசன் தாக்கப்பட்ட செய்தியைப் படித்தார். நான், 'ஐயையோ - பாவம் - அநியாயம்' - என்றேன். அப்போது மற்றொரு ஆத்திகர், 'என்ன பாவம் - அவனுக்கு அது வேண்டியதுதான்' - என்று மகிழ்ச்சி தெரிவித்தார். அவரது மகிழ்ச்சிக் கூற்று, எனக்கு, வெந்த புண்ணில் எறிந்த வேல் ஆயிற்று.

1942ஆம் ஆண்டு நிகழ்ந்த பகைச் சொற்பொழிவு நிகழ்ச்சிக்குப் பின்னர் 1944 ஆம் ஆண்டு கோடை விடுமுறையில்தான் பாவேந்தரை நேரில் கண்டேன். அந்த விடுமுறைக் காலத்தில் புதுச்சேரியில் எனக்குத் திருமணம் நடைபெற்றது. புதுச்சேரி வைசியர் தெருவில் உள்ள ஆரிய வைசிய சமாசத்திற்குப் பக்கத்தில் இருப்பதும் நான் இருபத்தைந்தாண்டு காலம் குடியிருந்ததும் 61-c என்னும் எண் உடையதுமாகிய இல்லத்தில்தான் என் திருமணம் நடைபெற்றது.

என் திருமண நாளுக்கு முதல்நாள் மாலை, பக்கத்துக் கட்டடமாகிய ஆரிய வைசிய சமாசத்தில் ஒரு கூட்டம் நடந்தது, புதுச்சேரிப் பெரும் புலவர் துரைசாமி முதலியார் காலமானது தொடர்பாக நடைபெற்ற இரங்கல் கூட்டம் அது. பாவேந்தரின் தலைமையில் நடைபெற்ற அக்கூட்டம் வியப்பிற்கு உரியது. துரைசாமி முதலியாரும்

பாவேந்தரும் நீண்டகாலப் பகைவர்கள்; பலமுறை ஒருவரை ஒருவர் தாக்கித் துண்டறிக்கை வெளியிட்டவர்கள். இந்த நிலையில், துரைசாமி முதலியார் இறந்ததும், தமது தலைமையில் இரங்கல் கூட்டம் நடத்தி இரங்கல் உரையாற்றிய பாவேந்தரின் உயர் பண்பு மிகவும் பாராட்டத் தக்கது.

ஒரு வீட்டில் சாப்பறை ஒலிக்க, அடுத்த அல்லது எதிரிலுள்ள மற்றொரு வீட்டில் குளிர்ந்த இனிமையான மணமுழவின் இசை ததும்பி நிறையும்படி இவ்வுலகத்தைப் படைத்தான் பண்பு இல்லாத ஒருவன் - என்னும் கருத்துடைய

ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்...
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்''

என்னும் பக்குடுக்கை நன்கணியாரின் புறநானூற்றுப் பாடல் (194) பகுதியின்படி, ஒரு வீட்டில் இரங்கல் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போழ்து, அடுத்த வீட்டில் என் திருமணம் தொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தீய நிமித்தம் (கெட்ட சகுனம்) சரிதானோ என்னவோ - என் திருமணமும் ஒரு சாவு நிகழ்ச்சி போலவே எனக்குத் தென்பட்டது; என்னென்ன காரணத்திற்காகவோ, இரவு முழுவதும், யாருக்கும் தெரியாமல், படுத்தபடி யான் மெல்ல அழுதுகொண்டேயிருந்தேன். இது கிடக்கட்டும்.

இரங்கல் கூட்டம் முடிந்ததும், பாவேந்தர் திருமண வீட்டிற்கு வந்தார்; என்னை நேரில் கண்டு பேசி வாழ்த்து கூறிச் சென்றார். அந்த வாழ்த்து, எனக்குப் புண்ணில்

இட்ட மருந்தாயிற்று. பாவேந்தரொடு நெடுநாளைக்குப் பின் ஏற்பட்ட நேர்காணல் (சந்திப்பு) இது.

திருமணம் ஆனபின் மனைவியுடன் மயிலம் சென்றேன். அங்கே நீண்டநாள் இருக்க முடியவில்லை. ஓர் ஆண்டிற்குள் இருமுறை என் மனைவிக்குக் கடுமையாக அம்மை நோய் கண்டது. யான் கல்லூரியில் நாடோறும் நான்கு மணி நேரம் பேசினேன்; காலையில் இரண்டு மணி நேரமும் மாலையில் இரண்டு மணி நேரமும், மயிலம் மடத்தில் இப்போது பத்தொன்பதாம் பட்டத்துத் தலைவராயிருப்பவர்க்கும் அவர் அண்ணனுக்கும் தமிழ் நூற் பாடம் நடத்தினேன். ஆக, ஒரு நாளைக்கு எட்டுமணி நேரம் பேசியதால் மார்பு வலி நோய் கண்டுவிட்டது. 1946ஆம்ஆண்டு மனைவியுடன் புதுவைக்கு வந்து விட்டேன். ஒருசொல் பேசினாலும் மார்பு வலிக்கும்; ஓராண்டு காலம் பேச முடியாமல் படுக்கையில் கிடந்தேன். வேலையிலிருந்து நானாக விலகி நிலையாகப் புதுச்சேரியிலேயே தங்கிவிட்டேன்.

இந்தக் கட்டத்தில், ஓரளவு நோய் நீங்கி நலம் பெறத் தொடங்கியதும் வெளியில் வந்து போகத் தொடங்கினேன். 1947 ஆம் ஆண்டு பாவேந்தரோடு தொடர்பு கொண்டேன். அந்தத் தொடர்பு பாவேந்தர் இறுதி எய்தும்வரை நீடித்து நிலைத்திருந்தது.

# 3

# நாட்டுப் பற்று

பாவேந்தர் என்னிடம் கூறிய மிகவும் சுவையான செய்தி ஒன்று உள்ளது. இதை நான் கூட்டங்களில் கூடக் கூறியிருக்கிறேன். அதாவது:

பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியை ஆண்டுகொண்டிருந்த போது, பிரிட்டிஷ் இந்தியாவில் விடுதலைப் போராட்டம் மிடுக்காக நடந்து கொண்டிருந்தது. அத்தகைய போராட்டம் புதுச்சேரியில் நடக்காதபடி பிரெஞ்சுக்கார ஆட்சியினர் கண்காணித்து வந்தனர். குறிப்பாக, அரசு ஊழியர்கள் கதர் உடையும் காந்தி குல்லாவும் அணியக்கூடாது என்பது கடுமையான ஆணையாகும்.

ஆனால், பிரெஞ்சு அரசுக் கல்வித்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த நம் கவிஞர் கதராடையும் காந்தி குல்லாவும் அணிவாராம். பிரெஞ்சுக்காரக் கல்வித்துறைத் தலைவர் விடுமுறையான ஒரு நாளில் தமது வீட்டில்

ஆசிரியர் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தாராம். குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் கூட்டத்திற்கு வரவேண்டுமாம்.

அவ்வாறே ஆசிரியர்கள், குறித்த நாளில் துறைத் தலைவரின் வீட்டில் சென்று அமர்ந்திருந்தனராம். அப்போது, கவிஞர் கதராடையும் காந்தி குல்லாவும் அணிந்து கொண்டு போய் ஆசிரியர்களுடன் அமர்ந்தாராம். ஆசிரியர்கள் கவிஞரைப் பார்த்து, டேய் சுப்புரத்தினம்! இந்த உடையுடன் இங்கே இருக்காதே – போய் வேறு உடை உடுத்திக் கொண்டு வா – அல்லது வீட்டுக்குப் போய் விடு – துரை (கல்வித் துறைத் தலைவர்) வந்து பார்த்தால் உன்னைத் தொலைத்து விடுவான் – உன் வேலைக்கே சீட்டுக் கிழித்து விடுவான்–எழுந்து போ போ' – என்று வற்புறுத்தினார்களாம்.

ஆனால் கவிஞர் சிறிதும் அசைந்து கொடுக்க வில்லையாம்; துரை வந்து பார்க்கட்டும் – எனக்குச் சீட்டுக் கிழிக்கட்டும் – நான் எதற்கும் தயார் என்று கூறினாராம். மீண்டும் ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டும் கவிஞர் நகராமல் ஒரே உறுதியுடன் இருந்து விட்டாராம்.

பின்னர்ச் சிறிது நேரத்தில் பிரெஞ்சுக்காரத் தலைவர் ஆசிரியர்கள் அமர்ந்திருந்த கூட்டத்துக்கு வந்தாராம். வந்ததும் கவிஞர் சுப்புரத்தினத்தை நெடுநேரம் ஏற இறங்கக் கவனித்துப் பார்த்தாராம்; பிறகு அவ்விடத்தினின்றும் அகன்று உள்ளே சென்றாராம்.

தலைவர் உள்ளே சென்றதும், ஆசிரியர்கள் மிகவும் அஞ்சி, கவிஞரை நோக்கி, 'டேய் சுப்புரத்தினம்! பார்த்தாயா? துரை எதற்கு உள்ளே போயிருக்கிறான் தெரி

யுமா? உனக்கு 'டிஸ்மிஸ்' ஆர்டர் எழுதிக் கொண்டு வரத் தான் போயிருக்கிறான். இனிமேலாவது எழுந்து போய் விடு. உன்னை மன்னித்தாலும் மன்னிப்பான். இல்லாவிடின் உன்னோடு எங்களுக்கும் ஏதாவது தொல்லை நேரிடலாம்' என்று சொல்லிப் பார்த்தார்களாம். அப்போதும் கவிஞர் எழுந்து செல்லாமல் 'ஆணி அடித்துக் கொண்டும்' 'வேர் பாய்ந்தும்' அதே இடத்தில் அமர்ந்திருந்தாராம்.

சிறிது நேரத்தில் துரை தம் மனைவியை அழைத்துக் கொண்டு வந்து கவிஞரைச் சுட்டிக்காட்டிப் பின்வருமாறு கூறினாராம்: 'இதோ பார் இவரை! கதர் ஆடையும் கதர்க் குல்லாவும் அணியக் கூடாது; அணிந்தால் வேலை போய் விடும் என்று நாம் விதி செய்துள்ளோம். அப்படியிருந்தும், இவர் எதற்கும் அஞ்சாமல் கதர் உடையுடன் என் எதிரி லேயே வந்திருக்கிறார். இவருடைய உறுதி யான துணிவையும் நாட்டுப் பற்றையும் பார்! இப்படியொரு நாட்டுப் பற்றுடையவர் இருப்பார் என்று நான் எதிர் பார்க்கவேயில்லை' என்று தம் மனைவியிடம் கூறிக் கவி ஞரை மெச்சினாராம். அதன் பிறகுதான் ஆசிரியர்கள் அச்சம் நீங்கி மூச்சு விட்டார்களாம்.

இங்கே நாம், கவிஞரின் உறுதியான நாட்டுப் பற்றைப் பெரிதும் வியப்பதா? அல்லது, கல்வித்துறைத் தலைவரின் பெருந்தன்மையைப் பற்றிப் பெரிதும் வியப்பதா? ஒன்றும் புரியவில்லையே. சரி-இருவரையுமே வியப்போம். இச் செய்தியைக் கவிஞர் என்னிடம் நேரில் கூறியபோது நான் அவரை மிகவும் பாராட்டினேன்.

### ஒன்றினம் முடித்தல்-தன் இனம் முடித்தல்

ஒரு செய்தியைச் சொன்னால், அது போன்ற மற்

றொரு செய்தியையும் உடன் சொல்லலாம் என்னும் கருத்துடைய 'ஒன்றினம் முடித்தல்-தன் இனம் முடித்தல்'-என்னும் இலக்கண உத்தியின்படி, நாட்டுப் பற்றோடும் பிரெஞ்சுக்காரரின் பெருந்தன்மையோடும் தொடர்புடைய மற்றொரு செய்தியையும் இவண் சொல்ல விரும்புகிறேன்:-

1954 ஆம் ஆண்டு புதுச்சேரியில் விடுதலைப்போராட்டம் மிடுக்காக நடந்தது. பல கட்சியினர் விடுதலைக்காகப் பாடுபட்டனர். திரு துரை முனிசாமியவர்களின் தலைமையில் இயங்கிய இளைஞர் காங்கிரஸ் நிறுவனம், புதுச்சேரி காளத்தீசுவரன் கோயில் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்தபடி செயல்பட்டது. பிரெஞ்சு ஆட்சி இயக்கத்தினர் புதுச்சேரிப் பொறுக்கிக் கூட்டத்தை விட்டு விடுதலை இயக்கத்தினர்க்குத் தொல்லை தந்து வந்தனர்.

ஒரு நாள் இளைஞர் காங்கிரஸ் அலுவலக மாடியில் இந்தியக் கொடி ஏற்றப்பட்டது. கொடியை இறக்கவும் வீட்டைத் தகர்க்கவும் பொறுக்கிக் கூட்டம் முயன்றது. உடனே இளைஞர் காங்கிரஸ் இளைஞர்கள், பொறுக்கிகள் உள்ளே வராதபடி தெருக் கதவைத் தாளிட்டனர். பின்னர்ப் பொறுக்கிகள் கம்பத்தின் வழியாகவும் வேறு வழியாகவும் மாடியில் ஏற முயன்றனர். மோதல் மிடுக்கடைந்தது.

அப்போது பிரெஞ்சுக்காரக் (போலீஸ்) காவல் துறைத் தலைவராகிய வெள்ளையர் அங்கே வந்தார். கதவைத் திறக்கும்படி கூறினார். கதவு திறக்கப்பட்டது. அவர் உள்ளே போய் மாடியில் கொடி ஏற்றியிருந்த இடத்தை அடைந்தார். பொறுக்கிக் கூட்டமும் அவருடன் சென்றிருந்தது. கொடி இறக்கப்படும்போல் தெரிந்தது.

அப்போது இளைஞர் காங்கிரஸ் இளைஞர் ஒருவர் கொடிக்கம்பத்தை இறுகப் பிடித்து அணைத்துக் கொண்டு தாய் நாட்டுக் கொடியைக் காப்பாற்றுங்கள் - தாய் நாட்டுக் கொடியைக் காப்பாற்றுங்கள் - என்று கூவி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். பொறுக்கிகள் அவரைத் தாக்க முற்பட்டனர். அப்போது காவல்துறை வெள்ளையர் அந்த இளைஞரை ஏற இறங்கப் பார்த்தார். இளைஞரை ஒன்றும் செய்யாதபடி பொறுக்கிகளை அப்புறப்படுத்தினார்; மீண்டும் அந்த இளைஞரை ஏற இறங்கப் பார்த்தார். இளைஞரின் நாட்டுப்பற்றை உள்ளுக்குள்ளே மெச்சினார் போலும்! பிறகு ஒன்றும் செய்யாமல் கீழே இறங்கிப் போய் விட்டார். பின்னர் ஓர் இடையூறும் இன்றிக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. இது நான் தெருவில் நின்று கொண்டு நேரில் கண்ட காட்சியாகும்.

பிரெஞ்சுக்காரர்கள் உரிமை (சுதந்திரம்), ஒரு நிகர் (சமத்துவம்), உடன் பிறந்தமை (சகோதரத்துவம்) என்னும் மூன்று கொள்கைகளைக் கொண்டவர்கள். அந்த அடிப்படையில், கற்றவரும் உலக வரலாறு அறிந்தவரும் ஆகிய காவல்துறைத் தலைவராகிய பிரெஞ்சுக்கார வெள்ளையர் கொடி ஏந்திய இளைஞரை ஒன்றும் செய்யாமல் போய் விட்டார்போலும்.

பாரதி தாசனாரின் உறுதியான நாட்டுப் பற்றை மெச்சிய கல்வித்துறை வெள்ளையரைப் போலவே, இந்த வெள்ளையரும் பாராட்டுதற்கு உரியவராவார்.

மேற்கூறிய செய்தி பாவேந்தரோடு தொடர்புடையதன்றாயினும், செயல் ஒற்றுமையிருப்பதால், 'ஒன்றினம்

முடித்தல் - தன்னினம் முடித்தல்' என்னும் இலக்கண உத்தியின்படி இங்கேநான் எழுதியதை, இந்நூலைப் படிப் பவர்கள் பொறுத்தருள்வர் என நம்புகிறேன்.

கவிஞருக்குப் 'புரட்சிக் கவிஞர்' என்னும் பட்டம் பிற் காலத்தில் சூட்டப்பட்டது. ஆனால், அவர் இளமைப் பருவத்திலிருந்தே புரட்சியாளராகத் திகழ்ந்திருக்கிறார் என்பது, அவர் கல்வித்துறைத் தலைவர் முன் காட்டிய புரட்சிச் செயலால் புலனாகும்.

# 4

# சென்ற இடமெல்லாம் சிறப்பு

சேலம் மாவட்டத்தில் சிற்சில இடங்களில் கவிஞருக்குப் பெருமதிப்பு உண்டாம். குழந்தைகளைக் கொண்டு வந்து கவிஞரின் காலில்இட்டு வாழ்த்தச் சொல்வார்களாம்.

சேலம் மாவட்டத்திலுள்ள இராசிபுரம் என்னும் நகருக்கு ஒரு முறை கவிஞர் சென்றாராம். அங்கு உள்ள கன்னடிய ராவ் ஒருவரின் விடுதியில் (Boarding And Lodging) மூன்று நாள் தம் உதவியாளர் ஒருவருடன் தங்கியிருந்தாராம். பிறகு அதைவிட்டுப் புறப்படும்போது, விடுதிக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கணக்கு பண்ணி இன்னும் இவ்வளவு தரவேண்டும் என்று விடுதி உரிமையாளர் கூறினாராம். கவிஞர் தம் பணப்பையைப் பார்த்த போது தொகை ஓரளவு குறைவாக இருந்ததாம். உடனே கவிஞர், தம் உதவியாளரை நோக்கி இன்னாரிடம் சென்று நான் வாங்கிவரச் சொன்னதாகச் சொல்லி இவ்வளவு

பணம் வாங்கி வா என்று அனுப்பினாராம். இதையறிந்த விடுதி உரிமையாளர், 'கவிஞர் என் விடுதிக்கு வந்ததே பெருமை! அதுவே போதும். மேற் கொண்டு பணம் தர வேண்டாம். கவிஞர் எப்பொழுது இராசிபுரம் வந்தாலும் என் விடுதியில் இலவசமாகத் தங்கிச் செல்லலாம்' என்று கூறிப் பணம் வாங்காமலேயே வழியனுப்பி வைத்தாராம்

ஒரு முறை சென்னையில், சௌந்தர்ய மகால் என்னும் அரங்கத்தில், நடிகவேள் எம்.ஆர். இராதாவின் 'இலட்சுமி காந்தம்' என்னும் நாடகம் கவிஞர் தலைமையில் நடைபெற்றதாம். அங்கு யாரோ ஒருவர், கவிஞரின் உதவியாளரை மதிப்புக் குறைவாய் நடத்தியதைக் கவிஞர் கண்டு சினங் கொண்டு உதவியாளருடன் அரங்கத்திற்கு வெளியே வந்து விட்டாராம். பின்னர்த் தொடர்புடையவர்கள் வந்து மன்னிக்கும்படி கவிஞரைக் கெஞ்சி வேண்டி உள்ளே அழைத்துச் சென்றனராம். பிறகு கவிஞருக்கு நடந்த சிறப்பெல்லாம் உதவியாளர்க்கும் செய்யப்பட்டனவாம்.

மற்றொரு முறை கவிஞர் தம் உதவியாளருடன் சென்னை சென்றிருந்தாராம். பணப்பை (மணிபர்சு) உதவியாளரிடமே தரப்பட்டு இருக்குமாம். செலவுக்கெல்லாம் பணம் உதவியாளர்தான் எடுத்து'எடுத்துக் கொடுப்பாராம். உதவியாளர் ஏதோ பொருள் வாங்கினாராம். அதைக் கவிஞர் அறியாராம். புதுவைக்குப் புறப்பட இருக்கும் கடைசி நாள், உயர்தர உணவுக்கடை ஒன்றிற்குச் செல்ல வேண்டும் என்று கவிஞர் கூற, அதற்குப் போதிய பணம் இல்லை என்று உதவியாளர் அறிவித்தாராம். உடனே கவிஞர், அப்படியெனில், தெரு ஓரம் உள்ள ஏதாவது ஒரு தேநீர்க் கடைக்குச் சென்று உரொட்டி வாங்கி உண்டு

தேநீர் அருந்திச் செல்லலாம் வா-என்று கூறி அழைத்துச் சென்றாராம்.

தேரு ஓரக் கடையைத் தேடிச் செல்வதை யாரும் கண்டு அறியாதிருப்பதற்காக, மேல் துணியைத் தலையிலே கட்டிக் கொண்டும் கீழே தொங்கும் வேட்டியை முழங் காலுக்கு மேலே மடித்துக் கட்டிக் கொண்டும் ஒரு தெரு வழியே சென்று கொண்டிருந்தாராம் கவிஞர்.

வழியில் சிலர் எப்படியோ கவிஞரை அடையாளம் கண்டு கொண்டு, புரட்சிக் கவிஞர்-புரட்சிக் கவிஞர் என்று கூறிச் சூழ்ந்து கொண்டனராம். அப்போது கவிஞர் அவர்களை நோக்கி, 'என்னங்கய்யா! நான் உண்ணுவதற் காக ஒரு நல்ல ஓட்டலைத் தேடிக்கொண்டு செல்கிறேன்- பசிவேளையில் நீங்கள் வந்து சூழ்ந்து கொண்டீர்களே- என்று கூறினாராம். உடனே அவர்கள், ஒருவரோ டொரு வர் போட்டி போட்டுக் கொண்டு, எங்களுடன் வாருங்கள் என்று கூறிக் கவிஞரையும் உதவியாளரையும் ஒரு நல்ல உணவுக்கடைக்கு அழைத்துச் சென்று உண்ணச் செய்து அனுப்பி வைத்தார்களாம்.

## திருச்சி சுலைமான்

கவிஞர் திருச்சிக்குச் செல்லும்போதெல்லாம் அவருக் குப் பணிவிடை புரியப் பலர் காத்திருப்பார்களாம். அவர் களுள் ஒருவர் சுலைமான் என்னும் முசுலீம் தோழராம். கவிஞர் வந்தது தெரிந்து விடின், சுலைமான் ஓடோடிச் சென்று கவிஞர் திருச்சியை விட்டுப் புறப்படும் வரையும் அன்புடன் பணி விடைகள் செய்து கொண்டிருப்பாராம்.

ஒருநாள் சுலைமான் உட்படப் பலர் கவிஞரைச்

சூழ்ந்துகொண்டு உரையாடிக் கொண்டிருந்தனராம். இவர்களுள் ஒருவர், ஏதோ பேச்சு வந்தபோது, செஞ்சி-தேசிங்கு மன்னன் தொடர்பான ஓர் ஐயத்திற்குக் கவிஞரிடம் விளக்கம் கேட்டாராம். அந்த விவரம் வருமாறு:-

வட இந்தியாவில் ஆண்ட முசுலீம் மன்னரின் ஆணையின்படி, நிஜாம் என்னும் முசுலீம் மன்னர் ஐதராபாத்தில் இருந்துகொண்டு தென்னிந்தியாவை மேலாட்சி புரிந்தார். நிஜாமின் ஆணையின் படி, தமிழ் நாட்டு வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆர்க்காட்டைத் தலை நகராகக் கொண்டு நவாப் மன்னர் ஒருவர் தமிழ் நாட்டில் மேலாட்சி புரிந்துவந்தார். ஆர்க்காட்டு நவாப் மரபினரான முகமது அலி என்பவர், வெள்ளைக்காரர்கள் வருவதற்கு முன் தமிழ் நாட்டை நாற்பதாண்டு காலம் தொடர்ந்து ஆட்சி புரிந்தார். நவாப் மன்னரின் ஆணைப்படி, தேசிங்கு மன்னனின் தந்தை சரூப்சிங் செஞ்சிப் பகுதியை ஆண்டார். தந்தையார் காலமான பிறகு, தேசிங்கு, ஆர்க்காட்டு நவாப்புக்குக் கப்பம் கட்ட மறுத்து விட்டான். தேசிங்கு இந்து மதத்தினன்.

கப்பம் கட்டாததால் ஆர்க்காட்டு நவாப் செஞ்சிமேல் படையெடுத்து வந்தார். தேசிங்கு மன்னன் எதிர்க்கத் தொடங்கினான். மன்னன்தேசிங்கின் நண்பனும் படைத் தலைவனுமான மகமத்கான் என்பவனுக்கு அப்போது திருமண நிகழ்ச்சி வழுதாவூரில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தேசிங்கு, நவாப் படையெடுத்து வந்திருப்பதை ஆட்களை அனுப்பி மகமத்கானுக்குத் தெரியப்படுத்தினான். திருமண மேடையில் அமர்ந்திருந்த மகமத்கான் என்னும் முசுலீம் படைத்தலைவன் உடனே புறப்பட்டுச் செஞ்சிக்கு வந்து நவாப் படையோடு கடுமையாகப் போரிட்டுத் தேசிங்கிற்கு வெற்றிதேடித் தந்தான். மகமத்கான் போர்க்

களத்திலிருந்து சென்றுகொண்டிருந்தபோது, இறந்தவன் போல் பாசாங்கு செய்து படுத்துக் கொண்டிருந்த நவாப் படையாள் ஒருவன் எழுந்து சென்று மகமத்கானின் பின்னால் படைக் கலத்தால் தாக்கி மகமத்கானைக் கொன்று விட்டான்.

திருமணத்தை இடையிலே நிறுத்திவிட்டுத் தனக்காக ஓடி வந்து பொருது வெற்றி தேடித் தந்த மகமத்கானின் பிரிவைத் தாங்க முடியாமல், நட்புணர்ச்சி மேலிட்டு மன்னன் தேசிங்கு தற்கொலை செய்து கொண்டான். உலகத்தில் இந்து மன்னன் தேசிங்கு-முசுலீம் நண்பன் மகமத்கான் ஆகியோரின் வரலாறு இருக்கும் வரை அகராதிகளில் நட்பு' என்னும் சொல் இருக்கலாம். இத்தகைய சிறப்புடையது இந்தவரலாறு. இனிப் பாவேந்தர் தொடர்பான செய்திக்கு வருவோம்.

கவிஞரிடம் ஒருவர் இந்த வரலாற்றைக் குறிப்பிட்டு, முசுலீம் ஆகிய மகமத்கான், முசுலீம் ஆகிய நவாப் மன்னனுக்கு ஆதரவாயில்லாமல், இந்து மதத்தினனாகிய தேசிங்கிற்கு ஆதரவு தந்தது எப்படி?- ஏன்?- என்று வினவினாராம். அதற்குக் கவிஞர், உடன் அமர்ந்திருந்த சுலைமான் என்னும் முசுலீம் நண்பரைச் சுட்டிக்காட்டி,

'இதோ ஒண்ணு இருக்குது பாருங்கள்-இது முசுலீம் தான்; இதுமுலீசும் லீக் கட்சியிலா இருக்குது? நம்ம கட்சியிலேதானே நம்கூடத்தானே இருக்குது! - இதுபோல் தேசிங்கின் நண்பன் மகமத்கானும் ஓர் அப்பாவி- என்று கூறினாராம். உடனே சுலைமான் உட்பட அனைவரும் எழுப்பிய சிரிப்பு அலை அடங்க நெடுநேரம் ஆயிற்றாம்.

இவ்வாறு சென்ற இடமெல்லாம், கவிஞருக்குச் சிறப்பான- அன்பான பணி விடைகள் செய்வதைப் பெரும் பேறாக மதித்துப் பலர் பெருமை பெற்றனர், இப்படி எத்தனையோ செய்திகளைக் கவிஞர் கூற யான் கேட்டறிந்திருக்கிறேன்.

1950 ஆம் ஆண்டு என எண்ணுகிறேன் - சென்னை எழும்பூரிலுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் நடைபெற்ற கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கே மாணாக்கர்கள் கவிஞரின் பாடல்களையே நிரம்பப் பாடிக்கொண்டிருந்ததைக் கேட்டு, நம்மூர்க் கவிஞருக்கு இவ்வளவு சிறப்பா! - என வியந்தேன். புதுவை வந்த பின்னர், ஒரு நாள் கவிஞரிடம் நான் இதைக் கூறினேன். கேட்ட கவிஞர் புன் சிரிப்பை உதிர்த்தார். சென்ற இடமெல்லாம் கவிஞருக்குச் சிறப்பே காத்திருந்தது.

## வண்டிப் பாளையம் திருமணம்:

1951-கோடைக் கால விடுமுறையில் பாவேந்தர் தலைமையில் வண்டிப் பாளையத்தில் நடைபெற்ற ஒரு திருமணம் பற்றிப் பார்ப்போம்:-

1942 ஆம் ஆண்டு பாவேந்தரால் கடுமையான சொல்லடி பட்டுத் தாக்கப்பட்ட இராசாக் கண்ணனார், அதன் பிறகு எப்படியோ பாவேந்தரிடம் வந்து வந்து - கண்டு கண்டு நண்பராகிவிட் டிருக்கிறார். ஒரு நாள் நான் கவிஞரின் வீட்டிற்குச் சென்றபோது, இராசாக் கண்ணனார் கவிஞரின் வீட்டிற்கு வந்து தெருத் திண்ணையில் அமர்ந்து கவிஞரோடு பேசிக் கொண்டிருந்தார். யானும் சென்று இராசாக் கண்ணனார் பக்கத்தில் பெரிய திண்ணையில் அமர்ந்தேன். கவிஞர் சிறிய திண்ணையில், ஒரு காலை

மேலே தூக்கித் திண்ணையில் ஊன்றிக்கொண்டும் மற்றொரு காலைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டும் அமர்ந்திருந்தார்.

இராசாக் கண்ணனார் கவிஞரை நோக்கி, 'உங்கள் மகனை நான் பார்க்கவேண்டும் – அழையுங்கள்' என்றார். தம்பீ என்று கவிஞர் குரல் கொடுத்தார். இளம் பிள்ளையாகிய கோபதி (மன்னர் மன்னன்) வெளியில் வந்து இராசாக் கண்ணனார் பக்கத்தில் அமர்ந்தார். இராசர் அன்போடு கோபதியின் முதுகில் தட்டிக்கொடுத்தார். இராசாவுக்கு அது தட்டிக் கொடுத்ததாகத் தோன்றலாம்; ஆனால் மற்றவர்க்கு, அது, முதுகில் ஓங்கி அறைந்ததாகவே தோன்றிற்று, இராசா முரடர் என்று நான் முன்பே சொல்லி யிருக்கிறேன். இராசா ஓங்கி அறைவது. போல் – வன்மையாக அடிப்பது போல் தட்டி விட்டார். சிறுவர் கோபதி வலி தாளாமல் முதுகை நெளித்து நெளித்து அசைத்தார். எனக்கு அச்சமா யிருந்தது கவிஞரின் புருவங்கள் நெரிந்தன - கண்கள் சுழன்றன. ஆனால், இராசாவைத் திட்டாமல், என்னப்பா இது – இப்படியா தட்டுவது என்று கூறி அந்த அளவோடு. நிறுத்திக் கொண்டார். தலைக்கு வந்தது தலைப் பாகையோடு போயிற்று.

சிறிது காலம் கழித்து ஒருநாள் யான் பாவேந்தர் வீட்டிற்குச் சென்றபோது, உள்ளே நடு வாசலில் இராசாக் கண்ணனார் பாவேந்தரோடு பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். 'டாக்டர்' பட்டம் பெறும் முறையைப் பற்றிய பேச்சு அது.

அந்தக் காலத்தில் M.A. பட்டம் பெற்று M.A. வகுப்பில் பாடம் நடத்தியவர்தான் 'டாக்டர்'பட்டத்திற்கு ஆராய்ச்சி

மேற்கொள்ள முடியும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'தாராளமான அவ்வளவு வசதி' இருந்தது. என்ன கொடுமை! இராசா M.A.பட்டம் பெற்றவர்தான். அப்போது M.A. வகுப்பு உள்ள கல்லூரி மிகவும் குறைவாதலின், B.A.வகுப்பு வரையில் மட்டும் உள்ள கல்லூரிகளிலேயே, இராசா துறைத்தலைவராகவும் முதல்வராகவும் பணியாற்றினார். இராசாவுக்குச் சென்னையை நம்பிப் பயன் இல்லை. எனவே பிரான்சில் உள்ள ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தின் மூலம் 'டாக்டர்' பட்டம் பெற முடியுமா? என்று இராசா கவிஞரைக் கேட்டார். அதற்குக் கவிஞர் தக்க பதில் சொல்லிக்கொண்டிருந்தார்.

சிறிது காலம் கழித்ததும், புதுச்சேரி ஆசிரியர் பொன்னம்பலம் வீட்டுத் திருமணம் ஒன்று கவிஞர் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரை வழங்கியவர்கள் இராசாக் கண்ணனாரும் யானுமாவோம். மாலையில் வாழ்த்துச் சொற்பொழிவு. இராசா கவிஞரின் வீட்டில் வந்து தங்கி மாலைச் சிற்றுண்டி கவிஞரின் வீட்டிலேயே உட்கொண்டு கவிஞருடன் திருமண அரங்கம் சென்றார். பகைவர்களாக இருந்த கவிஞரும் இராசாவும் எவ்வளவு நெருங்கிய நண்பர்களாகிவிட்டனர் பாருங்கள்—என்றறிவிக்கவே இவ்வளவு சொன்னேன். இந்த நட்பு இறுதிவரையும் தொடர்ந்திருந்தது.

இராசாக்கண்ணனார், கடலூர்-திருப்பாதிரிப்புலியூருக்குத் தெற்கே ஒரு கல் தொலைவிலுள்ள வண்டிப் பாளையம் என்னும் ஊரினர். அவர் உள்ளூரிலேயே பெண்கட்டிக் கொண்டவர். அவருடைய மைத்துனர்—அதாவது மனைவியின் தம்பி முருகையன் என்பவர். முருகையன் பிற்காலத்தில் சிங்கப்பூர் வானொலி நிலையத்தில் இந்திய மொழித்

துறைப் பொறுப்பாளராக இருபத்தைந்து ஆண்டு காலம் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அந்த முருகையனின் திரு மணத்தைப் பற்றித்தான் இனிச் சொல்லப் போகிறேன்.

இராசாக் கண்ணனார் புதுவைக்கு வந்து கவிஞரைக் கண்டு, முருகையன் திருமணத்தைத் தலைமை தாங்கி நடத்துமாறு கேட்டு இணங்கச் செய்து, கவிஞரை உரிய காலத்தில்-அதாவது முதல்நாள் மாலையே அழைத்து வரும்படி என்னிடம் பொறுப்பை ஒப்படைத்துச் சென்று விட்டார். 1951-கோடை விடுமுறைக் காலம் அது.

திருமணத்திற்கு முதல்நாள் மாலையே கவிஞரை வண் டிப்பாளையத்திற்கு அழைத்துச் செல்வதற்காக, முதல்நாள் பிற்பகல் மூன்று மணிக்கே கவிஞரின் வீட்டிற்கு நான் சென்றுவிட்டேன். அங்கே திருநாவுக்கரசு என்னும் ஓர் ஏழைப்புலவர் வந்திருந்தார். அவர் வேலை கிடைக்காத வர்-காசுஇல்லாதவர். அவருக்கும் திருமண அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருந்ததால் அவரும் எங்களுடன் திருமணத் திற்கு வருவதாகச் சொன்னார்.

அப்போது என் கையில் இருந்தது இரண்டேகால் உரு பாதான். அண்மையில் என் மனைவிக்கு ஒரு நகை வாங்கி விட்டதால் கையில் வேறு காசு இல்லை. திருநாவுக்கரசை நோக்கிக் காசு வைத்திருக்கிறாயா என்று கேட்டேன். என்னி டம் ஒரு பைசாகூட இல்லை என்று அவர் சொல்லிவிட்டார். இரண்டு உருபா என்பது முப்பத்திரண்டு அணா கொண் டது. புதுவையிலிருந்து கடலூருக்குச் செல்லப் பேருந்து கட்டணம் பத்தணாவாகும். நான் ரிக்சாவண்டி கால் உரு பாவிற்கு அமர்த்திக் கவிஞரை ஏற்றிக் கொண்டு புதுவைப் பேருந்து நிலையம் சேர்ந்தேன். நான் கேட்டுக் கொண்ட படி, திருநாவுக்கரசு எங்கட்கு முன் நடந்து சென்று அங்

குக் காத்துக்கொண்டிருந்தார். மூவருக்கும் பத்தணா வீதம் முப்பது அணா தந்து மூன்று கட்டணச் சீட்டு வாங்கிவிட்டேன். மீதி என்னிடம் இருந்தது இரண்டு அணா தான். இரண்டு அணா என்பது இப்போதைய பன்னிரண்டரைக் ($12\frac{1}{2}$) காசு ஆகும்.

பேருந்து புறப்பட்டது; புதுவைக்கும் கடலூருக்கும் இடையே உள்ள ரெட்டி சாவடி என்னும் ஊரில் நின்றது. அப்போது, ரெட்டி சாவடியில் சுங்க ஆய்வு அலுவலகம் (கஸ்டம்ஸ் சோதனை அலுவலகம்) இருந்தது. உரிமை பெறாத புதுச்சேரி மாநிலம் அப்போது இந்தியாவுக்கு அயல் நாடாகக் கருதப்பட்டதால், ரெட்டி சாவடி அலுவலகத்தில் அனைவரும் இறங்க வேண்டும்; அரசு அலுவலர்கள் உடைமைகளை ஆய்வு செய்த பின்னரே அப்பால் செல்ல வேண்டும். எங்கள் மூவரின் ஆய்வு முதலில் நடைபெற்றதால் நாங்கள் மூவரும் விரைவில் அப்புற எல்லைக்குச் சென்றுவிட்டோம். அங்கே ஒரு கொட்டகை தெரிந்தது. அங்கே போய் உட்காரலாம் என்று கவிஞர் எங்களை அழைத்துச் சென்றார். உள்ளே நுழைந்ததும் அது ஒருசிற்றுண்டிக் கடை என்பது தெரிய வந்தது. கவிஞர் அமர்ந்துகொண்டு பரிமாறுபவரை நோக்கிப் 'பஜ்ஜி' கொண்டுவா என்று சொன்னார்.

அவ்வளவுதான்! என் கையில் இருப்பதோ இரண்டு அணாதான். நான் திருநாவுக்கரசுக்குக் கைசைகை காட்டி வெளியே அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். கவிஞர் சிற்றுண்டி உட்கொண்டு காசு கொடுத்துவிட்டு வெளியே வந்தார். நான் திருடன் போல் விழித்த படியே அவர் அருகில் போய் நின்றேன். எல்லா ஆய்வுகளும் முடிந்த பின்பு பேருந்து புறப்பட்டது. கடலூர்ப் பேருந்து நிலையம்போய்ச் சேர்ந்தோம்.

நிலையத்தில், திருமண வீட்டார் ஒருவர் எங்களை வரவேற்கக் காத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு குதிரை வண்டி அமர்த்திக் கொண்டு வந்து எங்கள் மூவரையும் ஏறச் செய்தார். வண்டி திருப்பாதிரிப் புலியூரின் தெற்கில் வண்டிப் பாளையத்தை நோக்கிச் செல்லத் தொடங்கியது. நகரின் எல்லையைக் கடக்க இன்னும் ஐந்து அல்லது ஆறு வீட்டுத் தொலைவு இருக்கும்போது, குதிரை தெற்கு நோக்கி வண்டிப்பாளையம் பக்கம் செல்லாமல், பின்னாலேயே நகர்ந்து நகர்ந்து திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கமே வண்டியை நகர்த்தியது. வண்டிக்காரரர் எவ்வளவோ முயன்று பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை. அப்போது நான் பின்வருமாறு ஓர் அறிவுரை வழங்கினேன்.அதாவது,– ''குதிரை பின்னாலேயே நகர்வதா யிருப்பதால், குதிரையைத் திருப்பாதிரிப் புலியூர்ப்பக்கமே முகம் இருக்குமாறு திருப்பிவிட்டால், அது பின்னால் நகர்ந்து நகர்ந்து வண்டிப்பாளையம் போய்ச் சேர்ந்து விடும் என்றேன். எதற்கும் அவ்வளவு எளிதில் சிரித்து விடாத பாவேந்தர், யான் சொன்னதைக் கேட்டதும் வெடிச் சிரிப்பு சிரித்தார்.

இந்த நிலையில், தெருவின் இருமருங்கிலும் உள்ள வீட்டுக்காரர்கள் தெருவில் வந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் சிலர் கீழே இறங்கி வேறு வண்டி வைத்துக்கொண்டு செல்லுமாறு எங்களைக் கட்டாயப்படுத்தினார்கள். நாங்கள் யாரும் இறங்கவில்லை. குதிரை வண்டிக்காரரர் மீண்டும் குதிரையை அதட்டவே, குதிரை பின் நோக்கி நகர்வதை விட்டு, தெருவின் குறுக்கிலும் நெடுக்கிலும் மாறி மாறி நடந்து 'மெய்க்கால் குதிரை' நடனம் ஆடத் தொடங்கிவிட்டது.

தெருவார் இறங்கிவிடும்படி மீண்டும் வற்புறுத்தவே, நானும் பாவேந்தரும் மெள்ளக் கீழே இறங்கிவிட்டோம். ஆனால், கவிஞரைக்காட்டிலும் மிக்க துணிச்சலுடைய திருநாவுக்கரசுமட்டும் இறுதிவரையும் கீழே இறங்க மறுத்துவிட்டார். அவர் எத்தகையவர் தெரியுமா? புதுச்சேரியில் யாராவது உறவினர் இறந்துவிடின், மாலை எரியூட்டிய பின், மறுநாள் காலை 7 மணிக்குப் பால் எடுத்துக்கொண்டு சுடுகாட்டிற்குச் செல்லும்போது-காலையில் எழுந்திருக்க முடியாத திருநாவுக்கரசு, முதல் நாள் இரவே சுடுகாட்டுத் திண்ணையில் படுத்து உறங்கி, காலையில் பால் எடுத்து வரும் சங்கின் ஒலி கேட்டுத் திருப்பள்ளி எழுச்சி செய்யக் கூடியவர். அத்தகையவர் ஒரு குதிரைக்கு அஞ்சுவாரா? நானும் கவிஞரும் வற் புறுத்தி அவரையும் இறங்கச் செய்துவிட்டோம். திருமண வீட்டார் ஏதோ சில்லறை கொடுத்து இந்த வண்டியை அனுப்பி விட்டு வேறு வண்டி கொண்டுவரச் சென்று விட்டார்.

## சென்ற இடமெல்லாம் சிறப்பு:

பாவேந்தரை அடையாளம் கண்டு கொண்ட அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள், போட்டி போட்டுக்கொண்டு, தத்தம் வீட்டில் வந்து அமரும்படி பாவேந்தரை வேண்டி னர். அவர்களுள் ஒருவரின் கட்டாய-வற்புறுத்தலான அழைப்பின் பேரில் அவர் வீட்டிற்குச் சென்றோம். அவர் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார்; அவர் பெயர் நினைவு இல்லை. உரையாடிக் கொண்டிருந்த சிறிது நேரத்திற்குள் இனிப்பு-காரம்-காபி-எல்லாம் வந்து விட் டன. அன்போடு விருந்தோம்பினார். அவரது அன்பை மறக்க முடியாத நாங்கள் அவருக்கு மிக்க நன்றி செலுத்

தினோம். வேறு குதிரை வண்டி வந்தது; வண்டிப்பாளையம் போய்ச் சேர்ந்தோம்.

திருமண வீட்டார் அளித்ததையும் கவிஞர் உட்கொண்டார். இரவு விருந்தும் அருந்தப்பட்டது. அன்று இரவு ஒரு வீட்டு மாடியில் படுத்துக்கொண் டிருந்தபோது, கவிஞர் பின்வருமாறு என்னிடம் ஒன்று கூறினார். அதாவது, - "சண்முகம்! சிலர், அங்கே சாப்பிட்டேன் - இங்கே சாப்பிட்டேன்; அது சாப்பிட்டேன் - இது சாப்பிட்டேன்; அதனால் வயிறு கெட்டுவிட்டது - என்று சொல்கிறார்களே - அதுபோல் எப்போதும் எனக்கு ஒன்றும் நேர்வதில்லை" - என்று கூறினார். நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன்.

மறுநாள் காலை பாவேந்தரின் தலைமையில் முருகையனின் திருமணம் நடைபெற்றது. நிகழ்ச்சிகள் நிறைவுற்ற பின்னர், மணமகன் முருகையன் எழுந்து நின்று, தேம்பித் தேம்பி அழுதுகொண்டே நன்றி கூறினார்.

பின்னர், கவிஞர், இராசாக்கண்ணனார், நான் ஆகிய மூவரும் மற்றும் சிலரும், கவிஞர் தங்குவதற்கு என்று ஏற்பாடு செய்திருந்த வீட்டிற்குச் சென்றோம். அங்கே கவிஞர் எங்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:- 'முருகையன் அழுததைக் கண்டதும் எனக்கு (கவிஞர்க்கு) என் திருமணநாள் நினைவுக்கு வந்து விட்டது' - என்பது கவிஞர் கூறிய செய்தி. அவரது திருமண நாளன்று அவரும் அழுதிருக்கிறார் போலும்! கவிஞர் கூறியதைக் கேட்டதும், எனக்கு (சு.ச. வுக்கு) என் திருமணநாள் நினைவுக்கு வந்தது; அன்று முழுவதும் நான் அழுது கொண்டிருந்ததை நினைவு கூர்ந்தேன்.

பொதுக் கூட்டம்:

இது வரையும் வராத கவிஞர் வண்டிப் பாளையம் வந்து விட்டதால், அன்று மாலை கவிஞர் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடத்தியே தீர வேண்டும் என்று ஊரார் வலியுறுத்தினர். கவிஞரும் ஒத்துக் கொண்டார். அதனால் அன்று முழுதும் நாங்கள் வண்டிப் பாளையத் திலேயே தங்கவேண்டியதாயிற்று. அன்று பிற்பகல் நான்கு மணிக்குக் கவிஞரின் உறவினர் ஒருவர் தம் வீட்டிற்கு வருமாறு அழைத்தார். கவிஞரும் நானும் சென்றோம். ஒரு பழைய வீடு-நடையில் போட்டிருந்த ஓர் ஓட்டை விசிப் பலகையில் அமர்ந்தோம். தேநீர் தந்தனர்—பருகினோம். பார்ப்பதற்கே அச்சமான நோக்கும் தோற்றமும் கொண்டவரும் கடுஞ் சொல்லருமாகிய கவிஞர், அந்த ஏழை வீட்டிலே ஒரு சிறு குழந்தையாகி விட்டார். இடையறாது சிரித்த முகம் - மெல்லிய தாழ்ந்த இனிய குரல் - இன்ன பிற நயமான பாணியில் கவிஞரைக் கண்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

வண்டிப் பாளையம் ஊருக்குள் தென்னை மரங்கள் நிரம்ப உண்டு. ஊரைச் சுற்றிலும் தென்னந்தோப்புகள் மிகுதி. தென்னந் தோப்பிற்கு நடுவில் இருப்பதால்தான் இந்த ஊர் குளிர்ச்சியாயிருக்கிறது என்று கவிஞர் சொன்னார். ஊருக்குச் சிறிது தொலைவில், கெடிலம் ஆற்றிலிருந்து பிரிந்து வரும் வாய்க்கால் ஓடுகிறது. அதன் ஒரு கரை முழுவதும் தென்னந்தோப்புகளும் மற்றொரு கரை முழுவதும் பச்சைப் பசேர் என்ற பயிர் வகைகளும் உள்ளன. வாய்க்கால் கரையில் உள்ள ஒரு தென்னந் தோப்பை ‘வாய்க்கால் மேடு’ என ஊரார் வழங்குவர். மாலை ஐந்து மணிக்கு அந்த வாய்க்கால் மேட்டிற்குக் கவிஞரை அழைத்துச் சென்றோம்.

'அழகின் சிரிப்பு' எழுதி இயற்கையில் திளைத்திருந்த கவிஞர், அங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டு மிகவும் சுவைத்தார். 1942 ஆம் ஆண்டு புதுவை-உப்பளம் கூட்டத்தில் பாவேந்தர் என்னைக் கடுமையாகத் தாக்கிப் பேசியபோது உடனிருந்த சம்பந்தனார் என்னும் புலவர், அந்த வாய்க்கால் மேட்டிற்கு எங்களுடன் வந்திருந்தார். அவர் கவிஞரை நோக்கி, 'நீங்கள் ஒருமுறை புதுவை உப்பளம் கூட்டத்தில் சண்முகத்தை மிகவும் மட்டப் படுத்தித் தாக்கிப் பேசினீர்கள் அல்லவா? இப்போது எப்படி?' - என்று பழைய செய்தியை நினைவு கூர்ந்தார். அதைக் கேட்டுக் கவிஞரும் நானும் சிரித்துக் கொண்டோம்.

மாலை ஆறு மணிக்குப் பொதுக் கூட்டம் தொடங்கி முன்னிரவு ஒன்பது மணிக்கு நிறைவுற்றது. ஊரார் மிகவும் மகிழ்ந்தனர். இரவு விருந்து முடிந்தபின்ஒய்வுகொண்டோம்.

மறுநாள் காலை நாங்கள் புதுவைக்குப் புறப்பட்ட போது, போக்கு வரவுச் செலவிற்காகவும் கவிஞர் வந்ததற்காகவும் இராசாக் கண்ணனார் நூறு உருபாவோ அல்லது ஐம்பது உருபாவோ தரவில்லை; என்னிடம் ஏழே ஏழு உருபா தந்து, 'போதுமா - இது குறைவா' என்று வினவினார். நான், 'இது மிகுதி' என்று கூறி இரண்டு உருபாயை அவரிடமே தந்து ஐந்து உருபா மட்டுமே பெற்றுக் கொண்டேன். ஊர் வந்ததும் இதைக் கவிஞரிடம் அறிவித்தேன். அதற்கு அவர், 'ஐந்து உருபாகூட வாங்கியிருக்க வேண்டியதில்லை; இலவசமாகவே செய்திருக்கலாம்'- என்று கூறினார். நான் என் சட்டைப் பையைத் தடவிக் கொண்டேன். இலவசத்திற்கு என்னிடம் பணம் ஏது?

நாங்கள் மூவரும் மீண்டும் கவிஞர் வீடுவந்து சேரும் வரையும் முன் போலவே வண்டி செலவாயிற்று. என் வீட்

டிற்கு வந்து என் மனைவியிடம் இதைக் கூறிய போது, யான் இராசாக்கண்ணனாரிடம் இரண்டு உருபாவைத் திருப்பிக்கொடுத்துவிட்ட 'வறுமையில் செம்மைப்' பண்பை எண்ணி வியப்படைந்தாள்.

## வழியனுப்பும் படலம்:

மணமகன் முருகையன் தொடர்பான ஒரு செய்தி இங்கே நினைவுக்கு வருகிறது; அதையும் சொல்லி வைக்கிறேன்: முருகையன் திருமணம் ஆனதும் சிங்கப்பூர் சென்று 'தமிழ் முரசு' என்னும் நாளிதழ் அலுவலகத்தில் பணிபுரிந்தார். பின்னர்ச் சிங்கப்பூர் வானொலியில் இந்திய மொழித் துறையின் பொறுப்பாளராகப் பணியாற்றினார். அவர் ஒரு முறை விடுமுறையில் கடலூர் வந்து தங்கியிருந்தார். அப்போது ஒருநாள் அவர் புதுச்சேரிக்கு வந்து என் வீட்டில் என்னைக் கண்டார். பாரதிதாசனைப் பார்க்க வேண்டும் என்றார். நிரம்பப் பழ வகைகள் வாங்கிக் கொண்டு வந்திருந்தார்.

நானும் முருகையனும் பாவேந்தர் வீட்டிற்குச் சென்றோம். அப்போது பாவேந்தர் வீட்டு நடு வாசலில் அமர்ந்திருந்தார். பழங்களை எதிரில் வைத்துவிட்டு நாங்கள் வணக்கம் செலுத்தினோம். அவர் தலையசைத்துவிட்டு எழுந்து பின் கட்டிற்குச் சென்றார். சிங்கப்பூரிலிருந்து முருகையன் வந்திருப்பதால் காபி கொண்டு வந்து தர ஏற்பாடு செய்வதற்காகக் கவிஞர் உள்ளே சென்றிருக்கிறார் என நான் எண்ணிக்கொண்டிருந்தேன். 'ஆனால், சேதி தெரியுமா?

சிறிது நேரத்தில் கவிஞர் உள்ளேயிருந்து வந்து நேரே-வெளியே தெருப்பக்கம் சென்றார். நாங்கள் நீண்ட நேரம்

உள்ளே நடுவாசலிலேயே அமர்ந்திருந்தோம். நெடு நேரம் ஆகியும் கவிஞர் உள்ளே வரவில்லை. காத்திருந்த நாங்கள் வெளியே சென்றோம். அங்கே கவிஞர் தெருத் திண்ணையில் அமர்ந்திருந்தார். எங்களைக் கண்டதும் போய் வருகிறீர்களா?'' என்று சொல்லிவிட்டு 'விடுவிடு' என்று உள்ளே சென்றுவிட்டார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. என்னிடம் இதுகாறும் இவ்வாறு நடந்துகொண்டதில்லை. ஒரே ஒரு முறை அவர் மாடியில் இருந்தபோது நான் சென்று பார்க்க முடியாமல் திரும்பிவிட்டேன். அதற்கு உரிய காரணம் வேறு. இப்போது என்னிடம் கூடப் பேசாமல் வெளியே அனுப்பி விட்டதில் ஏதோ மறைபொருள் இருக்கிறது என்று எண்ணினேன். முருகையனை இப்போது பிடிக்காதிருக்கலாமோ என்றும் கருதினேன். பின் முருகையனை நோக்கி, 'என்ன முருகையா-நீ இதற்கு முன் வந்தாயா -கவிஞரோடு எது பற்றியாவது தொடர்பு கொண்டாயா-அது அவருக்குப் பிடிக்காதிருக்கலாமா?' என்று யான் வினவினேன். முருகையன் உண்மையைச் சொல்லிவிட்டார்: இதற்கு முன் ஒரு முறை கவிஞரைக் கண்டு, தம் மைத்துனருக்குப் பெண் கொடுக்கும்படி கேட்டாராம்; பிறகு பார்ப்போம் என்று கவிஞர் சொன்னாராம்; அதனால் இப்பொழுது வந்தாராம்-இது முருகையனின் பதில்.

பெண் கொடுக்க விருப்பமின்மையால் கவிஞர் பதமாக அனுப்பி விட்டார் என்று நான் புரிந்து கொண்டு உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன். பின்பு ஒருநாள் கவிஞரிடம் இதை நான் நினைவுபடுத்தியபோது புன்முறுவல் பூத்தார்.

# 5

# திருச்சியில் மணிவிழா

1951 ஆம் ஆண்டு கவிஞருக்குத் திருச்சிராப்பள்ளியில் அறுபது அகவை நிறைவு விழாவாகிய மணி விழா நடை பெற்றது. முதலில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ. பெ. விசுவநாதன்அவர்களின் மேற்பார்வையில் நடைபெறுவதாக இருந்தது. பிறகு 'யதார்த்தம் பொன்னுசாமி' என்பவர் மணி விழாப் பொறுப்பைத் தாம் ஏற்று நடத்தினார்.

விழா ஒருவார காலம் திருச்சித் தேவர் அரங்கில் நடை பெற்றது. முற்பகல்-பிற்பகல் இரண்டு வேளையும் சொற்பொழிவுகள் நடந்தன. மாலை கழிந்ததும் இரவில் நாடகம், இசையரங்கு, பல்லிய விருந்து முதலிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்தக் கலை நிகழ்ச்சிகளுள், என்.எஸ். கிருஷ்ணன் நாடகக் குழுவின் 'இழந்த காதல்' என்னும் நாடகமும், எம்.கே. தியாகராசபாகவதரின் இன்னிசை நிகழ்ச்சியும் குறிப்பிடத் தக்கன. பேச்சாளர்க

ளுக்குள் திரு.நெடுஞ்செழியனும் திரு. அன்பழகனும் குறிப் பிடத் தக்கவர்கள்.

கூட்டத்திற்குச் செல்லக் கட்டணம் உண்டு. கட்டணச் சீட்டு வாங்கியவர்களே அரங்கிற்குள் நுழைய முடியும். வெளியூர்களிலிருந்து பலர் வந்திருந்தனர். புதுச்சேரியிலி ருந்து நானும் சிலரும் சென்றிருந்தோம். கவிஞரின் குடும் பத்தார் அனைவரும் வந்திருந்தனர். எங்களுக்குக் கட்ட ணம் இல்லை.

கவிஞரும் அவர்தம் குடும்பத்தாரும் உறவினர்களும் நண்பர்களும் அன்பர்களும் தங்குவதற்குத் திருவானைக் காவிலுள்ள ஒரு சத்திரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திருச்சிக்கும் திருவானைக்காவுக்கும் இடையே காவிரியாறு உள்ளது. காவிரியின் தென் கரையில் திருச்சியும் அதன் நேர் வடகரையில் திருவானைக்காவும் உள்ளன. எங்க ளுக்கு உணவும் திருவானைக்கா சத்திரத்தில் தான் அளிக் கப்பட்டது-இலவச உணவே.' ஒருநாள் மதியம் மோர் தண்ணீராக இருந்தது. 'என்னய்யா! ஒரு செம்பு தயிரைக் கிணற்றில் கொட்டிவிட்டுப் பிறகு மொண்டு கொண்டு வந்து மோர் எனப் போடுகிறீர்களா?' என்று கவிஞர் நகைச்சுவையாகக் கூறினார். அனைவரும் சிரித்துவிட் டோம். கவிஞர் என்றால், பாட்டு எழுதினால் மட்டும் போதாது-பாடவும் தெரிய வேண்டும் எனக் கவிஞர் கூறிச் சில பாடல்களைப் பாடிக் காட்டினார். அனைவரும் மிகவும் சுவைத்துக் கேட்டு மகிழ்ந்தோம்.

பார்ப்பன நண்பர்கள்:

திருவானைக்கா சத்திரத்தில் தங்கியிருந்த எங்கள் குழுவினருள், தாழ்த்தப்பட்ட இனத்தினர், சலவைத் தொழிலாளர், பார்ப்பனர் முதலிய பல குலத்தினரும்

இருந்தனர். உணவு பரிமாறினவர்களுள் புதுவைச் சலவைத் தொழிலாளர் ஒருவர் குறிப்பிடத் தக்கவர்.

குழுவில் பார்ப்பனர் இருவர் இருந்தனர். அவர்கள் கவிஞரின் நண்பர்கள். பார்ப்பனர் இருவர் இருப்பது குழுவில் சிலருக்குப் பிடிக்கவில்லை. பிடிக்காத சிலர், பார்ப்பனர் இருவருக்கும் தெரியாமல், கவிஞரை நோக்கி, அந்தப் பார்ப்பனர் இருவரையும் இந்த இடத்திலிருந்து அப்புறப் படுத்தி விடவேண்டும் என வற்புறுத்தினர். அதற்குக் கவிஞர் சிறிதும் ஒத்துக்கொள்ளவில்லை; அவர்கள் என் நண்பர்கள்; வந்து விட்ட அவர்களை அனுப்பி விட்டு என்னால் இருக்க முடியாது. நாம் பாப்பனீயத்தைக் கண்டிக்கிறோமே தவிரப் பார்ப்பனரைக் கண்டிக்கவோ - வெறுக்கவோ செய்யவில்லை—என்று கவிஞர் அறுதியிட்டு உறுதியாகச் சொல்லி விட்டார். பார்ப்பனர் இருவரும் இறுதி நாள் வரையும் எங்களுடன் இனிமையாகப் பழகி அளவளாவி மகிழ்ந்திருந்தனர். இந்த நிகழ்ச்சி, கவிஞரின் உயரிய பண்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

விழா இறுதியில் கவிஞர் பேசிய நன்றியுரைச் சொற்பொழிவில் பல செய்திகள் தெரிவித்தார். அவற்றுள் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்:—

மக்களைப் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் - என நான்கு வகையாக ஆரியம் பிரித்திருப்பதல்லாமல், பஞ்சமர் முதலாக மேலும் சில பிரிவுகள் உண்டாக்கி வைத்திருக்கிறது. தீண்டாதவர் என்று சொல்லப்படுபவர் பஞ்சமர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதுநிற்க,- பிராமணர் பிரம்மாவின் முகத்திலிருந்தும், ஷத்திரியர் பிரம்மாவின் தோளிலிருந்தும், வைசியர்

பிரம்மாவின் தொடையிலிருந்தும், சூத்திரர் பிரம்மாவின் காலடியிலிருந்தும், (பாதத்திலிருந்தும்) தொடக்கத்தில் தோன்றியதாக ஆரியம் கூறிவைத்திருக்கிறது.

சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரியில் இருந்த காலத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தினர் சிலர் வந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுள் ஒருவர் பாரதியாரை நோக்கிப் பின்வருமாறு கேட்டாராம்:- 'ஏன் ஐயா! சிலர் பிரம்மாவின் முகத்திலிருந்தும் சிலர் தோளிலிருந்தும் சிலர் தொடையிலிருந்தும் சிலர் காலடியிலிருந்தும் பிறந்ததாகச் சொல்கிறார்களே-சரி, பஞ்சமர் எனப்படும் தாழ்த்தப் பட்ட பிரிவினர் எவ்வாறு பிறந்தார்கள்-' என்று கேட்டார். அதற்குப் பாரதியார் இறுத்த பதிலாவது:—

முதல் நான்கு பிரிவுகளையும் சேர்ந்த பயல்கள் எவனுக்கோ-எங்கெங்கோ இருந்து பிறந்தார்கள். ஆனால், பஞ்சமர் எனப்படும் தாழ்த்தப்பட்ட பிரிவினர்தான், உண்மையில் அவர்களுடைய அப்பா அம்மாவுக்குப் பிறந்தவர்கள்-என்று பாரதியார் கூறினாராம்.

இந்தச் செய்தியைப் பாவேந்தர் தமது நன்றியுரைச் சொற்பொழிவினிடையே கூறியபோது பலரும் வியப் படைந்தனர்.

# 6

# சு.ச. தொடர்பானவை

---

அணிவகுப்பு:

*சுந்தர சண்முகம் என்னும் என் தொடர்பான செய்திகள் சிலவற்றை இனிச் சொல்ல விரும்புகிறேன்:—*

*கவிஞர் புதுச்சேரி வட்டாரத்தில் எங்கேனும் செல்வதாயிருந்தால், தம்முடன் ஐந்தாறு பேரை அழைத்துச் செல்வார். சில சமயம் எண்ணிக்கை இன்னும் மிகுதியாயிருக்கும். உடன் செல்பவர்களுள் நானும் ஒருவனாக இருப்பதுண்டு. நான்கைந்து ரிக்ஷா வண்டிகள் வரிசையாகத் தொடர்ந்து செல்வது போருக்கு அணி வகுத்துச் செல்வதுபோல் இருக்கும். வழியில் இருப்பவர்கள் இந்தக் காட்சியை வியப்புடன் காண்பர்.*

கோபதிக்குப் பாடம்

*நான் மயிலம் தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர்*

பதவியை விட்டுப் புதுவைக்கு வந்து நிலையாய்த் தங்கி விட்டேன். அப்போது தொடக்கத்தில் சில திங்கள் காலம் கவிஞரின் வீட்டில் நீண்ட நேரம் தங்கி, 'குயில்' இதழின் அச்சுப் பிழை திருத்துவது உண்டு.

ஒருநாள் கவிஞர் என்னைநோக்கி, தம் மகன் கோபதிக் குத் (மன்னர் மன்னனுக்குத்) தமிழ் இலக்கியப் பாடம் கற்றுக்கொடுக்கச் சொன்னார். ஒத்துக்கொண்ட நான், முதலில் எந்த நூலைத் தொடங்கலாம் என்று வினவி னேன். 'திருவிளையாடல் புராணம் தொடங்கு' என்றார். நான் சிறிது நேரம் கவிஞரை ஏறிட்டு நோக்கினேன். அதாவது, கவிஞர் சுயமரியாதைக் கொள்கையும் கடவுள் இல்லை என்னும் நாத்திகக் கொள்கையும் உடையவ ராயிற்றே! எப்படி திருவிளையாடல் புராணம் நடத்தச் சொல்கிறார்-என்ற வியப்புடன் ஏறிட்டு நோக்கினேன்.

எனது எண்ணத்தைப் புரிந்து கொண்ட கவிஞர், 'சண்முகம்! நீ நினைப்பது எனக்குப் புரிகிறது. இங்கே புராணத்தைப்பற்றி நமக்குக் கவலையில்லை; புராணத்தில் உள்ள தமிழே நமக்குத் தேவை. திருவிளையாடல் புரா ணம் எளிய நடையிலே கதைப் போக்காக இருப்பதால் முதலில்அதைக் கற்பித்து இலக்கியப் பயிற்சிஉண்டாக்கு வது நல்லது'-என்று கூறினார். நானும் அவ்வாறே அந்த நூலையே தொடங்கி நடத்தினேன்.

## மலத்தில் கல்

நான் மயிலம் தமிழ்க் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, மயிலம் மலையில் வேறு பணி. யாற்றும் ஒருவருக்கும் எனக்கும் ஒரு மோதல் ஏற்பட்டது என்னிடம் மிகுந்த பேரருள் உடைய மயிலம் அடிகாள

ரிடம் இந்த மோதலைத் தெரிவித்தேன். அதற்கு அடிக ளார், மலத்தில் கல் போட்டால் நம்மேலேயே தெளிக்கும்; அதனால் ஒதுங்கி விடுவது நல்லது-என்று கூறி என் னையே ஆதரித்தார்கள். ஏதோ பேச்சு வந்தபோது பாவேந்தரிடம் இதைக் கூறினேன். அதற்கு அவர் கூறிய கருத்து:- 'அதுதான் மலம் என்று தெரிகிறதே- அந்த மலத்தை நடுவீட்டில் வைத்திருப்பது ஏன்?' என்பதாகும்.

## கையிருப்பு உள்ளவன்

ஒருநாள் கவிஞர் வீட்டு நடுவாசலில் அமர்ந்து நான் அச்சுப்பிழை திருத்திக்கொண்டிருந்தபோது, சிறிது தொலைவில், பார்க்கவந்தவர்களிடம் கவிஞர் பின்வரு மாறு என்னைப் பற்றிக் கூறியது என்காதில் விழுந்தது. அதாவது,- 'சுந்தர சண்முகம் பெரிய கையிருப்பு உடைய வர்-அவரைச் சொற்பொழிவிற்கு அழைத்துச் செல்லுங் கள் என்பதாம்.

## பண்ணுருட்டிக் கூட்டம்

1949-ஆம் ஆண்டு கள்ளக் குறிச்சியை அடுத்த வடக் கனந்தல் என்னும் ஊருக்கு யான் சொற்பொழிவிற்காகச் சென்று திரும்பியபோது, புதுவை வருவதற்கு வேறு பேருந்து மாறுவதற்காகப் பண்ணுருட்டியில் இறங்கினேன். அப்போது, பண்ணுருட்டியில் அன்று மாலை பாரதிதாச னார் தலைமையில் பெரியார் ஈ.வே. இராமசாமியவர் களும் பேரறிஞர் அண்ணாதுரை அவர்களும் சொற்பொழி வாற்றப் போகிறார்கள் என்ற செய்தியை அறிந்தேன். உடனே சொற்பொழிவுத் திடலை அடைந்தேன். பெரியார் காலத்தோடு வந்துவிட்டார். அவைத் தலைவர் பாரதிதாசனாரும் சொற்பொழிவாளர் அண்ணா

துரையும் மாலை ஆறு மணி ஆகியும் வரவில்லை. இருந்திருந்து பார்த்து விட்டுப் பெரியார் கூட்டத்தை ஆரம்பிக்கச் சொன்னார். பெரியார் தலைமையிலேயே கூட்டம் நடைபெறும் என்று சொல்ல ஒருவர் எழுந்த போது, விரைந்துவிரைந்து கவிஞர் வந்துவிட்டார். வேறு ஊருக்குச் சொற்பொழிவிற்காகச் சென்றிருந்த கவிஞர் அவ்வூரிலிருந்து நேரே பண்ணுருட்டிக்குவரச் சிறிது நேர மாய் விட்டது. கையில் பெட்டி (டிரங்) வைத்திருந்தார் கவிஞர். என்னை அங்கே பார்த்ததும், 'சண்முகம் இங்கேவா! பெட்டியைத் திறந்து கறுப்பு உடைகளை எடு; நான் முகங்கழுவிக்கொண்டு வந்து விடுகிறேன்' என்று சொல்லிப் பெட்டியின் திறவு கோலை என்னிடம் தந்து சென்றார். நான் அவ்வாறே எல்லாம் எடுத்துவைத்து உதவி செய்தேன். கவிஞருக்குக்கிடைத்த தேநீர் முதலிய சிறப்புகள் எல்லாம் எனக்கும் கிடைத்தன. நெடு நேரம் கழித்ததும், எந்த ஊருக்கோ சென்றிருந்த அறிஞர் அண்ணாவும் வந்து சேர்ந்தார். அன்று பெரிய சொற் பொழிவு விருந்து கிடைத்தது.

## காதலா? கடமையா?

கவிஞர் பெருமான் புனைந்த காவியங்களுள் ஒன்று "காதலா கடமையா?" என்னும் பெயருடைய படைப்பு. செய்யுள் வடிவில் உள்ள இந்த நூலுக்குக் கதைச் சுருக் கம் எழுதும்படி கவிஞர் எனக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே யான் பத்துப் பக்கத்தில் கதைச் சுருக்கம் எழுதித்தந்தேன். இடையிடையே சிறந்த பாடல் பகுதி களையும் விதந்து எடுத்துத்தந்துள்ளேன். எழுதிய காலம் 1948 ஆகும்.

நூலுக்கு முற்பகுதியில் யான் எழுதிய கதைச் சுருக்கம் அச்சடிக்கப்பட்டு அமைந்தது. கவிஞர் தம் முன்னுரையில், யான் கதைச் சுருக்கம் எழுதியதைக் குறிப்பிட்டு, என்தோழர் புலவர் சுந்தர சண்முகனார்க்கு என் நன்றி' என்று எழுதியுள்ளார். அந்நூலின் வாயிலாக வெளியுலகுக்கு என்னை அறிமுகப்படுத்திய கவிஞருக்கு என்றும் என் நன்றி உரியது.

அணிந்துரை:

1948-ஆம் ஆண்டு யான் 'தனித் தமிழ்க் கிளர்ச்சி' என்னும் செய்யுள் நூல் எழுதி வெளியிட்டேன். அந்நூற்கு அணிந்துரை தருமாறு பாவேந்தரைச் கேட்டேன். அவர் தட்டாது அணிந்துரை எழுதித்தந்தார். அது வருமாறு:-

"தனித்தமிழ்க் கிளர்ச்சி எனுமொரு நூலைத்
தனித்தமிழ்ச் செய்யுளால் உள்ளம்
இனித்திடத் தந்தார் புலவர் சண்முகனார்
இத்தமிழ் நாட்டினர் இதனில்
மனைக்கொரு படியென வாங்குக நாளும்
மணிக்கொரு முறையதைப் படிக்க.
தினைத்துணை உழைப்பில் பனைத்துணைப் பயனைச்
சேர்க்கும்இந் நூலெனல் மெய்யே".

என்பது கவிஞர் தந்த அணிந்துரைப்பாடல். யான் நூலின் மேல் அட்டையில் படத்திற்குப் பதிலாக இப்பாடலை அமைத்து விட்டேன். இப்போது இந் நூலின் படி (பிரதி) ஒன்றே ஒன்றுதான் உள்ளது. மாதிரிக்காக அப்படியைக் காத்து வைத்திருக்கிறேன்.

புதுச் சேரியில் கவிஞர் வாழ்ந்த இல்லத்தைப் புதுச் சேரி அரசினர் விலைக்கு வாங்கிக் கவிஞரின் நினைவுக் கூடம் அமைத்துள்ளனர். ஆனால் நான் அந்த இடத் திற்கு நீண்ட நாள் போகவில்லை.

சிலர் என்னிடம் பின்வருமாறு அறிவித்தார்கள்: கவிஞரின் அணிந்துரைப் பாடல் மேலட்டைப் பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள 'தனித்தமிழ்க் கிளர்ச்சி' என்னும் எனது நூல் மட்டும் ஒரு சிறிய கண்ணாடிப் பேழையில் படுத்த நிலையில் வைக்கப் பெற்று, எல்லாருக்கும் தெரியும் படி ஒரு காட்சிப்பொருளாக அணிசெய்து கொண்டுள்ளது —என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒரு நாள் நான் நேரில் சென்று அக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன். சில ஆண்டு கள் சென்ற பிறகும் சென்று கண்டேன். அது முன் போலவே வைக்கப் பெற்றிருந்தது. ஆனால் இப்போது எந்த நிலையில் உள்ள தென்று தெரியவில்லை. அந்நூலை அங்கே வைத்தவர்க்கு என் நன்றி உரியது.

## எழுத்தாளர் துணைவன்:

பிழையின்றித் தமிழ் எழுதுவதற்குத் துணைபுரியு மளவில் ஓர் இலக்கண நூல் எழுதினேன். இதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கவிஞரிடம் கேட்டேன். நூல்கட்குப் பெயர் சூட்டுவதில் கவிஞர் வல்லவர். அவ ருடைய நூல்களின் பெயர்களைப் பார்த்தால் இவ் வுண்மை விளங்கும். எனது நூலுக்கு 'எழுத்தாளர் துணைவன்' என்னும் பெயர் சூட்டும்படி கவிஞர் கூறி னார். அவ்வாறே பெயர் சூட்டி 1954ஆம் ஆண்டு இந் நூலை வெளியிட்டேன்.

## ரகர-றகர அகர முதலி:

தமிழில் ரகர-றகரங்கள் வரும் சொற்களுக்கிடையே உள்ள வேறுபாட்டை அறியாதார்க்குத் துணைபுரியும்படி, தமிழில் ர-ரௌ, ற-றே ஆகிய எழுத்துகள் இடம் பெற்றுள்ள சொற்கள் அனைத்தையும் திரட்டி அகர வரிசைப்படுத்தி ஓர் அகர முதலி நூல் உருவாக்கினேன். அதை வெளியிடும்படி கவிஞரிடம் தந்தேன். எப்படியோ– அதை வெளியிடும் வாய்ப்பு நேராமல் போய் விட்டது. அந் நூற் கையெழுத்துப் படியை ஏழு ஆண்டுகட்கு முன்பு, கவிஞரின் மகன் மன்னர் மன்னன் எங்கள் வீட்டிற்குக் கொண்டுவந்து கொடுத்துச் சென்றார். அந்நூல் எழுதியது 1948-ஆம் ஆண்டு. அதை வெளியிடும் வாய்ப்பு எப்போது ஏற்படுமோ தெரியவில்லை.

## ஆதித்தன் கனவு

சேலம் மாடர்ன் தியேட்டர் என்னும் திரையோவிய நிறுவனத்தார் ''ஆதித்தன் கனவு'' என்னும் ஒரு திரை யோவியம் (சினிமாப் படம்) எடுத்தனர். அதற்கு உரை யாடல்-வசனம் கவிஞர். அவர் விரைவாகக் கிறுக்கு எழுத்தில் எழுதிய அத்தனை வசனப் பகுதியையும் நான் நல்ல எழுத்து வடிவில் பெயர்த்து எழுதித்தந்தேன். இதனால் திரையோவியத்திற்குக் கதை வசனம் எழுதுவது எப்படி என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், யாரும் அந்த வாய்ப்பை எனக்குக் கொடுக்க மாட்டார்கள் அல்லவா? அதற்கென்று தனியாகப் பிறக்கவேண்டும் போலும்!

## வேலைக்குப் பரிந்துரை:

1951ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளர் பதவிக்கு விளம்பரம் வந்

தது. அதற்கு நானும் வேண்டுதல் (விண்ணப்பம்) அனுப்பி னேன். பல்கலைக் கழகத் தமிழ் வித்துவான் வகுப்பிற்குப் பாடம் நடத்த வேண்டும். யான் முன்னமேயே மயிலம் தமிழ்க் கல்லூரியில் வித்துவான் வகுப்பில் பாடம் நடத் திய பட்டறிவு உடையவன். பல நூல்களும் எழுதியுள் ளேன். அதனால் வேண்டுதல் அனுப்பினேன்.

அப்போது அப்பல்கலைக் கழகத்தில் மணவாள ராமா நுசம் என்னும் பெரியார் துணைவேந்தராக இருந்தார். அவர் கவிஞருக்கு மிகவும் வேண்டியவர். எனவே, கவிஞ ரைப் பரிந்துரைக்கும்படி வேண்டினேன். கவிஞரும் ஒத்துக் கொண்டார். ஒரு நாள் காலை புறப்படுவதாக இருந்த நிலையில், முதல் நாள் மாலையே, அவ்வேலை வேறு ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு விட்டதாக என் நண் பர் ஒருவர் தொலைவரி (தந்தி) வாயிலாக எனக்குத் தெரிவித்து விட்டார். அதனால் எங்கள் பயணம் நின்று விட்டது.

நான் புதுச்சேரி அரசு ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றபின், அதே அண்ணாமலைப் பல்கலைக் கழக அக ராதித் துறையில் வந்து சில காலம் பணிபுரியும்படி, தமிழ்த்துறைத் தலைவரே புதுவை வந்து நேரில் என்னைக் கேட்டார். நான் போக முடியாமற் போய் விட்டது.

எப்படியோ பல்கலைக்கழகம் ஏதாவது ஒன்றின் தொடர்பு என்னை விடவில்லை. தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தொகுப்பியல் துறைப் பேராசிரிய ராகவும் தலைவராகவும் வந்து பணிபுரியும்படி வலிய அழைக்கப்பட்டேன். வெளியூர் சென்று பணி புரிய நான்

மறுத்தும், துணைவேந்தரின் வற்புறுத்தலாலும் நண்பர் களின் தூண்டுதலாலும் 1982–83 ஆண்டு காலத்தில் தஞ்சை சென்று பணி புரிந்து, பிறகு நானாகவே பதவி விலகி வந்துவிட்டேன். நான் இதுவரை வேலை பார்த்துள்ள நான்கு நிறுவனங்கட்கும் நிறுவனத்தார்களாலேயே அழைக்கப்பெற்றேன்.

## முத்தியால் பேட்டையில்:

1948 அல்லது 1949 ஆம் ஆண்டாயிருக்கலாம் என எண்ணுகிறேன். புதுச்சேரி நகருக்கு வடக்கே ஒரு கல் தொலைவில் உள்ள முத்தியால் பேட்டையில் ஓர் இலக் கியக் கழகத்தின் ஆண்டு விழா பாவேந்தர் தலைமையில் நடைபெற்றது. பேச்சாளர்கள் பேராசிரியர் திரு அன்பழக னும் டாக்டர் நன்னனும் ஆவர். நன்னன் அப்போது இளை ஞர்; புலவர் பட்டம் மட்டுமே பெற்றவர்; கோவை உயர் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண் டிருந்தார்.

சொற்பொழிவாளர் இருவரும் சிறப்பாகக் கருத்து மழை பொழிந்தனர். நிறைவுரையாகக் கவிஞர் பல செய் திகள் தெரிவித்தார். அவற்றுள் ஒன்று: ''சுப்பிரமணிய பாரதியார் மது அருந்தியதாக அவரைச் சிலர் குறைத்துப் பேசுகின்றனர். ஏன் நாம் மது அருந்தவில்லையா''? என் பது ஒரு கருத்து. தம் வழிகாட்டியாகிய பாரதியாருக்காகக் கவிஞர் பரிந்து பேசியது அவரது நன்றியுணர்வை அறி விக்கிறது; பாரதியாரின் தாசர் அல்லவா?

கூட்டம் முடிந்ததும் சில ரிக்சா வண்டிகள் கொண்டு வரப்பட்டன. கவிஞர் வேறு யாரையும் பொருட்படுத்தா

மல் என்னை ஒரு பொருளாக மதித்து, 'சண்முகம் இங்கே வா! என் வண்டியில் நீ ஏறிக்கொள்' என்று கூறி என்னை அவர் பக்கத்தில் அமர்த்திக்கொண்டார். வண்டியில் புதுவை நகரை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவர் சொன்ன ஒரு கருத்து வருமாறு:

'என் மகன் கோபதிக்காக நான் . யாரிடமும் பரிந்துரைக்குப் போவதில்லை. அவனைத் தேர்வில் வெற்றி பெறச் செய்யவோ–அவனுக்கு வேலை வாங்கித் தருவதற்காகவோ நான் யாரிடமும் போய்க் கெஞ்சுவதில்லை. அவனுக்காகத்தான் 'பழநியம்மா மின்விசை அச்சகம்' என்னும் அச்சகத்தை அமைத்திருக்கிறேன். எனக்குப் பின்னால் அவன் இந்த அச்சகத்தை நடத்தி வாழ்க்கையை நடத்தட்டும் என்று இருக்கிறேன்' –என்று என்னிடம் தெரிவித்தார். ஆனால் கோபதியாகிய மன்னர் மன்னன் இப்போது இந்திய வானொலி நிலையத்தில் பணியாற்றுகின்றார்.

## தலைமை மறுப்பு:

புதுவை மாநிலம் 1954ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் அன்று பிரெஞ்சுக்காரரிடமிருந்து விடுதலை பெற்றது. அதன் பிறகு நடைபெற்ற புதுவை மாநிலச் சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, கவிஞர் தம் இல்லம் உள்ள காசுக்கடைத் தொகுதியில் ஒரு வேட்பாளராக நின்றார்.

அவருக்காகப் புதுவை ஒதியஞ் சாலைத் திடலில் ஒரு தேர்தல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி கவிஞர் என்னிடம் கூறினார்,

அரசு ஊழியத்தில் இருந்து கொண்டே வெளிப்படையாக அரசியல் நடத்திய கவிஞரது போன்ற துணிவு எனக்கு இல்லை. நான் ஆசிரியர் பணி செய்து கொண்டிருக்கிறேன். பணியில் இருப்பவர்கள் அரசியலில் கலந்து கொள்ளக்கூடாது என்பது விதி. எனவே, யான் இந்தக் காரணத்தைச் சுட்டிக்காட்டி, யான் தலைமை தாங்க இயலாமையைப் பணிவுடன் தெரிவித்துக் கொண்டேன். இந்தச்செய்தி கவிஞரின் மகன் மன்னர் மன்னனுக்கும் தெரியும்.

எனக்கு எவ்வளவோ உதவி செய்த கவிஞருக்கு யான் இந்தச் சிறிய உதவியைக்கூடச் செய்ய முடியாமையை எண்ணிச் சொல்லொணாத் துயரம் எய்தினேன்.

## தெ. பொ. மீ-க்கு மறுப்பு:

புதுச்சேரியில் ‘கல்விக் கழகம்’ என்னும் ஒரு கழகம் உள்ளது. அதன் இலக்கியப் பணிகள் அளப்பரியன. தேசிகப் பிள்ளை என்பவர் தலைவராகவும் திருநாவுக்கரசு என்பவர் செயலாளராகவும் இருந்து பெரும்பணி புரிந்துள்ளனர்; அந்தக் கழகத்தின் ‘கழகப் புலவர்’ என்னும் தகுதியை எனக்கு அளித்திருந்தனர்.

1951 ஆம் ஆண்டு கல்விக் கழகத்தின் வெள்ளி விழா ஒரு வார காலம் பெருங் கூட்டத்துடன் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வெள்ளி விழாவில் ‘கல்விக் கழகக் கட்டுரைகள்’ என்னும் மிகப் பெரிய மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அச்சுப் பிழைதிருத்தி அதை வடிவமைத்தவன் கழகப் புலவனாகிய அடியேன்தான். அதில் அறிஞர்கள் பலரின் சிறந்த கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. அக்கட்டுரைகளுக்கிடையே பாவேந்தரின்

பாடலும் இடம் பெற்றிருந்தது. விழாவில் அம்மலரை வெளியிட்டவர் தமிழ்ப் பேரறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களாவார்.

மீனாட்சி சுந்தரனார்க்கும் பாவேந்தருக்கும், முன்பே பல ஆண்டுகளாகக் கருத்து மோதல் உண்டு. மலரை வெளியிட்ட தெ.பொ.மீ. பாரதிதாசனது பாடல் பகுதியைக் குறிப்பிட்டு, 'பாரதிதாசன் என்ன கட்டுக் கதையா- அவர் பல கட்டுக் கதைகள் எழுதியிருந்தாலும்...' என்று பாவேந்தரைப் பற்றிக் குத்தலாகப் பேசினார். இது பலருக்குப் பிடிக்கவில்லை.

அடுத்து, விழாவின் ஒரு நாள் காலை நிகழ்ச்சி தெ. பொ.மீ. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அன்றைக்கு, 'செந்தமிழ் ஆற்றுப் படை' என்னும் எனது நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. நூல் தொடர்பாக யான் சொற்பொழி வாற்றினேன். தெ.பொ.மீ. குறிப்பாக என்னைத்தாக்கிக் குறைவு படுத்திப் பேசினார். பொறுத்திருந்தேன்.

என்னை அடுத்து, தமிழ்நாடு அரசுக் கல்லூரிகளில் முதல்வராய்ப் பணியாற்றிய முதுபெரும்புலவர் சரவண- ஆறுமுக முதலியார் சொற்பொழி வாற்றினார். அவர் பாரதிதாசனின் பெருமையைக் கூறி ஒரு பாடலைப் பாடத் தொடங்கினார். உடனே தெ.பொ.மீ. அவரை இடை மறித்து, நேரமாய்விட்டது- இங்கே யார் பாடலையும் பாடவேண்டாம்-சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள் என்றார். பாடக் கூடிய பாட்டுத்தான்-பாடுகிறேன் என்று ஆறுமுகனார் அறிவித்தார். அதன் பிறகும், பாடக் கூடாது எனத் தெ.பொ.மீ. மறுத்து விட்டார்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த நான், உணர்ச்சிவயப் பட்டு எழுந்து மேடைமேல் பாய்ந்து ஏறி ஒலி பெருக்கி யைப் பிடித்துக் கொண்டு தெ.பொ.மீ.யை மறுத்துப் பேசத் தொடங்கிவிட்டேன். அதோடு தெ.பொ.மீ. முடித் துக் கொண்டார். கூட்டமும் அதோடு முடிந்துவிட்டது. அன்று மாலையில் தெ.பொ.மீ.யின் தலைமையில் நடந்த கூட்டத்தில் டாக்டர். மு.வரதராசனார் தெ.பொ.மீயை மறுத்துப் பேசினார்.கூட்டம் பரபரப்பாய் நடந்து முடிந் தது.

## கூடலூர்க் கூட்டம்

கடலூர்ப் பகுதியைச் சேர்ந்த பழைய நகரம் கூட லூர். தென்னார்க்காடு மாவட்டத்தில் கடற் கரையில் உள்ள கூடலூர் இது. இவ்வூரில் 1949 ஆம் ஆண்டு, தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்க நாள் என்று கூறப்படும் சித்தி ரைத் திங்கள் முதல் நாளன்று மாலை ஒரு பொதுக் கூட் டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. தலைவர் பாவேந் தர்; சொற்பொழிவாளன் நான். இதை முன் நின்று நடத் தியவர்கள், இப்போது விடுதலை நாளிதழின் ஆசிரியராக உள்ள கி. வீரமணியும், கூடலூர்ச் சாமிநாதனும் இன்ன சிலருமாவர். அப்போது வீரமணி ஒன்பதாம் வகுப்பு படித் துக் கொண்டிருந்தார்.

கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சித்திரை முதல் நாள் பிற்பகல் கவிஞரும் நானும் புறப்பட்டோம். ஒரு கையிழுப்பு வண்டியில் புதுவைப் பேருந்து நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது, வழியில் உள்ள ஒரு நிழலோ விய (Photo) நிறுவனத்தில் வண்டியை நிறுத்தி நிழலோ வியம் எடுத்துக்கொள்ள உள்ளே சென்றோம்.

உரிமைபெறாத பிரஞ்சிந்தியாவிலிருந்து உரிமை பெற்றுள்ள இந்தியப் பகுதிக்குள் சென்றுவரப் பயண இசைவுச் சீட்டு (Pass-Port) எடுக்கவேண்டுமென இந்திய அரசு ஆணைபிறப்பித்திருந்தது. சீட்டில் நிழலோவியம் ஒட்ட வேண்டும். அதற்காக இருவரும் தனித்தனியாக நிழலோவியம் எடுத்துக் கொண்டோம். பிறகு இருவரும் சேர்ந்தாற்போல் அமர்ந்து ஒன்று எடுத்துக் கொண்டோம். இருவரும் இணைந்து எடுத்துக்கொண்ட நிழலோவியத்தை யான் எங்கள் வீட்டில் தேடுகிறேன் - தேடுகிறேன்- தேடிக் கொண்டேயிருக்கிறேன்-இன்னும் கிடைக்கவில்லை.

இருவரும் கூடலூர் போய்ச் சேர்ந்தோம். கூட்டம் நடைபெற்றது. எனது பேச்சுக்குப் பின்பு பாவேந்தர் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றினார். இறுதியில் நன்றி சொல்ல வந்த ஒன்பதாம் வகுப்பு மாணவராகிய வீரமணி ஒருமணி நேரம் வெளுத்துக் கட்டிவிட்டார். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பது இதுதான் போலும்!

கூட்டம் முடிந்ததும் இரவு விருந்து நடந்தது. புலால் உணவே மிகுதி. ஆட்டுக்கறி, மீன். இறால், முட்டை முதலிய உணவுப் பொருள்கள் இருந்தன. வட்டித்திருந்த இலையில் அமரு முன்பு, கவிஞர் என்னை நோக்கி, 'சண்முகம்! உனக்குப் புலால் வருமா?' என்று கேட்டார். நான் 'முட்டை வரும்' என்றேன். உண்ணத் தொடங்கினோம்! மரக்கறியும் உண்டு.

நான் கவிஞரைக் குறைத்துக் கூறுவதாக எவரும் எண்ணக் கூடாது. ஆங்கிலப் பேரறிஞர் ஜான்சனின் (Samuel Johnson) வரலாற்றை அவருடைய நண்பரும் வழக்கறிஞருமாகிய பாசுவெல் (Boswell) என்பவர் எழுதி

யுள்ளார். இந்தநூலின் பெயர் "Boswell's Life of Johnson" என்பதாகும். இந்நூலே, உலகில் எழுதப்பட்டுள்ள தனி மாந்தரின் வாழ்க்கை வரலாற்று நூல்களுக்குள் முதன்மை யானது என்று புகழப்படுகின்றது. காரணம்: இந்த நூலில் ஜான்சனைப் பற்றிய எளிய செய்திகளும் சில்லறைச் செய்திகளும் சுவையாகச் சொல்லப்பட்டிருப்பது தானாம். ஜான்சன் உண்ணும்போது இரு கன்னங்களும் புடைத்துக் கொள்ளுமாம். இவ்வாறு ஜான்சன் உண்ணுதல் முதற் கொண்டு பல எளிய செய்திகள் ஓவியப்படுத்தப்பட்டுள் ளன. நான் சென்னைப் பல்கலைக் கழக இன்டர்மெடியட் (Intermediate)தேர்வுக்குப் படித்தபோது, இந்த நூல் ஆங் கில ஆழ்ந்த உரைநடை நூல் பாடமாக (Detail-Prose) வைக்கப்பட்டிருந்தது. அதனால் இந்நூல் பற்றி எனக்குத் தெரியும்.

எனவே, பாவேந்தர் உணவு கொண்டதைப் பற்றி யான் கூறலாம். கூட்டம் நீண்ட நேரம் நடந்ததால் உணவு கொள்ள இரவு பதினொருமணி ஆய்விட்டது. அந் நேரத்தில் எல்லாப் புலால் உணவையும் கவிஞர் மகிழ்ந்து உண்டார். அவித்துச் சாந்து பிசறி வறுத்த முழு முழு முட்டைகளை உருளைக்கிழங்கு பொரியலைத் தள்ளுவது போல் கவிஞரின் இலையில் தள்ளினர். அந்தக் காட்சி யைக் கண்டதும், எனக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு விட்டதுபோல் தோன்றிற்று. ஆனால் கவிஞருக்கு ஒரு கோளாறும் இல்லை.

புகையிலை வாணிகம் புரிந்த திரு சாமிநாதன் என் பவரின் இல்லத்தில் தான் இவ்விருந்து நடைபெற்றது. அவருக்கு நன்றி செலுத்திவிட்டு மறுநாள் காலை புதுவை திரும்பினோம்.

நான் உண்டவை

கவிஞருடன் பல்லாண்டு பழகிய நான், அவரது வீட்டில் உண்டவை பற்றிக் கூறுவேன்:

1. ஒரு நாள் வெந்நீர் வாங்கிப் பருகினேன்.

2. ஒரு நாள் பொரிவிளங்காய் உருண்டை என்னும் தின்பண்டம் ஒன்று தந்தார்கள்-தின்றேன்.

3. வெளியூர்ச் சொற்பொழிவிற்காக ஒரு நாள் காலை கவிஞரும் யானும் செல்லவேண்டியிருந்தது. எந்த ஊருக்கு என்று இப்போது நினைவில்லை. முதல் நாள் மாலையே கவிஞர் என்னை நோக்கி, 'சண்முகம்! நீ நாளை அதிகாலையிலேயே வந்து விடு-உங்கள் வீட்டில் சிற்றுண்டி சாப்பிட வேண்டாம்-நேரமாகி விடக்கூடும்-நீயும் எங்கள் வீட்டிலேயே சிற்றுண்டி அருந்திச் சீக்கிரம் புறப்படலாம்' -என்றார். யான் அவ்வாறே மறுநாள் மிகவும் காலையிலேயே கவிஞர் வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

கவிஞர் தனியாகச் சாப்பிட்டிருக்கிறார். யான் சென்றதும் எனக்கு இரண்டு தோசைகளே பரிமாறப்பட்டன. பின் யான் அங்கிருந்த ஒரு மிதிவண்டியை எடுத்துக்கொண்டு விரைவாக எங்கள் வீட்டிற்குப் போய், இரண்டு இட்டலியும் காபியும் சாப்பிட்டுவிட்டு, கவிஞர் புறப்படுவதற்கு முன்பே விரைவாக வந்து சேர்ந்து விட்டேன். அந்த வயதில் இரண்டு சிறிய தோசைகள் போதவில்லை.

4. ஒரு நாள் மாலை கவிஞரும் யானும் வீட்டு நடு வாசலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். மாடியிலே இராசாக் கண்ணனாரும் வேறு ஒருவரும் வந்து தங்கியிருந்

தனர். சிலேபியும் காராசேவும் காபியும் கவிஞருக்கு முன்பும் எனக்கு முன்பும் மேசைமீது வைக்கப்பட்டன. நான் பின் வருமாறு கூறினேன்;- 'நமக்கு எதற்குச் சிற்றுண்டி? இவற்றை மேலே மாடியில் இருக்கிற இருவருக்கும் அனுப்பி விடலாம்' என்றேன் நான். கவிஞர், 'ஆமாம்பா' என்று கூறி மேலே அனுப்பச் செய்து விட்டார். மீண்டும் கவிஞருக்கும் எனக்கும் அந்த உணவுப் பொருள்கள் வேறு தட்டுகளில் கொண்டு வந்து வைக்கப்பட்டன. கவிஞர் என்னை நோக்கி, 'சண்முகம்! சிற்றுண்டிகள் நிரம்ப உள்ளன – நாமும் சாப்பிடலாம் – எடுத்துச் சாப்பிடு'-என்றார். பின்னர் யானும் சாப்பிட்டேன். யான் கவிஞர் வீட்டில் உண்டவை இன்னவையே—இவ்வளவே.

பாராட்டுவிழா:

புதுச்சேரியில் குமாரசாமி செட்டியார் என்னும் பெரும் புலவர் ஒருவர் இருந்தார். என் அரிய பெரிய நண்பர் அவர். அவரது கொள்கைக்கும் பாவேந்தரின் கொள்கைக்கும் இடையே பிளவு மிகுதி. குமாரசாமி செட்டியாரின் ஆசிரியராகிய துரைசாமி முதலியாருக்கும் பாவேந்தருக்கும் இடையே பகை மிகுதி.

அவ்வாறிருந்தும், குமாரசாமி செட்டியாருக்குப் பாராட்டுவிழா நடத்த வேண்டுமென, அவருக்கும் கவிஞருக்கும் வேண்டிய ஒருவர் தூண்டியதால், அவ்விழாவினைச் சிறப்பாக நடத்தித் தரக் கவிஞர் ஒப்புக்கொண்டார். பெருந்தலைவர் காமராசரை அழைத்து அவர் தலைமையில் விழாவைச் சிறப்பாகக் கவிஞர் நடத்திக் கொடுத்தார். இது, குமாரசாமியாரின் சிறப்போடு; கவிஞரின் பெருந்தன்மையையும் அறிவிக்கிறது.

அவ்விழாவில், செட்டியாரிடம் சிற்சில சமயம் பாடம் கேட்டவர்களும் அரசு ஊழியத்தில் இருப்பவர்களுமாகிய ஐவர், செட்டியாரைப் பாராட்டிக் கவி இயற்றிக் கொண்டு வந்து படித்தனர். இது தக்கதே.

ஆனால், 'பஞ்ச பாண்டவர்' போன்ற அந்த ஐவருள் சிலர் செட்டியாரைப் புகழ்ந்ததோடு நில்லாமல், மற்ற புலவர்களை மிகவும் மட்டப் படுத்திப் பாட்டெழுதிப் படித்தனர். ஒருவர், செட்டியாரோடு 'ஒரு சுற்று வருவாருண்டோ' என்று எழுதியிருந்தார். அதாவது, முதல் ரவுண்டிலேயே மற்றவர்கள் வீழ்ந்து விடுவார்களாம். இன்னொருவர் எழுதியதாவது:- தாமரை மலரில் மொய்த்த வண்டு வேறு அருவருப்பான பொருளின் மீது மொய்க்காததுபோல, செட்டியாரிடம் பாடம் கேட்டவர்கள் வேறு யாரிடமும் பாடம் கேட்கமாட்டார்கள் என்று எழுதியிருந்தார்; அவர் என்னிடமும் பாடம் கேட்டுள்ளார். மற்றொருவர் பின்வருமாறு எழுதியிருந்தார்:- தொல்காப்பியப் புலமையில் செட்டியாரை 'வென்றாரும் இல்லை – வெல்ல இணையாய் நின்றாரும் இல்லை' – என எழுதியிருந்தார். இவ்விழா நாளன்று நான் வெளியூர் சென்றிருந்தேன். அதனால், இவையெல்லாம் முதலில் எனக்குத் தெரியா.

புதுச்சேரியில் தமிழ் M.A. முதலிய ஐந்து M.A. பட்டங்கள் பெற்றவரும் சட்டப்படிப்பில் M.L. தேர்வுக்குப் படித்தவரும் முதலில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவரும் பின்னர் இந்திய நாடாளுமன்ற உறுப்பினராகப் (M.P.) பணி புரிந்தவரும் இறுதியாகப் புதுவை அரசின் வழக்கறிஞராகத் (Public Prosecutor) தொழில்

நடத்தியவருமாகிய மாமேதை கு. சிவப்பிரகாசம் என்ப வர் இருந்தார். அவர் எளிதில் மற்றவரோடு பழகாதவர். அத்தகையவரையே, செட்டியார் விழாவில் மற்றவர்மேல் பொழியப்பட்ட வசைமாரி நனைத்திருக்கிறது.

மறுநாள் மாலை நான் பணி மனையிலிருந்து மிதி வண்டியில் சிவப்பிரகாசனாரின் வீடு வழியாக எங்கள் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தேன். தெருக் குறட்டில் நின்றிருந்த வணங்காமுடி மன்னராகிய கு. சிவப்பிரகாச னார் என்னைத் தெருவில் கண்டதும், 'சார் – சார்' என்று கூவிக்கொண்டு கீழே இறங்கி ஓடி வந்தார். மிதி வண்டியில் விரைவாகச் சென்று கொண்டிருந்த நான், கீழே இறங்கிச் சிவப்பிரகாசனாரை நோக்கி 'நீங்கள் உங் கள் வாயிலிலேயே நில்லுங்கள் – நான் அங்கு வருகிறேன்'– என்று சொன்னேன். அதற்கு அவர், என்னை நோக்கி, 'நீங்கள் அங்கேயே நில்லுங்கள் – நான் வருகிறேன்' என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்து என்னை அடைந்தார்.

என்னங்க, ஏதாவது சிறப்பு (விசேடம்) உண்டா என்றுநான் அவரை வினவினேன். நேற்றுக் குமாரசாமி செட்டியாரின் பாராட்டு விழாவிற்கு நீங்கள் சென்றிருந்தீர் களா? என்று என்னை வினவினார். நான் ஊருக்குச் சென்றிருந்தேன் – அதனால் போகவில்லை – என்றேன். நேற்று மற்ற புலவர்களை யெல்லாம் மட்டப்படுத்திப் பேசினார்களாமே - உங்கட்குத் தெரியுமா?– என்று கேட் டார் அவர். எனக்குத் தெரியாது – யான் சுவடியை வாங்கிப் பார்க்கிறேன் – என்று சொல்லிச் சென்று விட் டேன். மறுநாள் கவியரங்கச் சுவடியொன்றை ஒருவரிட மிருந்து தருவித்துப் படித்துப்பார்த்து, சிவப்பிரகாசனார் சொன்னது உண்மைதான் என்று தெளிந்து கொண்டேன்.

பிறகு ஒரு நாள் கவிஞரை வீட்டில் கண்டேன். அப்போது இன்னும் இருவர் அமர்ந்திருந்தனர். குமாரசாமி செட்டியாரின் பாராட்டு விழாவில் மற்ற புலவர்கள் மட்டப்படுத்தப்பட்டதைப் பற்றிக் கேட்டேன். அதற்கு அவர், சிரித்துக்கொண்டே நான் முன்கூட்டி அந்தக் கவிதைகளைப் பார்க்கவில்லைப்பா- பார்த்திருந்தால், சில பாடல்களை நீக்கச் சொல்லிவிட்டிருப்பேன் என்றார்.

பிறகு நான், தொல்காப்பியப் புலமையில் குமாரசாமி செட்டியாரை வென்றாரும் இல்லை - வெல்ல இணையாய் நின்றாருமில்லை' என்று பாடப்பட்டிருக்கிறதே – இது வேறு யார் தவறும் இல்லை; குமாரசாமி செட்டியாருக்கு மட்டும் புரியும்படியாகவும் மற்றவர்க்குப் புரியாதபடியும் தொல்காப்பியத்தை எழுதி விட்டுப் போனானே தொல் காப்பியன் - அவனை மிதியடியால் அடித்திருக்க வேண்டும் – என்றேன். கவிஞரின் முகம் கறுத்து விட்டது – சினக் குறிப்பு காணப்பட்டது. உணர்ச்சிவயப்பட்டு நாம் சொல்லி விட்டோமே என்று அஞ்சினேன்.

ஆனால் கவிஞர் சமாளித்துக்கொண்டு, உடன் இருந்த இருவரை நோக்கி, குமாரசாமியைவிட சண்முகம் நல்ல ஆராய்ச்சியாளன்; நாம் இவனுக்குப் பாராட்டுவிழா நடத்த வேண்டும் என்று கூறிப் போக்கு காட்டி என்னை அமைதிப் படுத்தினார். நானாக இல்லாமல் வேறு யாராவது கவிஞரிடம் இவ்வாறு கூறியிருந்தால், அவர் சினத்தை அடக்க முடியாதவராய் 'டேய் வெளியே போடா' என்று விரட்டியிருப்பார். ஏதோ பழகிய பழக்கத்தால் என்னைப் பொறுத்தருளினார். நான் மெதுவாகத் தப்பித்துக் கொண்டு வந்துவிட்டேன்.

## வார்க்கால் பட்டுத் திருமணம்

புதுச்சேரிக்காரராகிய பொன் வேங்கடேசன் என்னும் புலவர் நெல்லிக்குப்பத்தில் தமிழாசிரியர் வேலை பார்த்தார். நெல்லிக் குப்பத்திற்கு அண்மையில் உள்ள வார்க்கால்பட்டு என்னும் ஊரில் அவருக்குக் கவிஞர் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முதல் நாள் மாலை நானும் சிலரும் கவிஞருடன் வார்க்கால் பட்டுக்குப் பேருந்தில் சென்று கொண்டிருந்தோம். வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது. வண்டிக்குள்ளே செலுத்துநர் (கண்டக்டர்) அடிக்கடிக் குழலொலி (விசில் ஒலி) செய்தார். அதிலிருந்து எச்சில் வெளிப்பட்டுப் பலர்மேல் தெளித்தது. அப்போது கவிஞர், 'வெளியிலும் மழை – உள்ளேயும் மழையா?' என்று கிண்டல் பண்ணினார். அனைவரும் சிரித்தனர்.

மறுநாள் காலை திருமண நிகழ்ச்சி முடிநததும் வாழ்த்துரை தொடங்கப்பட்டது. திருக்குறளார் முனிசாமி, கி. வீரமணி, நான் உட்படப் பலர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாகப் பேசியவர்கள் நானும் திருக்குறளாருமாவோம். திருக்குறளாருக்கு முன் நான் பேசினேன். 'மணமக்கள் நல்ல பிள்ளைகளைப் பெற்று நீடூழி வாழ்க' எனக் கூறி என் வாழ்த்துரையை நிறைவு செய்தேன்.

எனக்கு பின், என் நெருங்கிய நண்பரும் என்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவரும் பெரிய அறிஞருமாகிய திருக்குறளார் பேசுகையில், நகைக்சுவைக்காக, நான் சொன்ன ஒரு கருத்தைத் தொட்டார். அதாவது, நான் மணமக்கள் நல்ல பிள்ளைகளைப் பெற வேண்டும் என்று சொன்னேன் அல்லவா? அதைக் குறிப்பிட்டு, பிறக்

கும் போதே எப்படி நல்ல பிள்ளைகளைப் பெறமுடியும்? நல்லதா கெட்டதா என்பது பின்னர்தானே தெரியும்? நல்ல பிள்ளையாகப் பார்த்துக் கருவில் வைக்கமுடியுமா?- என்று நட்பு முறையில் என்னைக் கிண்டல் செய்தார்.

பிறகு கவிஞர் நிறைவுரை ஆற்றியபோது என்னைக் காப்பாற்றி விட்டார். இது தொடர்பாகக் கவிஞர் பேசிய தாவது:-

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'-

என்னும் குறளில், அறிவறிந்த மக்களைப் பெறுதல் என்று திருவள்ளுவரே கூறியிருக்கிறாரே - அதேபோல் சுந்தர சண்முகமும் நல்ல பிள்ளைகளைப் பெறவேண்டும் என்ப தாகக் கூறினார். மற்றும், 'மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும்' என்றும் வள்ளுவனார் மொழிந்துள்ளார். எச் சம் என்றால் பிள்ளை. எனவே, மணமக்கள் மனம் தூய்மையானவராயிருப்பின் நல்ல பிள்ளைகள் பிறக்கும். அதனால், மணமக்கள் நல்லவராயிருக்க வேண்டும்.-என் பதைச் சுந்தரசண்முகம் குறிப்பாகச் சுட்டியுள்ளார்.- என்று கவிஞர் கூறி நிலைமையை அமைதியாக நிரவல் செய்தார்.

## முனையிலே முகத்து நில்

1948 அல்லது 1949ஆம் ஆண்டாயிருக்கலாம் என எண்ணுகிறேன். புதுவையில், முன்பு 'டூப்ளே தெரு' என்று பெயர் வழங்கப்பட்டதும் இப்போது 'நேருவீதி' என்று பெயர் வழங்கப்படுவது மாகிய சிறப்புறு கடைவீதியின் மையத்தே 'கெப்ளே , தியேட்டர்' என்னும் ஓர் அரங்கம்

இருந்தது. அதில், மேடை நாடகம், திரையோவியம், சொற்பொழிவு முதலியவை இடம்பெற்று வந்தன.

ஒரு நாள் அந்த அரங்கத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்திற்குப் பாவேந்தர் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றினார். அவர் அங்கே கூறிய கருத்துகளுள் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்:-

ஔவையார் தம் 'ஆத்திசூடி' என்னும் நூலில், போர்க் களத்தில் சென்று நிற்காதே என்னும் பொருளில் 'முனை முகத்து நில்லேல்' என்று எழுதிவைத்துள்ளார். இது எவ்வாறு பொருந்தும்? புதுச்சேரியில் சண்டை நடந்தால் நான் திண்டிவனத்துக்கு ஓடி விடுவதா? ஔவையார் கூறியிருப்பது கோழைத்தனத்துக்கு இட்ட வித்தாகும். அதனால், சுப்பிரமணிய பாரதியார் தமது 'புதிய ஆத்தி சூடி' என்னும் நூலில், போர்க் களத்திலே போய் முதலிலே நில் என்னும் பொருளில் 'முனையிலே முகத்து நில்' என்று எழுதியுள்ளார் - என்பதாகக் கவிஞர் ஒரு கருத்து வெளியிட்டார். இந்தக் கருத்து எனக்குப் பிடித்தமாக இல்லை.

அப்போது கவிஞர் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று கொண்டிருந்தேன். ஒருநாள் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டுக் கவிஞரிடம் பின்வருமாறு கூறினேன்:-

அந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் சிறுசிறு பகுதிகட்கெல்லாம் அரசர்கள் இருந்து தமக்குள் அடிக்கடிப் போர் செய்து கொண்டிருந்தனர். நாட்டில் நிகழ்ந்த பல்வேறு போர்க் கொடுமைகளைக் கண்டு வருந்திய அன்னை ஔவையார் உலகில் இனிப்போரே கூடாது எனப் பட்டறி

வின் வாயிலாகத் தமது அறிவுரையை உலகத்தாருக்கு வழங்கினார். மேலும், ஔவையார் அதே ஆத்திசூடி நூலில் மற்றோரிடத்தில், உலகத்தில் போரே நடக்கக் கூடாது என்னும் பொருளில் 'போர்த்தொழில் புரியேல்' என்று கூறிவைத்துள்ளார். இதற்கும் ஏட்டிக்குப் போட்டி யாகப் பாரதியார் தமது புதிய ஆத்திசூடி நூலில்'போர்த் தொழில் பழகு' என்று எழுதிவைத்துள்ளார், ஆனால், பாரதியாரின் பாடலுக்கு ஒரு வகையான வழுவமைதி கூறலாம்.

ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி ஆண்டு கொண்டிருந்த காலத்தில், இந்திய மக்களுட் பலர் அவர் களை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தனர். அவ்விடு தலை வீரர்களுள் பாரதியாரும் ஒருவர். எனவே, இந்திய மக்கட்கு வீர உணர்வை ஊட்டுவதற்காக, அவர், 'முனை யிலே முகத்து நில், 'போர்த் தொழில் பழகு' என்னும் புரட்சிக் கருத்தை வீசியிருக்கலாம். இது காலச் சூழ் நிலைக்கு ஏற்பக் கூறப்பட்டிருக்கலாம்.

எனவே, ஔவையாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப் பெண் தரவேண்டும்; பாரதியாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் தரவேண்டும். ஆனால், போர்த்தொழில் புரிவது இந்தக் காலத்திற்கு ஏலாதது; இந்தக் காலத்துக்கு ஔவையார் கூற்றே பொருந்தும் - என்று கவிஞரிடம் துணிந்து கூறினேன். ஈண்டு, கவிஞரின் படைப்பாகிய

'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்'

(பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி) என்னும் பாடல் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது.

நான் கூறியதை அமைதியாகவும் வியப்புடனும் கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் பின்வருமாறு கூறி என்னை மடக்கிவிட்டார் :

போர் கூடாதுதான். ஔவையார் கூறியிருப்பதும் ஒரு வகையில் சரிதான். ஆனால் ஔவையாரின் கூற்று இந்தக் காலத்திற்குப் பொருந்தாது. ஏனெனில், நாம் தமிழ் நாட்டில் வீழ்ந்து கிடக்கின்ற தமிழை மீட்க வேண்டும் - சாதி மதப் பூசல்களை வெல்ல வேண்டும் - அதற்காக நம் மக்கட்கு மற உணர்வு ஊட்டப்படவேண்டும். அந்தப் பணிக்கு உறுதுணையாக நாம் பாரதியாரின் பாடல்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் - என்று கவிஞர் கூறினார். நான் ஏற்றுக் கொண்டவன்போல் வாய்பேசாது இருந்து விட்டேன்.

# 7

# சில வாழ்க்கைத் துணுக்குகள்

பாவேந்தர் வாழ்க்கை தொடர்பான சில துணுக்குச் செய்திகளைக் காண்பாம்:

நாம் அரசு ஊழியத்தை மட்டும் நம்பியிருக்கக்கூடாது; அரசு ஊழியம் போய்விட்டால் என்ன செய்வது?அதனால் ஒரு விறகுக் கடையாவது வைத்திருக்க வேண்டும் என்று என்னிடம் ஒருநாள் கூறினார்.

முற்பகல் 10 மணிக்கு வீட்டில் ஏதாவது ஒரு பொரியல் அதாவது, கத்தரிக்காய் - வெள்ளரிக்காய் - கோசு - கேரட் - இவற்றுள் ஏதாவது ஒன்றைப் பொரியல் செய்து தந்து ஏதாவது ஒரு 'சூப்' வைத்து வீட்டில் கொடுப்பார்கள் - என்று சொல்லியிருக்கிறார்.

### அடையாளம் கூறல்:

ஒரு நாள் கவிஞரும் நானும் தெருக் குறட்டில் இருந்த விசிப் பலகையில் அமர்ந்திருந்தோம். வெளியூரார் இருவர் வந்து, யாரோ ஒருவரது வீடு எங்கே இருக்கிறது என்று விசாரித்தார்கள். யார் வீடு - அவர் என்ன செய்கிறார் - அவர் பெயர் என்ன - என்று எப்படி எப்படியோ கவிஞர் அடையாளம் கேட்டுப் பார்த்தார் அவர்கட்குச்சொல்லத் தெரியவில்லை. பிறகு வீடு எப்படி காட்ட முடியும்? இறுதியில், கவிஞர் நான்கு வீடுகள் தாண்டி உள்ள ஒரு வீட்டில் உட்கார்ந்திருந்த ஒருவரைக் காட்டி, அவர்தான் - அவரைப்போய்ப் பாருங்கள் - என்று கூறி அனுப்பி விட்டுப் பெரிதாய்ச் சிரித்தார். ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்குக் கவிஞர் பின்வருமாறு சொன்னார். நமக்கு அடையாளம் தெரியும்படி அவர்களால் விளக்க முடிய வில்லை; அதனால் அந்த வீட்டுக்காரரைக் காட்டி விட்டால் நாம் பட்ட பாட்டை அவர் படட்டுமே - நாம் எவ்வளவு நேரம் படுவது?-ஒரு வேளை அவரால் சொல்ல முடிந்தாலும் முடியலாம் - என்று சிரித்துக் கொண்டே சொன்னார்

### ஊருக்கு உபதேசம்:

என்.எஸ். கிருஷ்ணன் ஒரு முறை கவிஞர் வீட்டிற்கு வந்திருந்த பொழுது அவர் தங்கக் கூடத்து அறையைக்கவிஞர் விட்டிருந்தாராம். அன்று மாலை அந்த அறையை எட்டிப்பார்த்தபோது, கிருஷ்ணன் ஏராளமாக மது அருந்தித் தாறு மாறாகப் படுத்துக்கிடந்தாராம் இதைக் கவிஞர் என்னிடம் கூறியபோது, திரையோவியம் வாயிலாக மது விலக்கு விளம்பரம் செய்த அழகு இதுதான் போலும், என்று எண்ணினேன். ஆனால், தன்னால் இயலாவிடினும்-

பிறருக்கு அறிவுரை வழங்குவதில் பெரிய தவறு ஒன்றும் இல்லை.

## கணேசா, காபி...

ஒருநாள் கவிஞர் என்னிடம் பின்வரும் செய்தி ஒன்றைக் கூறினார். புதுச்சேரியில் கந்தசாமி பிள்ளை என்னும் பெரிய வணிகர் உள்ளார். புதுச்சேரியிலுள்ள கந்தன் டாக்கீசு அவருடையதுதான். திரையோவியம் தொடர்பாகக் கந்தசாமி பிள்ளையவர்கள் சென்னை சென்று வருவார் போலும். கவிஞரும், கதை - வசனம் - பாடல் எழுதித் தருவதால் திரையோவியம் தொடர்பாகச் சென்னை செல்வதுண்டு.

கவிஞர் சென்னையில் உள்ள திரையோவிய நிறுவனம் ஒன்றில் அமர்ந்திருந்த பொழுது, புதுவைக் கந்தசாமி பிள்ளை அங்குச் சென்றாராம் இவர் கவிஞரிடத்தில் படித்த மாணாக்கராம். இவரைக்கவிஞர் பார்த்ததும் பக்கத்தில் இருந்த ஒருவரைப்பார்த்து, என்மாணவன் வந்து விட்டான்; போய்க் காபி வாங்கிக் கொண்டு வா என்று அனுப்பினாராம். காபி வாங்கி வந்தவர்யார் என்றால் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தானாம்.

சிவாஜி கணேசன் அப்போதுதான் திரை யுலகத்தில் புகுந்திருக்கிறார். கவிஞர் அவரைப் பார்த்துத்தான், 'கணேசா! என் மாணவன் வந்து விட்டான்; போய்க் காபி வாங்கி வா' என்று சொல்லியிருக்கிறார்.

இந்த நிகழ்ச்சியால், கவிஞர் தம்மாணாக்கர்களிடத்தில் செலுத்தும் அன்பின் செறிவை அறிந்து கொள்ளலாம். கவி

ஞர் தம் இறுதிக் காலத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணே சனின் உதவியைக் கொண்டு 'பாண்டியன் பரிசு' என்னும் திரையோவியம் எடுக்க முயன்றிருக்கிறார். அது கை கூடு முன்பே கவிஞர் சென்னையில் காலமானார்.

## பெருமாள் முதலியார்

கவிஞரின் பெருமைக்கு மேலும் ஒரு சான்று நினை வுக்கு வருகிறது. தமிழகக் கல்வித் துறையில் பெரும் பத விகளை வகித்தவரும் புதுவைக் கல்வித்துறை இயக்குநரா கச் சிறிது காலம் பணியாற்றியவரும் தமிழ் நாடு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநராக இருந்தவரும் தமிழ்ப் பேரறிஞருமான மு.ரா. பெருமாள் முதலியார் என்பவர், புதுவை வழக்கறிஞர் தனராசா அவர்களின் வீட்டுத் திரு மண நிகழ்ச்சி ஒன்றுக்கு வந்திருந்த பொழுது, பாவேந்தர் வீட்டுக்குச்சென்றுபாவேந்தரின்காலில் விழுந்துவணங்கினா ராம். ஆனால் பாவேந்தர், இவ்வாறு காலில் விழுவது சரி யன்று என்று கண்டித்தாராம்,

## துண்டு சிகரெட்:

கவிஞர் அடிக்கடிச் சிகரெட் பிடிப்பவர். சிகரெட் பிடித்துக் கொண்டே எழுதினால்தான் கற்பனை ஊற்றெடுக்கும் போலும்! நள்ளிரவிலுங்கூட சிகரெட் பிடித்துக் கொண்டே எழுதுவாராம். சில நாட்களில் நள்ளிரவு நேரத்தில் சிகரெட் தீர்ந்துவிட்டிருக்குமாம். அது இல்லாமல் எழுதுவதற்கு ஓடாதாம்; நிறுத்துவதற்கும் மனம் வராதாம். அதனால், அந்த நள்ளிரவில் பெட்டிக் கடைக்குச் சென்று காவலாக உள்ளே படுத்துறங்கும் பெட்டிக் கடைக்காரரை எழுப்பிச் சிகரெட் வாங்கிக் கொண்டு வந்து எழுதுவாராம்.

ஒரு நாள் நள்ளிரவில், சிகரெட் தீர்ந்து போனமையால் பெட்டிக் கடைக்குச் சென்று கடைக்காரரை எழுப்பினாராம். அன்று தற்செயலாக உள்ளே யாரும் படுத்திருக்கவில்லையாம். கூவிப் பார்த்து விட்டுக் கவிஞர் வீட்டிற்கு வந்தாராம். என்ன செய்வதென்று புரியவில்லையாம். பிறகு திடீரென ஓர் எண்ணம் தோன்றியதாம். அதாவது, இவ்வளவு நேரம் பிடித்துக் கீழே போட்டு விட்ட துண்டு சிகரெட்டுகளின் நினைவு வந்ததாம். உடனே அவற்றையெல்லாம் பொறுக்கி வைத்துக் கொண்டு ஒவ்வொன்றாகப் பயன்படுத்தி எழுத்துப் பணியைத் தொடர்ந்தாராம்.

பீடி பிடிப்பவர்களைத் 'துண்டு பீடிகள்' என்று மட்டமாய்ப் பேசுவதுண்டு. ஆனால், கவிஞரைப் பொறுத்தவரையும், துண்டு சிகரெட்டுகள் தமிழ்ப் பாடல்களின் தலை எழுத்தைத் தீர்மானித்துள்ளன.

குறை கூறல்:

ஒரு நாள் வெளியூரிலிருந்து வந்த ஒருவர் கவிஞரைக் கண்டு அவர் பாடலிலுள்ள கருத்துகள் சிலவற்றைப் பற்றிக் குறை சொன்னார். உடனே கவிஞருக்குச் சினம் பொங்கியது. கவிஞர் கூறியதாவது:– 'நீ பெரிய குறை கண்டு விட்டாயா? நிறையே உனக்குத் தெரியாதா? உனது விருப்பம் போன்ற கருத்துடைய கவிதைகளை எழுத நான் எதற்கு? அதற்கு வேறு ஆள் பார்' என்றார். மீண்டும், வந்தவர் முன்போலவே குறை சொல்லத் தொடங்கினார். உடனே கவிஞர் என் கருத்துகள் இவை, உனக்குப் பிடித்தால் வைத்துக் கொள். இல்லாவிடில் எழுந்து போயா என்று கூறி அவரை விரட்டினார். இவ்வாறு இன்னும் எவ்வளவோ செய்திகள் உண்டு.

## ஆலங் குப்பத்தில்:

புலால் உணவு பற்றிய செய்தி ஒன்று உண்டு. பாவேந்தர் இளமையில் தொடக்கப் பள்ளி ஆசிரியராக அமர்ந்தார். புதுச்சேரிக்கு வடமேற்கே 16 கி.மீ. தொலைவில் 'ஆலங் குப்பம்' என்னும் சிற்றூர் உள்ளது. அது பிரஞ்சிந்தியாவைச் சேர்ந்த பகுதியாயிருந்தது. அங்கே ஈராசிரியர் பள்ளி' தொடங்கப் பெற்றது. பாவேந்தரும் மற்றொருவரும் அப்பள்ளியின் ஆசிரியராகச் சென்று பணியாற்றினர்.

ஆலங்குப்பம் ஒரு சிற்றூர். அங்கே உணவுக் கடை கிடையாது. ஆசிரியர்கள் காலையில் சென்று மாலை நகருக்குத் திரும்புவர். மதிய உணவுக்கு என்ன செய்வது? காலையிலேயே உடன் எடுத்துச் செல்லலாம். ஆனால் அது தேவைப்படவில்லை. அவ்வூரில் செல்வரும் வள்ளலுமான ஒரு நாயுடு குடும்பம் உள்ளது. நாயுடு அவர்கள் இரண்டு ஆசிரியர்களையும் மதியத்தில் தங்கள் வீட்டில் உணவு கொள்ளச் செய்துவிட்டார். தொடக்கத்தில், நாயுடு கவிஞரல்லாத மற்றோர் ஆசிரியரை நோக்கி, 'நீங்கள் என்ன சாப்பிடுவீர்கள்? – உங்களுக்கு எது பிடிக்கும்? – என்று கேட்டாராம். அதற்கு அந்த ஆசிரியர், 'நான் மரக்கறி உணவைத் தவிர வேறு எதுவும் சாப்பிடமாட்டேன்' என்றாராம். பின்னர் நாயுடு கவிஞரையும் அவ்வாறு வினவினாராம். அதற்குக் கவிஞர், 'நான் மாமிச உணவைத் தவிர வேறு எதுவும் சாப்பிடமாட்டேன்' என்றாராம். நாயுடு சிரித்தாராம். இது, கவிஞரே என்னிடம் நேரில் சொன்ன செய்தியாகும்.

## புலால் மறுப்பு:

புலால் உணவு தொடர்பாக மற்றொரு செய்தியும் நினைவைத் தூண்டுகிறது. சமண சமயத்தவர்கள் புலால் உணவை நினைத்தும் பார்க்க மாட்டார்கள். சமண சமயத்தவராகிய திருபால் என்னும் பெரியார் சமணம் பரப்புபவர்; கோயில்களில் கடவுளின் பேரால் ஆடுமாடு களைக் கொன்று புசிப்பதை வன்மையாகக் கண்டித்துத் தடுப்பவர். ஊர்ப் பெயர் எனக்கு நினைவில்லை - ஏதோ ஓர் ஊர்க் காளிகோயிலில் ஆடு மாடுகளை வெட்டிப் பலி யிடுவார்களாம். எருமை மாடுகள் மிகுதியாக வெட்டப் படுமாம். அவ்வூரில் அவ்வாறு பலியிடும் திருவிழா நடக்கும் நாளன்று, திருபால் என்பவர் நம் பாவேந்தரை அழைத்துச் சென்று காட்டினார்ராம். சிமட்டியால் கட்டப்பட்டிருந்த வாய்க்கால் வழியாக ஆடுமாடுகளின் குருதி விரைவாக ஓடிக்கொண்டிருந்ததாம். இந்தக் கொடுமையைக் கண்ட தும் பாவேந்தரின் மனம் மாறிவிட்டதாம். இனிப் புலால் உண்ணுவதில்லை என்று தீர்மானித்துக் கொண்டு புதுவை திரும்பினாராம்.

திங்கள் கணக்கில் வீட்டில் புலால் உணவே கிடையாது; மரக்கறி உணவு மட்டுமே சாப்பிட்டு வந்தாராம். நாள் ஆக ஆகக் கவிஞரின் உடல் சோர்ந்து விட்டதாம்; கை கால்கள் வழக்கமான வலுவை இழந்தனவாம்; மாடிகூட ஏற முடியவில்லையாம். மருத்துவரிடம் சென்று உடல் நிலையைக் கூறினாராம்.

கேட்ட மருத்துவர், 'அண்மையில் உங்கள் வாழ்க்கை யில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டதுண்டா?' என்று வினவி னாராம். புலால் உணவையே மிகுதியாக விரும்பி உண்டு

வந்த நான் சில மாதங்களாகப் புலாலை விட்டுவிட்டு மரக் கறி உணவு மட்டுமே சாப்பிட்டு வருகிறேன் என்று கவிஞர் கூறினாராம். உடனே டாக்டர், 'அதன் விளைவுதான் இது. பல ஆண்டுகளாகப் புலாலையே புசித்துப் பழக்கப்பட்டு விட்ட நீங்கள், இனிப் புலாலை நிறுத்தினால் வாழமுடி யாது-நீங்கள் மட்டுமல்லர் - உங்களுக்குப் பிறந்த பிள்ளை களும் புலால் உணவை உண்டாக வேண்டும் - எனவே, இன்றைக்கே புலால் புசிக்கத் தொடங்கி விடுங்கள்'-என்று பரிந்துரை செய்தாராம். அன்று முதல் கவிஞர் மீண்டும் புலால் புசிக்கத் தொடங்கி, இழந்த வலுவை மீட்டாராம். இச்செய்தியும் கவிஞர் என்னிடம் நேரில் கூறியதாகும்.

மருத்துவரின் பரிந்துரையைச் சிலர் மறுக்கலாம். ஆனால் சிறிது சிறிதாகப் புலாலைக் குறைத்துக் கொண்டு வந்தால் நலம் பெறலாம். மற்றும், மிகுதியாக மது அருந்திப்பழகியவர்கள் திடீரென மதுவை நிறுத்தக்கூடாது -சிறிது சிறிதாகவே குறைக்க வேண்டும் என்று சொல்லப் படுவதும் உண்டு.

### மற்போர்:

புதுச்சேரியில் ஒருவர் கவிஞரோடு பகைத்துக்கொண்டு தொல்லை கொடுத்துக் கொண்டு இருந்தாராம். அவர் வீட்டிற்கு எதிரில் ஒரு காலி மனை இருந்ததாம் இளைஞ ராகிய கவிஞர் சில நாள் சிலரை அழைத்துக் கொண்டு வந்து அந்தக் காலி மனையில் சிலம்பம், மற்போர் முதலிய பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தாராம். இது காலி மனை யின் எதிர் வீட்டுக்காரரை அச்சுறுத்துவதற்கே யாம். அவ் வாறே அவர் பின்னர் கவிஞரோடு மோதுதலைக் கைவிட்டு விட்டாராம்.

## தமிழ்ப் பாடல்:

கவிஞர் வாழ்ந்த தெருவில் உள்ள பெருமாள்கோயி லில் ஒரு மார்கழி மாதத்தில் வைகறையில் திருப்பாவை முதலிய பாடல்கள் ஒலி பெருக்கி மூலம் பாடச் செய்யப் பட்டனவாம். சில நாள் பாடியதும் இடையிலே இது அரசுத் துறைவாயிலாக நிறுத்தப்பட்டதாம். சிலர், இது கவிஞருடைய வேலையாயிருக்கலாம் என்று எண்ணி, கவி ஞரிடம் சென்று, நீங்கள்தான் நிறுத்தச் செய்துவிட்டீர் களா? என்று வினவினராம், அதற்குக் கவிஞர், கோயில் களில் தமிழ்ப் பாட்டு பாடினால்போதும் என்று தவம் கிடக்கிற நான், தமிழ்ப் பாடலை நிறுத்தச் செய்வேனா? என்று பதில் இறுத்தாராம். கோயிலின் அருகில் குடி யிருந்த பெரிய அரசு அலுவலர் ஒருவரின் முயற்சியால் இது நிறுத்தப்பட்ட உண்மை பிறகு தெரிய வந்ததாம். தூங்குதற்கு இடையூறாயிருந்ததால் அவர் நிறுத்தினாராம்.

## நூறாண்டு வாழ்வு:

ஒருநாள் மறைமலை அடிகளாரின் 'நூறாண்டு வாழ் வது எப்படி?' என்னும் நூலைப் பற்றிய பேச்சு வந்த போது, நூறுஆண்டு வாழாமல் போனால் என்ன என்று கவிஞர் கேட்டார்.

## எழுதி வைக்கும் நினைவு:

சலவைக்கு அழுக்குத் துணி போடுவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபொழுது, 'சலவைத் தொழிலாளி எத்தனையோ வீட்டு-எவ்வளவோ துணிகளை எடுத்துக் கொண்டுபோய்ச் சலவை செய்து, ஒன்று தவறாமல் அடையாளமாய்க் கொண்டு வந்து தருகிறான்; ஆனால்,

நாம் ஏழு துணி போட்டுவிட்டு எழுதி வைக்கிறோம் - மறந்து விடாமல் இருப்பதற்காக, என்று வேடிக்கையாக ஒருமுறை கூறினார். இவ்வாறு நகைச்சுவையாகவும் வேடிக்கையாகவும் பேசவும் வல்லவர் கவிஞர்.

## அழியாத பத்தினி

பாவேந்தரோடு பழகி நேரில் கண்டும் கேட்டும் அறிந்த சுவையான செய்திகளுள் இன்னும் ஒன்று அறிவிப்பேன்: பாவேந்தரின் அன்பர்களுள் ஒருவர் இராமு என்பவர். இவர் புதுவை அரவிந்தர் ஆசிரம அச்சகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தவர். இவர் ஒரு நாள் சுவையான செய்தி ஒன்றைக் கவிஞரிடம் கூறினார். நானும் உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். செய்தியாவது:-

அரவிந்தர் ஆசிரம அச்சகத்தில் வட நாட்டினர் பலரும் புதுச் சேரிக்காரர்கள் சிலரும் பணி புரிகின்றனர். புதுச் சேரிக்காரர் ஒருவர் தம் திருமணத்திற்காக விடுமுறை எடுத்தாராம். அவருக்கு அடுத்தாற்போல் அமர்ந்து பணி புரியும் வடநாட்டு மங்கை யொருத்தி, அவரை நோக்கி, நீ ஏன் விடுமுறை எடுக்கிறாய்? என்று கேட்டாளாம். எனக்குத் திருமணம் - அதற்காக எடுக்கிறேன் என்றாராம். சென்ற ஆண்டும் உனக்குத் திருமணம் என்று விடுமுறை எடுத்தாய் - இப்போதும் எடுக்கிறாயே - ஏன் உன் மனைவி இறந்து விட்டாளா? அல்லது இருவரும் மண விலக்கு செய்து கொண்டீர்களா? எது உண்மை? என்று வினவினாளாம். அதற்கு அவர், சென்ற ஆண்டு எனக்குத் திருமணம் நடைபெற வில்லை; என் அண்ணனுக்குத்தான் சென்ற ஆண்டு திருமணம் நடந்தது; இப்போது எனக்குத் திருமணம் நடக்கப் போகிறது என்றாராம். அதற்கு அப்பெண் மிகவும் வியந்து, 'இது என்ன

கொடுமை! உன் அண்ணனுக்குத் திருமணம் என்றால், அது உனக்கும் திருமணம் இல்லையா? எவ்வளவு குறுகிய மனப் பான்மை! உங்களுக்குள் ஒற்றுமை இல்லை. இரு வரும் ஒரே பெண்ணை மனைவியாக வைத்துக் கொள் ளாமல் ஆளுக்கு ஒரு பெண் தேடிக் கொள்கிறீர்களே– இது சரியா?' என்று கூறினாளாம்.

இந்தச் செய்தியை இராமு சொல்லச் சொல்ல நாங் கள் மிகவும் வியந்து நகைத்தோம். வேறொன்றும் இல்லை. ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினியாய்த் துரோ பதை இருந்தாள் அல்லவா? அதே நாகரிகம் இது, இடத் துக்கு இடம் பழக்கம் வேறு. இது தொடர்பாகச் சிங்கப் பூர்ச் செய்தி யொன்றைத் தாம் கேள்விப்பட்டிருப்பதாகக் கவிஞர் கூறினார். அதாவது:

மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் இருக்கும் வட இந்தி யர்களுள் சிலர் திடீரென இனிப்பு வழங்குவார்களாம். என்ன சிறப்பு (விசேடம்) என்று கேட்டால், இந்தியாவில் எங்கள் ஊரில் எனக்குக் குழந்தை பிறந்திருக்கிறது என்று சொல்வாராம். நீ இந்தியாவிலிருந்து இங்கு வந்து இரண்டு மூன்றாண்டுகாலம் ஆகிறதே! உனக்கு எப்படி இந்தியா வில் குழந்தை பிறந்திருக்க முடியும்? நடுவில் உன் மனைவி யும் இங்கு வந்து போகவில்லையே என்று வினவின், அதற்கு அன்னார் சொல்லும் பதில், இந்தியாவில் எங்கள் ஊரில் என் அண்ணன் இருக்கிறார் – என் தம்பி இருக்கி றான் – என்பதுதான். எனவே, இதுவும் 'ஐவர்க்கும் தேவி அழியாத பத்தினி' கதை போன்றதுதான்!

### துவைக்கும் கல் எங்கே?

நான் ஒரு நாள் பிற்பகல் கவிஞர் வீட்டிற்குச் சென் றிருந்தேன். அப்போது அங்கே, சேலம் மாவட்டம் இராசி

புரம் ஊர்க்காரர் ஒருவர் வந்திருந்தார். கவிஞர் சொற் பொழிவிற்காக அங்கே சென்றபோது பழக்கப்பட்டவரா யிருக்கலாம். நாங்கள் மூவரும் நான்கு மணிக்கே கடல் காற்று வாங்கப் புறப்பட்டுச் சென்று கடற்கரை மணலில் அமர்ந்தோம். இன்னும் பொழுது போனால் மக்கள் கூட் டம் நிரம்பிவிடும். அதனால் முன் கூட்டிச் சென்று முன் னால் வந்து விடலாம் என்பது கவிஞரின் திட்டமாயிருக் கலாம். எப்படியோ எவரும் வராத நான்கு மணிக்கே நாங்கள் சென்று உரையாடிக்கொண்டிருந்தோம்.

அப்போது இராசி புரத்தார் கவிஞரை நோக்கி, கடலைச் சுட்டிக் காட்டி, 'இவ்வளவு தண்ணீர் இருக் கிறதே! ஏன் வயலுக்குப் பாய்ச்சக் கூடாது? மழை இல்லை – தண்ணீர் இல்லை என்று புலம்புவதேன்? என்று கேட்டாரே! கவிஞரும் நானும் வாய்விட்டுச் சிரித்தோம். ஏன்சிரிக்கிறீர்கள்? நான் சொல்வது தவறா? என்று வேறு அவர் எங்களைக் கேட்டு வைத்தார்.

சேலம் மாவட்டம் தமிழகத்தின் உள் நாட்டுப் பகுதி, இங்குள்ள சிலர்க்குக் கடலைப் பற்றித் தெரியாது; கடல் நீர் கரிக்கும்–குடிக்க மட்டுமன்று – குளிக்கவும் உதவாது என்பன வெல்லாம் சிலருக்குப் புரியாது. அதனால் அவர் அவ்வாறு கேட்டுவிட்டார். அப்போது கவிஞர் இன்னொரு செய்தியை என்னிடம் கூறி வைத்தார். அதாவது:–

''சண்முகம்! இதைக்கேள். இவர் ஊர்ப் பக்கத்தார் ஒருவர் முன்பு ஒரு நாள் வந்தார். அவரையும் கடற் கரைக்கு அழைத்து வந்தேன். மணலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது அவர் பின்வருமாறு கேட்டார்:–
''ஏன் ஐயா! இவ்வளவு நீளமான தண்ணீர்க் கரை (கடற்

கரை) இருக்கிறதே! துணி துவைக்கக் கரையில் ஒரு கல் கூடப் போட்டு வைக்க வில்லையே, ஏன்?'
என்பது அவரது கேள்வி. நான் நிலைமையை அவருக்கு விளக்கிச் சொன்னேன்''– என்று கூறிக் கவிஞர் நகைத்தார். பின்பு, ஏன் வயலுக்குப் பாய்ச்ச வில்லை? என்று கேட்டவருக்கும் நிலைமை விளக்கப்பட்டது. அவர் சிறிது நாணினார்.

# 8

# துருவாச முனிவர்

நன்றாகப் பாருங்கள்:

வெயூரிலிருந்து வருபவர்கட்கு விருந்தோம்பி இவ்வளவு பரிவு காட்டும் பாவேந்தர், சிலநேரம், வெளியூரார் சிலரிடத்தில் துருவாசரைப் போல் சீற்றம் கொள்ளவும் தயங்குவதில்லை.

ஒரு நாள் காலை நான் பாவேந்தரைக் காண்பதற்காக அவர் வீடு இருக்கும் பெருமாள் கோயில் தெரு வழியே சென்று கொண்டிருந்தேன். உள்ளூர் ஆசிரியர் வடமலை என்பவர் இருவருடன் எதிரே வந்தார். நானும் வடமலையும் ஒருவருக் கொருவர் நலம் விசாரித்துக் கொண்ட பின்னர், அவருடன் இருந்த இருவரைக் காட்டி இவர்கள் யார் என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன விவரமாவது:

இவர்கள் இருவரும் (இன்ன) ஊரிலிருந்து கவிஞரைப் பார்க்க வந்திருக்கிறார்கள். (ஊர்ப் பெயர் எனக்கு நினைவில்லை) பழ வகைகள் பலவும் கொண்டு வந்துள்ளனர். இவர்களை அழைத்துக் கொண்டு கவிஞர் வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டிக் கவிஞரைப் பார்க்கவேண்டும்-என்று சொன்னேன். கவிஞர் ஆர்வத்துடன் எழுதிக் கொண்டிருக்கிறார். இப்போது இடையூறு செய்தால் சிந்தனை கலைந்து விடும்; எனவே இப்போது பார்க்க முடியாது என்ற பதில் கிடைத்தது. வெளியூரிலிருந்து வந்திருக்கிறார்கள்-அவர்களுக்காக வரச்சொல்லுங்கள் என்றேன். போனவர் கவிஞரைக் கண்டு கேட்டு வந்து மீண்டும் அதே பதிலைச் சொன்னார். நான் விட வில்லை. வெகு தொலைவில் உள்ள வெளியூரிலிருந்து வந்திருக்கிறார்கள்; கவிஞரைப் பெரிதும் மதித்துப் பொருள்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு மிக்க ஆர்வத்துடன் வந்திருக்கிறார்கள். தயவு செய்து வரச்சொல்லுங்கள் என்று மீண்டும் கேட்டுக் கொண்டேன். என் வேண்டுகோள் கவிஞரிடம் மீண்டும் அறிவிக்கப்பட்டது. அவ்வளவுதான்!

கவிஞருக்குச் சீற்றம் பொங்கி எழுந்தது போலும்! விரைவுடன் ஓடி வந்தார். எங்களை நோக்கி, 'என்னையா பார்க்க வேண்டும்-இந்தா நன்றாகப் பாருங்கள்-நன்றாகப் பாருங்கள் என்று சொல்லிக்கொண்டே, மார்புமேல் அணிந்திருந்த உள் சட்டையைக் (பனியனைக்) கழற்றி எறிந்து விட்டுச் சுற்றிச் சுற்றித் திருப்பித் திருப்பி உடம்பைக் காட்டினார். (இதை எழுதும்போது எனக்குச் சிரிப்பு வருகிறது-படிப்பவர்க்கு எப்படியோ) உடனே நாங்கள் மூவரும் தப்பித்தோம்-பிழைத்தோம் என்று வெளியே ஓடிவந்து விட்டோம்'' -என்று வடமலை கூறினார்.

நான் அவர்கட்கு ஆறுதல் கூறினேன்: ஆர்வமுடன் எழுதும்போது இடையூறு செய்தால் 'பட்டுநூல் கயிறு' அறுந்துவிடும். அதனால்தான் கவிஞர் வருத்தப்பட்டிருக் கிறார். அவர் குழந்தை உள்ளம் கொண்டவர்; அதனால் தான் குழந்தை முரண்டுவதுபோல் வந்தவர்களிடம் நடந்து கொண்டுள்ளார். அவர் மதியம் உணவருந்தி இளைப்பாறி ஓய்வு எடுத்துக் கொண்ட பின்பு மாலையில் நீங்கள் வந்து பார்த்தால் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்ற சூழ் வுரையை அவர்களுக்குக் கூறி நானும் வந்த வழியே வீடு திரும்பி விட்டேன்.

பிறகு ஒரு நாள் ஓரிடத்தில் ஆசிரியர் வடமலையைக் கண்டபோது இது குறித்து விசாரித்தேன். அவர் நல்ல பதில் சொன்னார். அதாவது:- அன்று பிற்பகல் நான் மட் டும் சென்று கவிஞரைக் கண்டு நிலைமையைக் கூறினேன். கேட்டதும் கவிஞர் அவ்விருவரையும் அழைத்து வரச் சொன்னார். காலையில் நிகழ்ந்ததற்கு வருத்தப்படா தீர் கள் என்றார். எல்லோருக்கும் தேநீர் தரப்பட்டது. பிறகு அன்போடு அளவளாவி மகிழ்ந்து வெளியூரார்கள் விடை பெற்றுச் சென்றனர். கவிஞர் கோபக்காரரானாலும் குழந்தை போன்றவர் என்பதை அவர்கள் முன் கூட்டி அறிந்திருந்ததால், உணர்ச்சி வயப்படாமல் மாலைவரை பொறுமையுடன் இருந்து கவிஞரைக் கண்டு சென்றிருக் கின்றனர் -என்று வடமலை என்னிடம் கூறிய போது யானும் மகிழ்ச்சி யடைந்தேன்.

## புரிகிறதா ?:

மற்றொரு நாள் வெளியூரார் ஒருவர் கவிஞரிடம் வந்து பேசிக்கொண்டிருந்தார். சிலர் உரையாடலின் இடை

யிடையே, 'என்ன-கண்டுபிடித்தீர்களா', 'என்ன-சொல்வது தெரிகிறதா'. 'என்ன-சொல்கிறது புரிகிறதா' என்றெல்லாம் தேவையில்லாமல் அசைச் சொற்களைப்போலச் சில சொற்களைக் கூறுவதுண்டு. அவ்வாறே கவிஞரிடம் பேசிக் கொண்டிருந்தவரும், இடையிடையே, புரிகிறதா-என்ன புரிந்ததா-என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார்.

கவிஞருக்கு மீசை துடித்தது; கண்கள் சுழன்றன; புருவங்கள் நெற்றிமேல் ஏறி இறங்கின; எழுந்து நின்றார். 'என்னய்யா எனக்குத் தெரியாததைச் சொல்லி விட்டாய்-புரிகிறதா-புரிகிறதா என்று கேட்கிறாய்; என்னவோ என்னால் புரிந்து கொள்ள முடியாததைச் சொல்லி விட்டதைப் போலப் புரிந்ததா-புரிந்ததா என்று கேட்கிறாயே-என்று உரத்த குரலில் கூவினார். வந்தவர் உடனே பதமாக நழுவி விட்டார்.

## வைக்கோல் விலை

ஒரு நாள் தெருவில் வைக்கோல் வண்டி போயிற்று. கவிஞர், வைக்கோல் கட்டு என்ன விலை என்று கேட்டார். வண்டிக்காரர் ஒரு விலை கூறினார். கவிஞர் சிறிது குறைத்துக் கேட்டார். அதற்கு வண்டிக்காரர், நல்ல விலை கேட்கிறாய்-இந்த விலை வைக்கோலுக்கு மட்டுமா? அல்லது, என் வண்டி-மாடுகளுடன் எனக்கும் சேர்த்துமா இந்த விலை -என்று நையாண்டி செய்தார். கவிஞரின் இயல்பை வண்டிக்காரர் அறியார். உடனே கவிஞர், இந்த விலை, உன் வண்டி மாடுகளுடன் உனக்கு மட்டுமல்ல-உன் குடும்பத்தாருக்கும் சேர்த்து-என்றார்.

## கோழிக் கூண்டு

ஒரு நாள் கவிஞர் தெருத் திண்ணையில் மரப் பலகை அடைத்துக் கொண்டிருந்தார். தெருவில் போன நண்பர் ஒருவர் புறாக் கூண்டா என்றார். இல்லை, கோழிக்கூண்டு என்றார் கவிஞர். நண்பர் கோழி வளர்ப்பதைச் சுட்டிக் கவிஞர் அவ்வாறு கூறினார். இவ்வாறு கவிஞரிடம் வம்புக்கு வந்து வாங்கிக் கட்டிக் கொண்டவர்கள் பலர்.

## வாழைக்காய்த் திருடர்

கவிஞர் புதுவை-முத்தியால்பேட்டை அரசினர் பள்ளியில் பணியாற்றிக் கொண்டிருந்த போழ்து, அப்பள்ளியின் தலைமையாசிரியர்க்கும் இவருக்கும் அடிக்கடி மோதல் ஏற்படுமாம். ஓய்வு நேரத்தில் கவிஞர் பாடல்கள் எழுதுவதுண்டு. தலைமையாசிரியர் இதை வைத்துக் கவிஞரைத் தொலைத்துக்கட்ட எண்ணினாராம். 'சுப்புரத்தினம் பாடமே நடத்துவதில்லை; அவரது சொந்த வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்; எனக்கு எதிர்ப்பாக மற்ற ஆசிரியர்களையும் அணி சேர்க்கிறார்'-என்று தலைமையாசிரியர் மேல் அலுவலர்க்கு எழுதி விசாரிக்க ஏற்பாடு செய்தாராம்; மற்றும் பல வகையிலும் தொல்லை தந்து வந்தாராம்.

பின்னர் மேல் அலுவலர் பள்ளிக்கூடம் வந்து, கவிஞரையும் தலைமை ஆசிரியரையும் எதிர் எதிரே வைத்துக் கொண்டு விசாரித்தாராம். இல்லாததும் பொல்லாததுமாகத் தலைமையாசிரியர் பல குற்றங்கள் சுமத்தினாராம். பின் மேலாளர், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?-என்று கவிஞரைக் கேட்டாராம். கவிஞர் ஆயத்தமாகப் 'படைக் கலம்' ஒன்று வைத்திருந்தாராம். அதாவது, பள்ளிக் கூடத்

தில் உள்ள வாழைக் குலைகளையெல்லாம் வெட்டி யாருக்கும் கொடுக்காமல் தலைமையாசிரியர் தம் வீட்டிற்கே எடுத்துச் செல்வது வழக்கமாம். கவிஞர் இந்தத் துருப்புச் சீட்டை அடித்து வெற்றி பெற்றாராம். அதாவது,- தலைமையாசிரியர் பள்ளிக் கூடத் தோட்டத்தில் உள்ள வாழைக்குலை-முருங்கைக்காய் முதலியவற்றையெல்லாம் யாருக்கும் தராமல் தம் வீட்டிற்கே எடுத்துச் சென்று விடுகிறார்; மற்றவர்க்கும் தரும்படி யான் கூறினேன். இல்லையேல் இப் பொருள்களை விற்றுப் பள்ளிக்கு வேண்டிய சுண்ணக்கட்டி (சாக்பீசு) முதலிய பொருள்களை வாங்கலாம் என்றேன் நான் இது பொறுக்காமல் தலைமையாசிரியர் என்னைத் தொலைக்கப் பார்க்கிறார் என்றாராம் கவிஞர். மேலாளர் கவிஞரை ஒன்றும் செய்யாமல் சிரித்துக் கொண்டே போய் விட்டாராம். இது கவிஞரே என்னிடம் நேரில் சொன்னது.

### ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்:

கவிஞரின் சீர்திருத்தக் கொள்கையும் தமிழ் இயக்கக் கொள்கையும் பிடிக்காத கல்வித்துறை மேலாளர் ஒருவர், கவிஞரை வேலையை விட்டுத் துரத்த ஏற்பாடு செய்தாராம். இந்தச் செய்தி படிப்படியாகப் பிரெஞ்சுக்கார ஆளுநர் (கவர்னர்) வரைக்கும் சென்றதாம். ஆளுநர் கவிஞரை விசாரித்தாராம். நீர் கல்வித்துறைக்கு எதிர்ப்பான செயல்கள் புரிவதாகச் சொல்கிறார்களே! உம்மை வேலையை விட்டு நீக்கினால் என்ன?-என்று ஆளுநர் கேட்டாராம். அவருக்குக் கவிஞர் சொன்ன பதிலாவது:-

புதுச்சேரிக் கல்வித் துறையினர் தமிழ் நாட்டிலிருந்து தமிழ்ப் பாட நூல்களைத் தருவிக்கிறார்கள். அப் புத்தகங்களில், "வாழ்க வாழ்கவே ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

வாழ்க வாழ்கவே'' என்ற பாடல் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பாடலும் புதுவையில் கற்றுப் பாடப்படுகிறது. பிரெஞ்சுக்காரரின் ஆட்சியில் ஆங்கில மன்னரைப் புகழ்ந்து பாடும் புத்தகம் கூடாது என்று நான் சொல்லி வருகிறேன். இது பொறுக்காமல் என்னைத் தொலைக்க முயல்கிறார்கள்-என்பது கவிஞர் சொன்னது. பின்னர் ஆளுநர் கவிஞரைக் காப்பாற்றி விட்டாராம். இதுவும் கவிஞர் என்னிடம் நேரில் சொன்னது.

## நீதித்துறை மோதல்

நீதி மன்றத்தில் நீதித்துறையைச் சேர்ந்த ஒருவர், 'நீ பெரிய பண்டிட் என்று நினைத்துக் கொண்டு இவ்வாறு பேசுகிறயா'-என்று கேட்டாராம். அவருக்குக் கவிஞர் அளித்த பதிலாவது:-'நான் தான் பெரிய பண்டிட்-நீங்கள் முட்டாள்' என்று நான் சொல்லவில்லையே-என்பது. இதுவும் கவிஞர் என்னிடம் நேரில் சொன்ன செய்தி.

இவ்வாறு வாழ்நாள் முழுதும் கவிஞர் எதிர் நீச்சல் அடித்தே வாழ்ந்து வந்திருக்கிறார். இத்தகையோர் உள்ளங்களில்தான் தக்க புரட்சி மலரும்.

## இல்லை என்பான் யாரடா!:

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் கடவுள் பாடல்கள் மிகப் பல எழுதியுள்ளார்கள். அவற்றுள் ஒன்று,

'இல்லை என்பான் யாரடா-என் அப்பனைத்
தில்லையிலே சென்று பாரடா'-

என்று தொடங்கும் பாடலாகும். இப்பாடல் இசைத் தட்டில் இடம் பெற்றுப் பல இடங்களிலும் பாடப்பட்டு

வந்தது. 'என்பான் யாரடா' என்று தரக் குறைவாக எழுதியிருப்பது கவிஞருக்குப் பிடிக்கவில்லை போலும். ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப் பாட்டு என்பதுபோல, இப் பாடலுக்கு எதிர்ப்பாடல் பாடினார் கவிஞர். கவிஞரின் 'குயில்' இதழில் எதிர்ப் பாடல் வெளிவந்தது; அது,

'இல்லை என்பான் நானடா-அந்தத்
தில்லையைக் கண்டு தானடா'-

என்று தொடங்கும் பாடலாகும். இப்பாடல் குயில் இதழில் அச்சடிக்கப்பட்ட போது, அச்சுப் பிழை திருத்திய வன் அடியேன். 'யாரடா'என 'அடா புடா' என்று எழுதியதினாலே நான் என்பாடலை எழுதினேன் என்றார் கவிஞர்.

இதன்பின், சுத்தானந்த பாரதியாரின் பாடல்

'இல்லை என்பார் யாரையா-என் அப்பனைத்
தில்லையிலே சென்று பாரையா'-

எனத் திருத்தம் செய்யப் பெற்று இசைத்தட்டில் பதிவு செய்யப்பட்டது; இந்தத் திருத்தத்துடன் இப்போது பாடப் பெறுகிறது.

## கம்மிணாட்டி துரோணன்:

புதுவை மாநிலத்தில் உள்ள புராண சிங்கப்பாளையம் என்னும் ஊரிலுள்ள உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவுக்கு ஒரு முறை கவிஞரும் நானும் சென்றோம். வழக்கம் போல் கவிஞர் தலைவர்; யான் சொற்பொழிவாளன். கவிஞர் சொற்பொழிவாற்றியபோது, பாரத வரலாற்றில் இடம் பெற்றுள்ள துரோணரைப் பற்றிய பேச்சு எப்

படியோ வந்து விட்டது. துரோணரைப் பற்றிக் கவிஞர் பின்வருமாறு கூறினார்:-

துரோணாச்சாரி கௌரவர்க்கும் பாண்டவர்கட்கு மட்டுமே வில்வித்தை கற்றுக்கொடுத்தான். ஏகலைவன் என்னும் வேடன் தனக்கும் வில்வித்தை கற்றுத்தருமாறு துரோணனிடம் வேண்டிக் கொண்டான். துரோணன் மறுத்துவிட்டான், பின் ஏகலைவன், துரோணனைப் போல் ஓர் உருவம் செய்து வைத்துக்கொண்டு, அதன் எதிரே வில்வித்தை பயின்றான். தன்னம்பிக்கையாலும் ஊக்கத் தினாலும் வில் பயிற்சியில் மிக்க திறமை உடையவன் ஆனான். அவன் ஒரு சமயம் அர்ச்சுனனுக்கு மேற்பட்ட திறமையை வெளிப்படுத்திய போது,துரோணன் வியந்து, நீ யாரிடம் வில்வித்தை பயின்றாய் என்று கேட்டான். உங் களிடமே என்று வேடன் பதில் இறுத்தான். நான் உனக்குக் கற்றுத் தரவில்லையே என்று துரோணன் கூறினான். உங் களைப் போல் உருவம் செய்துவைத்துக் கொண்டு அதன் எதிரில் வில்வித்தை பயின்றேன்; அதனால் நீங்களே என் ‘குரு’ என்றான் வேடன்.

கேட்ட துரோணன், ஏகலைவனை நோக்கி, நான் குரு என்றால் நீ எனக்குக் குருதட்சணை கொடுக்க வேண்டுமே என்றான். எது கேட்பினும் தருகிறேன் என்றான் வேடன். உனது வலக்கைக் கட்டை விரல் வேண்டும் என்றான் துரோணன். அவ்வாறே தன் வலக்கைக் கட்டை விரலை வெட்டிக் கொடுத்தான் வேடன்.

பாருங்கள்! வலக்கைக் கட்டை விரல் இருந்தால்தான் வில்லிலிருந்து அம்பைச் செலுத்த முடியும். எனவே, ஏகலைவனைத் தொலைத்துக் கட்ட வேண்டும் என்ற தீய

எண்ணத்தால் அவனது கட்டை விரலைக் கேட்டு வாங்கிக் கொண்டான் கம்மினாட்டி துரோணன்–என்று கவிஞர் சொற் பொழிவில் கூறினார். துரோணனைத் தரக்குறை வாய்க் கூறியிருப்பினும் சொன்ன கருத்து உண்மைதானே!

## புதுப் பெயர் வைப்பு:

கவிஞர் பேரறிஞர் அண்ணாதுரை யவர்களைக் 'குள்ளர்' எனவும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவ நாதன் அவர்களைப் புகையிலைக் கடைக்காரர் என்றும் இதுபோல் இன்னும் பிறரையும் சில சமயம் குறிப்பிடுவது வழக்கம்.

தெ.பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கவிஞர் மீனாக்கிசுந்தரனார் என ஒரு பாடலில் குறிப்பிட்டிருந்தார். வெளியூர்ச் சொற்பொழிவு ஒன்றுக்கு இருவரும் சென்றிருக்கிறார்கள். அங்கே உணவு கொண்டு கவிஞர் கை கழுவியதும், தெ.பொ. மீ. அவர்கள் தமது மேல் துண்டில் கையைத் துடைத்துக் கொள்ளுமாறு கவிஞருக்குத் தந்து, பிறகு, கவிஞரை நோக்கி, ஐயா! சொற்பொழிவு களில் என்னைக் குறைவுபடுத்தினும் பாடல்களில் குறைவு படுத்தி எழுதாதீர்கள்–என்று கேட்டுக் கொண்டாராம். கவிஞரின் பாடலுக்கு அவ்வளவு மதிப்பு உள்ளது.

## சின்ன பணம்

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் முது பெரும்புலவர்; தமிழ், வடமொழி இரண்டிலும் புலமை மிக்கவர்; உ.வே. சாமிநாத ஐயர் பெற்றிருந்ததைப் போலவே 'மகா மகோ உபாத்தியாயர்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றவர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்; தமிழ் அறிஞர்களிடையே இவருக்கு ஓர் உயர்ந்த இடம் உண்டு.இவர் தலைமையில் யான் (சு.ச.) மயிலத்திலும் சீர் காழியிலும் சொற்பொழி வாற்றி யுள்ளேன். இத்தகைய பெரியாருக்கும் பாவேந்தருக்கும் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. இதன் விவரம் வருமாறு:-

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், புதுச்சேரியில் முன்பு செயல்பட்ட இளைஞர் கழகம் என்னும் கழகத்தில் சொற்பொழி வாற்றிக் கொண்டிருந்தார்.அப்போது எளிய நடைப் பாடல்கள் இயற்றுவோரை மட்டமாகச் சாடி னார். "வெள்ளைக்காரப் பணம் சின்ன பணம்-அது வேடிக்கை காட்டுது வெள்ளிப் பணம்" என்னும் எளிய நடைப் பாடலைக் குறிப்பிட்டு, இது போன்றவை எல் லாம் பாடல்களா? இன்ன பாடல்கள் இவ்வூரிலும் எழுதப் படுகின்றன-என்று குத்தலாகப் பேசினார். அக்கூட்டத்தில் பாரதிதாசனாரும் அமர்ந்திருந்தார். எளிய நடைப் பாடல் களைப் பண்டிதமணி சாடியது கவிஞருக்குப் பிடிக்கவில்லை. மோதல் உருவாகிக் கொண்டிருந்தது.

மேலும், பண்டித மணி, 'சின்ன பணம்' என்னும் வழக்காறு பொருந்தாது. தமிழ் இலக்கியங்களில் 'சின்ன' என்னும் சொல் இடம் பெறுவதில்லை; அது மிகவும் கொச்சை வழக்காகும்; 'சிறிய' என்னும் வழக்காறே பொருத்தமானது' என்றும் கூறிவைத்தார்.

கேட்ட கவிஞர் உரியவரின் இசைவு பெற்றுப் பேசலா னார். எளியநடைப் பாடல்களின் தேவையை விளக்கினார். பின்னர்ச் 'சின்ன' என்னும் சொல்லை எடுத்துக்கொண்டு இது 'சிறிய' என்னும் பொருளில் இல்லை; 'சின்னம்

பொறித்த பணம்' என்னும் பொருளில் 'சின்ன' என்னும் சொல் உள்ளது-என்றெல்லாம் பல கூறிக் கதிரேசனாருக்கு மறுப்பு தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் நடை பெற்றபோது நான் அங்கு இல்லை; பின்னர் இதைக் கேள்வியுற்றேன். அதன் பிறகு ஒரு நாள் சென்று கவிஞரைக் கண்டபோது, இந்தச் செய்தியைக் குறிப்பிட்டுப் பின் வருமாறு ஒரு கருத்து கூறினேன்:

'சின்ன' என்னும் சொல் இலக்கிய வழக்கு அன்று என ஒதுக்கிவிடுவதற்கு இல்லை. அதற்காக, 'சின்னம் பொறித்த பணம் என்று பொருள் கூறிச் சமாளித்தாக வேண்டும் என்பதில்லை. 'சின்ன' என்னும் வழக்காற்றுச் சொல் இலக்கியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது, 'சின்ன மலர்க்கோதை' (சீவக சிந்தாமணி-2369); 'சின்னத்துணி' (சீவக சிந்தாமணி-2929;) 'நனை சின்னமும் (சின்னபூவும்) நீத்த நல்லர்' (கம்ப ராமாயணம்-பூக்கொய் படலம்-12); 'சின்னப்படும் குவனை' (திருக்கோவையர்-334); 'சின்னமாக ஈர்ந்திட' (திருவாலவாயுடையார் திருவிளை யாடல் புராணம்: 36-8);'சின்னம் பட வருத்தம் செய்தாலும்' (நீதி வெண்பா-64) முதலிய இலக்கிய வழக்காறுகளை நோக்கின் உண்மை புலனாகும்.

மற்றும் சின்னப்பா, சின்னம்மா, சின்னி, சின்னதம்பி சின்னசாமி, சின்னராசு, முதலிய பெயர்கள் மக்கட்கு இடப்பட்டிருப்பதும் ஈண்டு எண்ணுதற் குரியது. மேலும், சின்னம்மா, சின்னாயி, சின்னாத்தா, சின்னஞ் சிறிய, சின்னத்தனம், சின்னபுத்தி, சின்னது, சின்னபடி, சின்ன பையன், சின்ன மனிதன் முதலிய வழக்காற்றுச் சொற்

களும் நடைமுறையில் உள்ளன. அம்மை வகைகளுள். 'சின்னம்மை' என்னும் வகையொன்று குறிப்பிடப்படுகிறது

கோயில்களில், தேவடியார் (தெய்வத்தின் அடியவர்) ஒருவகை மேள முழக்கத்துடன் ஆடும் நடனவகைக்குச் 'சின்ன மேளம் என்னும்பெயர் வழங்கப்படுகிறது. எனவே 'சின்ன பணம்' என்பது செய்யுள் வழக்காற்றில் வந்திருப்பது தவறு அன்று என்று நான் கூறினேன்,

கவிஞரிடம் சொல்வதற் கென்றே நான் செப்பனிட்டுக் கொண்டு வந்தவை இவை. எனது உரைக்குக் கைம்மாறாகக் கவிஞரின் தலையசைப்பும் புன்னகையும் கிடைத்தன. இப் பொழுதும் சிலர் 'சின்ன' என்னும் சொல்லை ஏற்றுக் கொள்ளத் தயங்குவது வியப்பா யுள்ளது.

அருள் உள்ளம்

கவிஞர் சிலரிடம் கடுமையாக நடந்து கொண்டது உண்மைதான். அதே நேரத்தில் அவர் மிக்க அருள் உள்ள வரும் ஆவார்.

'ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ (101)

என்று, அதியமானை ஔவையார் புகழ்ந்து பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் பகுதிக்கு ஏற்பக் கவிஞரும் சில ரிடம் நடந்துகொள்வார். குறிப்பிட்ட ஓர் இரவலர் வாரத்திற்குஇருமுறை மும்முறை கவிஞர் வீட்டுத் தெரு வாயிற்படியில் வந்து நிற்பார். கவிஞர் ஓர் அணா கொண்டு வந்து அவர் கையில் கொடுப்பார். அப்போது

ஓரணா தருவது, இப்போது ஓர் உருபா கொடுப்பது போன்றதாகும்.

எங்கேயாவது - ஏதாவது வேலை வாங்கித் தரும்படி பலர் கவிஞரிடம் வந்து முறையிடுவது உண்டு. அவரவர்க்கும் குளிர்ச்சியாகத் தக்க வழி சொல்லி அனுப்புவார். தம்மால் இயலக்கூடிய தாயின் வேலையும் வாங்கித் தருவார்.

ஒருநாள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இசைக் கலையில் 'சங்கீத பூடணம்' பட்டம் பெற்ற ஒருவர் வந்து, தமது ஏழமையைக் கூறி வாழ்க்கைக்கு ஏதாவது ஏற்பாடு செய்து தரும்படி முறையிட்டுக் கொண்டார். அந்த நேரம் கிட்டத்தட்ட மதிய உணவு கொள்ளும் நேரமாகும். கவிஞர் அவரை நோக்கி, முதலில் நீ போய் ஓட்டலில் சாப்பிட்டு வா என்று கூறி முக்கால் உருபா தந்தார். அந்தக் காலத்தில் புதுச்சேரி உணவுக் கடைகளில் முழுச் சாப்பாடு முக்கால் உருபாதான். அவ்வாறே அவர் சென்று சாப்பிட்டு வந்தார். மேலும் அவரைச் சிலநாள் வைத்திருந்து ஆதரித்தார். அப்போது தம் பாடல்கள் சிலவற்றிற்கு இசையமைத்துக் கொடுக்கச் சொல்லி வாங்கி வைத்துக் கொண்டார். பிறகு, எங்கோ சென்று யாரையோ பார்க்கும்படி ஒரு பரிந்துரைக் கடிதம் கொடுத்தனுப்பினார். எங்கே-யாரை-என்பது இப்போது எனக்கு நினைவில்லை.

இவ்வாறாக, கவிஞரின் குழந்தை உள்ளத்தையும் அருள் உள்ளத்தையும் பற்றி இன்னும் எவ்வளவோ கூறலாம். ஒரு சோறு பதம் போதும் என எண்ணுகிறேன்.

# 9

# பாவேந்தரின் இறுதிப் பயணம்

நான் (சு.ச.) ஒரு மூளைக் கட்டி (Brain-Tumour)-நோயாளி. இது 1962 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. சென்னையில் உள்ள-உலகப்புகழ் பெற்ற நரம்பியல் மருத்துவமேதை (Neuro Surgeon) பா. இராம மூர்த்தியவர்களிடம் மருத்துவம் பார்த்துக் கொண்டேன். அடிக்கடிச் சென்னைக்கு நேரில் சென்றும் மடல் வாயிலாகவும் மருத்துவஅறிவுரை பெற்றுத் தேறி வந்தேன்.

1964 ஏப்ரல் திங்களில், 'B.M.R. Test' என்னும் மருத்துவ ஆய்வினைப் புதுவை அரசு மருத்துவமனையில் செய்து கொண்டு அதன் முடிவை (Result) எடுத்துக் கொண்டு தம்மிடம் வரும்படி திரு. இராமமூர்த்தி எழுதியிருந்தார். நான் அவ்வாறே B.M.R. Test முடிவு எடுத்துக் கொண்டு, 1964 ஏப்ரல் 20 ஆம் நாள் இரவு 8-40 மணிக்குப் புதுவையிலிருந்து புறப்படும் புகைவண்டியின்

இரண்டாம் வகுப்பில் ஏறிப் பயணம் செய்து கொண்டிருந்தேன்.

புகைவண்டி திண்டிவனம் நிலையத்தில் சிறிது நேரம் நின்று பின் புறப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் யாரோ விரைந்து ஏறிய ஒலி கேட்டது, அப்போது, நிலைய ஊழியர் ஒருவர், புறப்பட்டு விட்ட வண்டியின் டிரைவரை விளித்து, 'டிரைவர்! இன்னும் ஆண்பிள்ளை ஏறவில்லை- பெண் பிள்ளை மட்டும் ஏறியுள்ளார் - ஆண்பிள்ளையும் ஏறட்டும்- வண்டியை நிறுத்து என்று கத்தினார். உடனே வண்டியும் நின்றது. ஆண்பிள்ளையும் ஏறிக் கொண்டார். வண்டி புறப்பட்டுச் சென்றது.

ஏறிய ஆடவர் மனைவியை நோக்கி, நான் ஏறி இருக்காவிட்டால், நீ குழந்தைகளை வைத்துக் கொண்டு என்ன செய்திருப்பாய்? என்று கேட்டார். அதற்கு அப்பெண்மணி, 'நீங்கள் எப்படியாவது திண்டிவனத்தில் ஒரு வாடகைக் காராவது எடுத்துகொண்டு அடுத்த அடுத்த ஏதாவது ஒரு நிலையத்தில் எங்களோடு வந்து சேர்ந்து கொள்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். நீங்கள் அப்படி வராவிடின், நாங்கள் எழும்பூர் நிலையத்தில் இறங்கி உங்களுக்காகக் காத்திருப்போம்' -என்று சொன்னார். இவ்வாறு உரையாடுங் குரல்கள் இதற்குமுன் கேட்ட குரல்களாக எனக்குத் தென்பட்டன. நான் இன்னும் அவர்களைப் பார்க்கவில்லை; அதற்கு உரிய காரணமாவது:-

நான் மூளைக்கட்டி நோயாளி. B.M.R. Test முடிவு எடுத்துக் கொண்டு சென்னை செல்கிறேன். அப்போதிருந்த உடல் நிலையில் பகலில் வெயிலையோ இரவில் விளக்கையோ என்னால் பார்க்க முடியாது. பார்த்தால்

கண் கூசி மயக்கம் வரும். இருட்டிலே கூட கண்ணைத் தொடர்ந்து திறந்து கொண்டிருக்க முடியாது; அப்படி இருப்பினும் மயக்கம் வரும். இரவில் கண்களை மூடிக் கொண்டு இருட்டில் உட்கார்ந்திருப்பேன். பகலில் கண்களில் பிளாஸ்டிக் கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டு கண்களை மூடிக் கொண்டுதான் பேசுவேன்–பாடமும் நடத்துவேன் – சொற்பொழிவும் செய்வேன்· நான் பிளாஸ்டிக் கறுப்புக் கண்ணாடி அணிந்திருப்பதால், நான் கண்களை மூடிக் கொண்டிருப்பது யாருக்கும் தெரியாது. வேண்டியபோது மட்டும் சிறிதுநேரம் திறந்து பார்த்துவிட்டுப் பின் மூடிக் கொள்வேன். 1962 ஆம் ஆண்டில் மூளைக்கட்டி நோய் கண்ட பின்பு எழுதிய பல பெரிய நூல்களெல்லாம், கண்ணை மூடிக் கொண்டும் சிறிது மெள்ளத் திறந்து கீழ்ப்பார்வையால் சிறிது சிறிது நேரம் பார்த்துக் கொண்டும் எழுதப்பட்டவையே. 1962 –க்குப் பின் நான் படித்த சென்னைப் பல்கலைக் கழக B.A. தேர்வு, M.A. தேர்வுப் பாடநூல்கள் பகலில் கீழ்க் கண் பார்வையால் படித்தவையே.

மற்றும், யான், தலையை வலப்பக்கமோ – இடப் பக்கமோ – முன் பக்கமோ – பின் பக்கமோ – எப்பக்கம் சாய்த்தாலும் திடீரென மயக்கம் வந்து தடாரெனக் கீழே அடித்துவிடும். கீழே கிடக்கும் பொருளைக் குனிந்து எடுக்க முடியாது; கீழே அமர்ந்து எடுத்துக் கொண்டு பின் எழுந்து நிற்கவேண்டும்.

படுத்திருந்தால் உடனே எழுந்து நிற்கவோ-நடக்கவோ இயலாது. முதலில் மெள்ள எழுந்து சிறிது நேரம் உட்கார்ந்திருக்க வேண்டும்; பின் மெள்ள எழுந்து சிறிது நேரம் நிற்க வேண்டும்; பிறகே .மெள்ள நடக்கத் தொடங்க

வேண்டும். நடக்க முடிந்தாலும் முடியும்; நிலையாய் நிற்க முடியாது; நின்றால் கீழே தள்ளும்; எதையாவது பிடித்துக் கொண்டே நிற்க வேண்டும். வலப் பக்கம் மட்டுமே ஒருக்களித்துப் படுக்க முடியும். இடப்பக்கம் ஒருக்களித்துப் படுத்தால் இருதயம் மரத்துப்போய்ப் புண்ணாக நோகும்.

இதுகாறும் என் உடல்நிலை குறித்துக் கூறப்பட்டன வெல்லாம் இப்போதும் ஓரளவு உண்டு. ஓரளவே நலம் பெற்றுள்ளேன். இப்போது இரவிலே விளக்கு வெளிச்சத்திலே ஓரளவு நேரம் கறுப்புக் கண்ணாடி இல்லாமலேயே இருக்க முடிகிறது. ஐயையோ! பொறுத்தருள்க. சொல்ல வேண்டியதை விட்டுவிட்டு என்னைப் பற்றிச் சொல்லி விட்டேனே! இதற்கும் காரணம் உண்டு:

நான் ஏறியிருந்த புகைவண்டியின் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் மெத்தை போட்ட நீளமான இரண்டே படுக்கைகள் இருந்தன. ஒன்றில் நான் படுத்திருந்தேன். விளக்கு கண்களில் படாமல் இருப்பதற்காக, அந்தப் படுக்கையின் சாய்மானப் பக்கம் முகத்தையும் மார்பையும் வைத்துக்கொண்டு வலப்பக்கமாக ஒருக்களித்துப் படுத்திருந்தேன். இன்னொரு படுக்கை, என் பின் பக்கம்–என் முதுகுக்குப் பின்பக்கம் இருந்தது. அதில் யார் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் ஏறிய பிறகு திண்டிவனம் வரை என்னைத் தவிர வேறு யாரும் அந்தப் பெட்டியில் இல்லை. இப்போது திண்டிவனத்தில் ஏறியவர்களின் குரல்கள் அறிமுகமானவையாய்த் தென்பட்டதால், நான் மெள்ள எழுந்து அவர்கள் பக்கமாக உடம்பைத் திருப்பிப் பார்த்தபோது, மன்னர் மன்னனும் அவருடைய மனைவி மக்களும் இருந்ததைக் கண்டேன். பின் ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்திக் கொண்டோம்.

நான் மன்னர் மன்னனை நோக்கி, இந்நேரத்தில் குடும்பத்தோடு திண்டிவனத்தில் வந்து ஏறியதற்கு உரிய காரணம் என்ன என்று வினவினேன். அதற்கு அவர் கூறிய விளக்கமாவது:– 'சென்னையில் அப்பாவுக்குக்(கவிஞருக்குக்) கடுமையான மார்புவலி மாலையில் ஏற்பட்டதாகவும் சென்னை அரசுப் பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் எனக்குத் தொலைபேசி வாயிலாகச் செய்தி தெரிவிக்கப்பட்டது. புதுச்சேரியிலிருந்து புறப்படும் புகைவண்டி அப்போது புறப்பட்டு விட்டதால், வாடகைக் கார் அமர்த்திக் கொண்டு திண்டிவனத்தில் வந்து வண்டியைப் பிடித்தோம் என்று அவர் கூறினார். மனக் கலக்கத்தோடு அனைவரும் பயணம் செய்து மறுநாள் விடியற் காலை சென்னை அடைந்தோம். அன்று காலையே, உலகத்தில் ஈடு இணையற்ற பாவேந்தர் பாரதிதாசனார் இவ்வுலகை விட்டுப் பிரியா விடைபெற்றுச் சென்று விட்டார். அவர் பிரியவில்லை; அவர்தம் பாடல்களின் வாயிலாக அவர் இன்றும் நம்முடனே உள்ளார்; இனியும் என்றும் இருப்பார். வாழ்க கவிஞரின் புகழ்!

## எனது தலைமையில்:

பாவேந்தர் இயற்கை எய்திய பிறகு ஆண்டுதோறும் அவருக்கு விழா எடுக்கப்பட்டு வருகிறது. ஓராண்டு(ஆண்டு நினைவில்லை) எனது (சு.ச.) தலைமையில் பாவேந்தர் விழா நடைபெற்றது. விழாவில் பலவகையான நிகழ்ச்சிகள் பங்கு கொண்டன. அறிஞர் சிலர் சொற்பொழிவாற்றினர். சொற்பொழிவாளர்களுள் பாவேந்தரின் மகன் மன்னர் மன்னனும் ஒருவராவார். மன்னர் மன்னன் தமது சொற்பொழிவில் கூறியனவற்றுள் ஒரு கருத்து வருமாறு:–

என் தந்தையாரைப்பற்றி யாரும் எளிமையாகப் பேசக் கூடாது. பாரதிதாசன் அதோ அங்கே உட்கார்ந்திருந் தார்–இதோ இங்கே உட்கார்ந்திருந்தார்–அங்கே அவ ரோடு பேசினேன்–இங்கே அவரோடு உரையாடினேன்–என் றெல்லாம் யாரும் தம்பெருமைக்காகக் கண்டபடி என் தந் தையாரின் பெயரை எளிமையாகப் பயன்படுத்தக் கூடாது– என்ற கருத்துப்பட மன்னர் மன்னன் பேசினார். இறுதியில் யான் நிறைவுரை கூறுகையில், பாவேந்தர் பற்றிய பல செய்திகளை அறிவித்த பின்னர், மன்னர் மன்னன் கூறிய தாக மேலே குறிப்பிடப்பட்ட கருத்து பற்றியும் என் கருத் தைச் சொன்னேன் அதாவது:–

பாவேந்தரைப் பற்றிக் கண்டபடி எளிமையாகப் பேசக் கூடாது–அவர் பெயரை அளவோடு பயன்படுத்த வேண் டும்–என்னும் கருத்துப்பட மன்னன் மன்னர் பேசினார். பாவேந்தரைப் பழித்தும் குறைத்தும் மட்டப் படுத்தியும் பேசக் கூடாதே தவிர, மற்றபடி, அவரைப் பற்றி உயர் வாக யார் வேண்டுமானாலும் பேசலாம்–எங்கே வேண்டு மானாலும் பேசலாம் – அவரைக் குறைவு படுத்தாமல், எவ் வளவு எளிய(சாதாரணமான)செய்தியானாலும் பேசலாம்- அவரைப் பற்றி எப்போதும் பேசிக்கொண்டிருந்தால்தான் அவர் நினைவு நாட்டில் மறக்கடிக்கப் படாமல் இருக்கும்– அவரும் மறைக்கப்படாமல் இருப்பார்.

ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்றால், பாரதிதாசரை விட மிகப் பெரியவர் ஒருவர் மறைக்கப்பட்டிருந் தார். இப்போதுதான் நாம் அவரை வெளிக்கொணர்ந்து விளம்பரப் படுத்திக்கொண்டு இருக்கிறோம். நாம் இந்த அளவுக்கு முயற்சி எடுத்திராவிட்டால் அவர் முற்றிலும் மறைக்கப்பட்டிருப்பார். இப்போது ஒரு சிலராவது நம்

நாட்டில் அவரைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர் யார் எனில், அவர்தாம் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் காலத்திற்குப்பின், இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் அவருக்கு இப்பொழுது இருக்கும் அளவிற்குத் தமிழ் நாட்டில் விளம்பரம் இல்லை. உலகின் பல்வேறு மொழியினர் தத்தம் மொழிகளில் திருவள்ளுவரின் திருக்குறளை மொழிபெயர்த்துக் கொண்டிருப்பினும், வட இந்தியாவில்-மட்டுமன்று தென்னிந்தியாவில் தமிழர்கட்கே திருவள்ளுவர் அறியாப் பொருளாக இருந்தார். ஒரு தோற்றம் ஐம்பது ஆண்டு காலமாகத்தான் நாம் திருக்குறளைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். திருவள்ளுவர்க்கே இந்த நிலை எனில், பாவேந்தர் நிலை என்னாகும்-நாம் விழிப்பா யிராவிடின்.

திருவள்ளுவரினும் சிறந்த ஒரு பொருள் தமிழ்நாட்டில் மறைக்கப்பட்டிருந்தது. இன்னும், சிறுபான்மை வெளியிலே கொண்டு வரப்பட்டிருப்பினும், பெரும்பான்மை மறைக்கப்பட்டேயிருக்கிறது. அந்தப் பொருள் எது எனில், தமிழ் மொழிதான் அது.

தமிழகத்தில் கடந்த சில நூற்றாண்டுகளாகத் தமிழ் எந்தத்துறையிலும் இடம் பெறவில்லை. இந்த நூற்றாண்டில் மானமுள்ள தமிழர்கள் சிலரின் முயற்சியால் தமிழ் ஓரளவு தலைகாட்டிக்கொண் டிருக்கிறது. தமிழுக்கு இன்னும் தமிழகத்தில் உரிய இடம் கிடைக்கவில்லை. இந்த நிலைமையை இப்படியே விடின், மீண்டும் தமிழ் முழு அளவில் மறைக்கப்பட்டுவிடும்.

எனவே, தமிழுக்கே இந்த நிலை எனில், நாம் விளம்பரப்படுத்திக்கொண்டு இருக்காவிடின் பாவேந்தரின்

நிலைமை தமிழுக்கு ஏற்பட்டது போலவே ஆகிவிடும். அதனால், யார் வேண்டுமானாலும்-எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும்-எவ்வளவு வேண்டுமானாலும் பாவேந்தரின் புகழைப் பற்றிப்பேசிக்கொண்டிருப்பார்களாக!-என்று நான் கூறி நிறைவுரையாற்றினேன்.

எனவே, பாவேந்தரைப் பற்றிய பாராட்டு முழக்கம் எங்கும் என்றும் ஒலித்துக்கொண் டிருப்பதாகுக!

# 10

# பாவேந்தரின் இலக்கியப் பணி

இதுகாறும் பாவேந்தரின் வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றைக் கண்டோம். இனி அவர்தம் இலக்கியப் பணி பற்றிப் பார்ப்போம்:-

பொதுவாக இலக்கியம் என்பது பற்றிப் பல கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. இலக்கியச் சிந்தனை, இலக்கிய எண்ணம், இலக்கிய நோக்கு, இலக்கியக் கலை, இலக்கியத் திறன் இலக்கியக் கொள்கை முதலிய பல தலைப்புகள் உடைய நூல்கள் பலரால் ஏராளமாக எழுதப்பட்டுள்ளன. யானும் என் நூல்கள் சிலவற்றுள், இலக்கியம் என்பது பற்றிக் கருத்து தெரிவித்துள்ளேன். ஈண்டு அவற்றை விரிப்பின் பெருகுமாதலின் விடுப்பாம்.

இலக்கியக் கொள்கைகள் - நோக்கங்கள் என்னென்னவோ அவையெல்லாம் அமையப் பாவேந்தர் பல இலக்

கிய நூல்கள் இயற்றியுள்ளார். இலக்கியங்களின் வகைகள் எத்தனை-எத்தனையோ அத்தனை அத்தனை வகைகளி லும் கவிஞர் பல இலக்கிய நூல்கள் எழுதியுள்ளார். அவர் நூல்களின் பட்டியலை இங்கே தரவேண்டியதில்லை.

ஆனால் ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்பு கிறேன். முன்னோர் பாடியுள்ள பாடல்களின் இசை யமைப்பை-மெட்டை ஒட்டி அவர் சில பாடல்கள் இயற்றியுள்ளார். மாதிரிக்காக இங்கே ஒன்று தருகிறேன்.

''வலியோர்சிலர் எளியோர்தமை வதையேபுரி குவதா
மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா''

என்னும் பாடலை எடுத்துக் கொள்வோம். இது, சுந்தர மூர்த்தி நாயனாரின் திருவெண்ணெய் நல்லூர்த் தேவாரப் பாடலாகிய

''பித்தாபிறை சூடிபெரு மானேய்ரு ளாளா''

என்னும் பாவைப் பின்பற்றியதாகும். இது, 'இந்தளம்' என்னும் பண்ணில் பாடப்பட்டதாகும். மற்றும், கம்ப ராமாயணம்-அயோத்தியா காண்டம்-கங்கைப் படலத்தில் உள்ள,

''வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியில் மறைய''

என்னும் பாடலின் அமைப்பும் இன்னதே. இந்தக்கருத்தைக் கவிஞரே என்னிடம் கூறியதாக நினைவிருக்கிறது.

மேலும், திரையோவியப் (சினிமா) பாடலைப் பின் பற்றியும் கவிஞர் பாடலை அமைத்துள்ளார் என்பது ஒரு பாடலால் தெரிகிறது. தமிழ்த்தாய் வாழத்துப் பாடலாகப் புதுவை மாநில அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது

கூட்டங்களில் பாடப்படுகின்ற ''வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே'' என்று தொடங்கும் பாடல், ஏதோ ஒரு திரையோவியத்தில் எம்.கே. தியாகராச பாகவதர் பாடியுள்ள 'பூமியில் மானிட ஜென்மம் எடுத்தே' என்று தொடங்கும் பாடலின் அமைப்பைப் பின்பற்றியதாகத் தெரிகிறது.

கவிஞரின் நூல்கள் சிலவும் பாடல்களாகவே முழுதும் உள்ள 'குயில்' என்னும் இதழும் கவிஞரின் வீட்டிலேயே இருந்த அச்சகத்தில் அச்சானபோது அச்சுப் பிழை திருத்தியவன் நான். கவிஞரின் பல பாடல்களை யான் சுவைத்திருக்கிறேன். வேறு நேரத்திலும் கவிஞரின் பாடல் நூல்கள் சிலவற்றைப் படித்து இன்புற்றிருக்கிறேன். இங்கே, 'ஒரே ஒரு சோறு பதம்' என்னும் முறையில் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும் நய விளக்கம் கூற விரும்புகிறேன்:

1973ஆம் ஆண்டு மே திங்களில், புதுச்சேரியில், கம்பன் கலையரங்கத்தில் நடைபெற்ற மூன்று நாள் கம்பன் விழாவின் ஒரு நாள் தலைமை தாங்கிய அறிஞர் உயர்திரு ச.கு. கோதண்டராமன் தமது தலைமையுரையில் பின்வருமாறு ஒரு கருத்து தெரிவித்தார்:-

வால்மீகி தம் இராமாயண நூலில் இயற்கைக் காட்சிகளைப் புனைந்திருக்கும் அளவு (வருணித்திருக்கும் அளவு)' கம்பர் தம் இராமாயண நூலில் இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைக்கவில்லை. வால்மீகி முனிவர் காட்டின் நடுவிலே வாழ்ந்ததால் இயற்கைக் காட்சிகளை மிகுதியாகப் புனைந்துரைத்துள்ளார். கம்பருக்கு அந்த வாய்ப்பு இல்லாததால், வால்மீகி அளவுக்கு இயற்கைக் காட்சிகளைக் கம்பரால் புனைந்துரைக்க முடியவில்லை என்பதாக ஒரு கருத்து கூறினார். அவர் பேசி முடித்த உடனே யான் எழுந்து பின்வருமாறு பேசினேன்:

காட்டில் வாழ்ந்தால்தான் இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைக்க முடியும் என்பதில்லை; தேவையில்லாமல் இயற்கைக்காட்சிகளைப் புனைந்துரைக்க வேண்டியதில்லை. அளவு மீறிப் புனைந்துரைக்க வேண்டிய தேவை கம்பருக்கு ஏற்படவில்லை. தேவை ஏற்பட்டிருப்பின், கம்பராலும் மிகுதியாக இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரைக்க முடிந்திருக்கும்-என்று யான் கூறினேன். என் கருத்திற்குத் துணை செய்தது பாவேந்தரின் ஒரு பாடலாகும். அதன் விளக்கம் வருமாறு:-

முழு வெண்ணிலா காயும் ஒரு பருவ (பௌர்ணமி) நாள் இரவு நேரம்-ஒரு வெட்ட வெளி. அதில், ஒரு காதல் இணை (ஜோடி) - அதாவது காதலனும் காதலியும் கை கோத்துக்கொண்டு பேசி மகிழ்ந்து சிரித்துக்கொண்டிருந்தனர். இந்தக் காட்சியைக் கவிஞர் கண்டு விட்டார். காதலியினும்காதலன்சிறிது உயரமாக இருக்கிறான். இந்த இன்ப மயக்கத்திலே காதலியின் கூந்தல் சரிந்து கிடக்கிறது. இருவரும் மகிழ்ந்து பேசி நகைக்கும்போது பெண்ணாதலின் காதலியின் சிரிப்புஒலி சிறிதாக இருந்தது; ஆண் ஆதலின் காதலன் ‘கல கல’என உரக்கச் சிரித்தான். இந்தக் காட்சியைக் கண்ட கவிஞர், இதைப் பின்வரும் பாடலாக வடித்துத் தந்துள்ளார்:

“வெட்ட வெளியினில் நாங்கள்–எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்
குட்டைப் பனைமரம் ஒன்றும் - எழில்
கூந்தல் சரிந்ததோர் ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே–இன்ப
வார்த்தைகள் பேசிடும் போது
கட்டுக்கு அடங்கா நகைப்பைப் - பனை
‘கல கல’ என்று கொட்டிற்றே”

என்பது பாடலாகும். இங்கே குட்டைப் பனைமரம்தான் காதலன்; ஈச்ச மரம்தான் காதலி. ஈந்து என்றால் ஈச்ச மரம். பனைமரம் மிகவும் நெட்டையாயிருக்கும். மிகவும் உயரமாய் இருப்பவரைப் பார்த்து, ‘பனைமரம்போல் வளர்ந்து விட்டார்’ என்று கூறுவது உலக வழக்கம். ஆனால் ஈச்ச மரமோ பனைமரம்போல் இன்றி ஓரளவு உயரமே இருக்கும். காதலனும் காதலியும் கை கோத்துக் கொள்ள வேண்டுமெனில், நெட்டைப் பனைமரத்திற்கு ஒத்து வராது. அதனால்தான், ஈச்ச மரத்தோடு கை கோத்துக் கொள்ளக் குட்டைப் பனையால் முடிந்தது. காதலி ஈந்தின் கூந்தல் சரிந்தது எப்படி? பனைமரத்தின் மட்டைகள் நேர்க் கோட்டில் நீட்டிக்கொண்டிருக்கும். நாளாகிய பனை மட்டை இற்று விழும் நிலையில் கீழ் நோக்கித்தொங்குவதை இங்கே எடுத்துக் கொள்ளலாகாது. அடுத்து, ஈச்சமரத்தின் மட்டைகள் எப்போதுமே – இயற்கையாகவே சரிந்த நிலையில் இருக்கும். இந்த இயற்கை நிலைமை, இன்ப மயக்கத்தால் கூந்தல் சரிந்திருக்கும் நிலையை நினைவூட்டுகிறது.

கைகோத்துக்கொள்ளலாவது: குட்டைப்பனைமரமும் ஈந்தும் பக்கத்தில்–பக்கத்தில் நெருங்கியிருப்பதால், பனையின் மட்டைகள் ஈந்தின் மட்டைகளுக்குள்ளும் ஈந்தின் மட்டைகள் பனையின் மட்டைகளுக்குள்ளும் புகுந்து செருகிக்கொண்டிருக்கும் நிலை. இதுதான் கைகோத்துக் கொள்ளுதல் என்பது.

இன்ப வார்த்தைகள் பேசுதல் என்பது, காற்றினால் மட்டைகள் அசையும்போது ஏற்படும் ஒலியாகும்.

காதலி பெண்ணாதலின் அவளது சிரிப்பொலி பெரிதாயில்லை–காதலன் ஆடவ னாதலின் சிரிப்பொலி பெரிதாய்

இருந்தது என்பதாவது:- ஓலை காய்ந்த பனை மட்டை கள் காற்றினால் 'சலசல' என்று பேரொலி எழுப்புவதா கும். 'பனங்காட்டு நரி சல சலப்புக்கு அஞ்சாது' என்னும் பழமொழி ஈண்டு எண்ணத் தக்கதாகும். கட்டுக்கு அடங்கா நகைப்பு என்பது: பனை மட்டைகள் ஓயாது சலசலத்துக் கொண்டிருப்பதாகும். சல சலப்பொலி, கல கல என்று சிரித்தார் என்பதில் குறிப்பிடப்படும் ஒலி யாகும். 'கல கல என்று கொட்டிற்று' என்பது: ஒருவர் அளவு மீறிப் பேரொலியுடன் தொடர்ந்து சிரித்தால், இன்னொருவர் அவரைப் பார்த்து 'போதும் சிரித்தது; நிரம்பக் கொட்டி விடாதே-பல் கொட்டிவிடப் போகிறது' என்று கூறும் உலகியலும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. மேலும், கொட்டுதல் என்பது மிகுதியைக் குறிப்பதற்கு இன்னொரு சான்றும் வருமாறு: தண்ணீரைச் சிந்தினார் -தண்ணீரைத் தெளித்தார் - என்பன, சிறிதளவு தண்ணீ ரையே குறிக்கும். தண்ணீரைக் கொட்டினார் என்பதோ -தண்ணீரின் மிகுதியைக் குறிக்கும். ஏன் - கலத்திலுள்ள தண்ணீர் முழுவதையுமே குறிக்கும். இவ்வளவு சொல் நயங்களும் பொருள் நயங்களும் கவிஞரின் இப்பாடலில் அமைந்திருப்பது, மிகவும் சுவை பயக்கின்ற தன்றோ!

இனிய இந்தப் பாடல், பாரதி தாசனாரின் இரண்டாம் கவிதைத் தொகுப்பில் 'மாவலி புரச் செலவு' என்னும் தலைப்பில் உள்ள பத்துப் பாடல்களுள் ஐந்தாம் பாடலாகும். அந்தப் பத்துப் பாடல்களையும் இங்கே தரின், கவிஞரின் இலக்கியச் சிறப்புக்கு வேறொன்றும் தேவையில்லை. அவ்வளவு சிறந்த கற்பனைகளும் உவமைகளும் தற்குறிப் பேற்றமும் சமுதாயக் கருத்து களும் இன்ன பிறவும் இப்பாடல்களில் பொதிந்துள்ளன. முன்னுரையுடன் அப்பாடல்கள் வருமாறு:

ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் மாலை 4 மணிக்குச் சென்னை - பக்கிங்காம் கால் வாயில் தோணி ஏறி, மறுநாள் காலை 9 மணிக்கு மாவலி புரம் சேர்ந்தோம் நானும் என் தோழர் பலரும். வழிப் போக்கின் இடைநேரம் இனிமையாய்க் கழிந்தது. எனினும் அப்பெருந் தோணியைக் கரையோரமாக ஒரு கயிறு பற்றி ஒருவன் இழுத்துச் சென்றமையும், மற்றோர் ஆள் பின் புறமாக ஒரு நீளக்கழியால் தள்ளிச் சென்றமையும் இரங்கத் தக்க காட்சி. அதையும் ஆங்குக் கண்ணைக் கவர்ந்த மற்றும் சில காட்சிகளையும் விளக்கி அப்போது எழுதியதாகும் இப்பாட்டு.)

1. சென்னையி லேஒரு வாய்க்கால் - புதுச்
 சேரி நகர்வரை நீளும்.
அன்னதில் தோணிகள் ஓடும் - எழில்
 அன்னம் மிதப்பது போல.
என்னருந் தோழரும் நானும் - ஒன்றில்
 ஏறி அமர்ந்திட்ட பின்பு
சென்னையை விட்டது தோணி - பின்பு
 தீவிரப் பட்டது வேகம்.

2. தெற்குத் திசையினை நோக்கி - நாங்கள்
 சென்றிடும் போது விசாலச்
சுற்றுப் புறத்தினில் எங்கும் - வெய்யில்
 தூவிடும் பொன்னொளி கண்டோம்.
நெற்றி வளைத்து முகத்தை - நட்டு
 நீரினை நோக்கியே நாங்கள்
அற்புதம் கண்டு மகிழ்ந்தோம் - புனல்
 அத்தனையும் ஒளி வானம்.

3\. சஞ்சீவி பர்வதச் சாரல் - என்று
சாற்றும் சுவடி திறந்து
சஞ்சார வானிலும் எங்கள் - செவி
தன்னிலும் நற்றமிழ் ஏற்றி
அஞ்சாறு பக்கம் முடித்தார் - மிக்க
ஆசையி னால்ஒரு தோழர்.
செஞ்சுடர் அச்சம யத்தில் - எம்மைச்
செய்ததுதான் மிக்க மோசம்.

('சஞ்சீவி பர்வதச் சாரல்' என்பது கவிஞர் இயற்றிய சிறு காப்பியம்)

4\. மிக்க முரண்கொண்ட மாடு - தலை
மூக்குக் கயிற்றையும் மீறிப்
பக்கம் இருந்திடும் சேற்றில் - ஓடிப்
பாய்ச்சிடப் பட்டதோர் வண்டிச்
சக்கரம் போல்இருள் வானில் - முற்றும்
சாய்ந்தது சூரிய வட்டம்.
புக்க பெருவெளி யெல்லாம் - இருள்
போர்த்தது; போனது தோணி.

5\. வெட்ட வெளியினில் நாங்கள் - எதிர்
வேறொரு காட்சியும் கண்டோம்.
குட்டைப் பனைமரம் ஒன்றும் - எழில்
கூந்தல் சரிந்ததோர் ஈந்தும்
மட்டைக் கரங்கள் பிணைத்தே - இன்ப
வார்த்தைகள் பேசிடும் போது
கட்டுக் கடங்கா நகைப்பைப் - பனை
கலகல என்று கொட் டிற்றே.

6. எட்டிய மட்டும் கிழக்குத் - திசை
ஏற்றிய எங்கள் விழிக்குப்
பட்டது கொஞ்சம் வெளிச்சம் - அன்று
பௌர்ணமி என்பதும் கண்டோம்.
வட்டக் குளிர்மதி எங்கே - என்று
வரவு நோக்கி யிருந்தோம்.
ஒட்டக மேல் அர சன்போல் - மதி
ஓர்மரத் தண்டையில் தோன்றும்.

7. முத்துச் சுடர்முகம் ஏனோ - இன்று
முற்றும் சிவந்தது சொல்வாய்.
இத்தனை கோபம் நிலாவே - உனக்கு
ஏற்றிய தாரென்று கேட்டோம்.
உத்தர மாகஎம் நெஞ்சில் - மதி
ஒன்று புகன்றது கண்டீர்
சித்தம் துடித்தது நாங்கள் - பின்னால்
திரும்பிப் பார்த்திட்ட போது.

8. தோணிக் கயிற்றினை ஓர் ஆள் - இரு
தோள்கொண் டிழுப்பது கண்டோம்.
காணச் சகித்திட வில்லை - அவன்
கரையொடு நடந்திடு கின்றான்.
கோணி முதுகினைக் கையால் - ஒரு
கோல்நுனி யால் மலை போன்ற
தோணியை வேறொரு வன்தான் - தள்ளித்
தொல்லை யுற்றான்பின் புறத்தில்.

9. இந்த உலகினில் யாரும் - நல்
இன்ப மெனும்கரை ஏறல்

சந்தத மும் தொழி லாளர் - புயம்
தரும்துணை யன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை - இதை
இருப துதரம் சொன்னோம்.
சிந்தை களித்த நிலாவும் - முத்துச்
சிந்தொளி சிந்தி உயர்ந்தான்.

10. நீல உடையினைப் போர்த்தே - அங்கு
நின்றிருந் தாள் உயர் விண்ணாள்.
வாலிப வெண்மதி கண்டான் - முத்து
மாலையைக் கையில் இழுத்து
நாலு புறத்திலும் சிந்தி - ஒளி
நட்சத்திரக் குப்பை யாக்கிப்
பாலுடல் மறையக் காலை - நாங்கள்
பலிபு ரக்கரை சேர்ந்தோம்.

(இந்நூலின் முதல் பதிப்பு 1949 ஆம் ஆண்டு வெளி வந்தது.) இப்பாடல்கள் 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' என்னும் பாடலின் அமைப்பு உடையவை. அடுத்து, எனக்கு மிகவும் பிடித்தமான பாவேந்தரின் பாடல்களுள் ஐந்தினைக் கீழே தருகிறேன். இவை பலருக்கும் பிடித்தமானவையாகவே இருக்கக் கூடும். பாடல்கள் வருமாறு:-

1. தமிழ்

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும் கூர் வாளும் போலே
வெண்ணிலாவும் வானும் போலே

வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ
வெண்ணிலாவும் வானும் போலே

வையகமே உய்யுமாறு
வாய்த்த தமிழ் என் அரும்பேறு
துய்யதான சங்கம் என்னும்
தொட்டிலில் வளர்ந்த பிள்ளை
(தம்) கையிலே வேலேந்தி-இந்தக்
கடல் உலகாள் மூவேந்தர்
கருத் தேந்திக் காத்தார்-அந்தக்
கன்னல் தமிழும் நானும் நல்ல
வெண்ணிலாவும் வானும் போலே

## 2. பெற்றோர் ஆவல்

துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா-எமக்கு
இன்பம் சேர்க்க மாட்டாயா?-நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ
அல்லல் நீக்க மாட்டாயா?-கண்ணே
அல்லல் நீக்க மாட்டாயா?

வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க-எம்
வாழ்வில் உணர்வு சேர்க்க-நீ
அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக் காட்ட மாட்டாயா-கண்ணே
ஆடிக் காட்ட மாட்டாயா?

அறமி தென்றும் யாம் மறமி தென்றுமே
அறிகிலாத போது-யாம்-யாம்
அறிகிலாத போது-தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒரு சொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா?-நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா?

புறமி தென்றும்நல் லகம்இ தென்றுமே
புலவர் கண்ட நூலின்-தமிழ்ப்
புலவர் கண்ட நூலின்-நல்
திறமை காட்டி உனை ஈன்ற எம் உயிர்ச்
செல்வம் ஆக மாட்டாயா-தமிழ்ச்
செல்வம் ஆக மாட்டாயா?

## 3. தந்தை பெண்ணுக்கு!

தலைவாரிப் பூச்சூடி உன்னைப்-பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை!
சிலை போல ஏனங்கு நின்றாய்?-நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்!
விலைபோட்டு வாங்கவா முடியும்-?கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி-நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால்-கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு-என்
கண்ணல்ல! அண்டை வீட்டுப் பெண்களோடு!
கடிதாய் இருக்கும் இப்போது-கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது!
கடல் சூழ்ந்த இத்தமிழ்நாடு-பெண்
கல்வி பெண்கல்வி என்கின்ற தன்போடு!

### 4. சங்கநாதம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தாரீர்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!

திங்களொடும் செழும் பரிதி தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்
பிறந்தோம் நாங்கள்–ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம் செய்
முழங்கு சங்கே!

சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராத தீரர் என்று ஊதூது சங்கே!
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள்!
கங்கையைப் போல் காவிரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்
வெங்குருதி தனில்கமழ்ந்து வீரஞ்செய் கின்ற தமிழ்
எங்கள் மூச்சாம் - எங்கள் மூச்சாம்

### 5. இன்பத் தமிழ்

தமிழுக்கும் அமிழ்தென்று பேர்-அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்–இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!

தமிழுக்கு மணமென்று பேர்-இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்-இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்-இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!

தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்-இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்-இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்-இன்பத்
தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ!
தமிழுக்கும் அமிழ்தென்று பேர்!

மேலே காட்டப்பட்டுள்ள பாடல்கட்குப் பொருள் விளக்கம் தேவையில்லை, பாவேந்தரின் படைப்புகளைப் பற்றிப் பலர் பல கோணங்களில் ஆய்ந்து பல நூல்கள் எழுதியுள்ளனர். நான் இந்நூலில் அந்த முயற்சியில் இறங்க வில்லை. பல ஆண்டுகளாகப் பாவேந்தர் பாரதி தாசனா ரோடு நான் கொண்டிருந்த தொடர்பு பற்றியும் அவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சில செய்திகள் பற்றியும் நான் மிக வும் சுவைத்த அவருடைய பாடல்கள் பற்றியும் இந் நூலில் ஒரு சிறிது எழுதியுள்ளேன். வாய்ப்பு நேருங்கால் பெரிய அளவில் பாவேந்தரின் நூல்களைப் பற்றி ஆய்வு செய்து பலருக்கும் அறிவிக்க இருக்கிறேன்.

பாவேந்தரின் புகழும் அதற்குக் காரண மான அவ ருடைய படைப்புகளும் என்றும் நின்று நிலைத்து வாழ்க வாழ்க!

இந்நூலாசிரியரின்

## தமிழ் வாழ்த்துப் பாடல்

தமிழரின் பெருமை சாற்றும்
தனிப்பெருஞ் சான்றாய் நின்றே
இமிழ்கடல் உலக மெங்கும்
இசையினைப் பரப்பி ஓங்கும்
அமிழ்தமே! மக்கட் காக்கும்
ஆருயிர் மருந்தே! தேனே!
தமிழெனும் ஒப்பில் தாயே!
தழைத்துநீ என்றும் வாழி!

— சுந்தர சண்முகனார்

## சுந்தர சண்முகனாரின்
## உழைப்புகளுள் சில:

| | ரூ. கா. |
|---|---|
| தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 30-00 |
| தமிழ் நூல் தொகுப்புக் கலை | 25-00 |
| தமிழ் இலக்கிய பாலம் | 20-00 |
| கெடிலக்கரை நாகரிகம் | 40-00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | 20-00 |
| கெடில வளம் | 10-00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் | 30-00 |
| மரஇனப் பெயர்த் தொகுதி | 200-00 |
| உலகு உய்ய ! | 30-00 |
| பாரதிதாசரொடு பல ஆண்டுகள் | 12-00 |
| History of Tamil Lexicography (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 5-00 |
| திருக்குறள் தெளிவு (முழு உரை) | 10-00 |
| பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது) | 5-00 |